
558
பேசும் படம்
ஆகஸ்ட். 1959.. 75 காசு
வர் பிலிம்ஸ்
ாழ வைத்த தெய்வம்
கஷன்
.திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பா தேவ



ஆகஸ்ட்
வெளியீடு
ஸ்ரீ கலாநிதி பிலிம்ஸ் அளிக்கும்
விநாயக
சதுர்த்தி
N.T. ராமராவ் • ஜமுனு
சூர்யகலா • கும்மிடி
கிருஷ்ணகுமாரி
நாகேஸ்வரராவ் மற்றும் பலர்
வசனம்....S.A.
பாடல்கள்....
சங்கீதம்......... பாமர்த்தி
டைரக்ஷன்...ஸமுத்ராலா
விவரங்களுக்கு:
ஸ்ரீ கலாநிதி பிலிம்ஸ்
11 ராமச்சந்திரா ரோட் • சென்னை-17
PSR


பக்ஷிராஜாவின்
மரகதம்
(கருங்குயில் குன்றத்துக் கொலை)
புரொட்யூஸர் & டைரக்டர்
S.M. ஸ்ரீராமுலு நாயுடு
BAKTHA
விரைவில்
வருகிறது...
MOULIS

F P. Aug '59—1

வருகிறாள்!

சிவகங்கைச் சீமையின் மகாராணி, தமிழ்நாட்டின் ஜான்ஸிராணி

ஸ்புட்னிக் பிக்சர்ஸாரின்

வீரமங்கை

# வேலு நாச்சியார்

புத்தம் புதிய பாத்திரத்திலே
இரத்தம் கொதிக்கும் வீராவேசத்துடன்

**பண்டரிபாய்**

மற்றும் பலர்

நடிப்பது...

கதை, வசனம்:
பிரம்மம்

டைரக்ஷன்:
கே. சோமு

ஸ்புட்னிக் பிக்சர்ஸ் (பி.லிட்)
16, கோட்ஸ் ரோடு., சென்னை. 17..

கலை: R.B.S. மணி. காமிரா: B. துரைராஜ். சங்கீதம்: A.M. ராஜா..

R.B.S.


89693
600 008

படம் 17
காட்சி 12

பேசும் படம்

★ ஆகஸ்ட் 1959 ★

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | செய்திச் சுருள் | ... 4 |
| 2. | போலீஸ் தரும் போதனைப் படம் | ... 8 |
| 3. | காரிருளில் ஒரு கண்காட்சி | ... 12 |
| 4. | கிருஷ்ணகுமாரி | ... 18 |
| 5. | எஸ். வரலக்ஷ்மி | ... 19 |
| 6. | சாவித்திரி | ... 20 |
| 7. | "கலீர் கலி"ரில் ஈ. வி. சரோஜா | ... 21 |
| 8. | "வீரக்கன"வில் கமலா லக்ஷ்மண் | ... 22 |
| 9. | "தெய்வமே துணை"யில் சுந்தரிபாய் | ... 23 |
| 10. | சதர்ன் மூவீஸ் "கேப்டன் ரஞ்சன்" படத்தில் புதுமுகம் எஸ். விமலா | ... 24 |
| | (வர்ணப் போட்டோக்கள்) | ... |
| 11. | ஸ்டண்ட் மாஸ்டர்கள் | ... 25 |
| 12. | இரணியல் ரவி | ... 28 |
| 13. | நாட்டுக்கொரு நல்லவள் (திரைக்கதை, வசனம்) | ... 30 |
| 14. | புதிய வெளியீடுகள் | ... 36 |
| 15. | வெட்டுங்கள் வெட்டுங்கள் | ... 39 |
| 16. | நான் ரசித்த காட்சி | ... 42 |
| 17. | பிரயாண நினைவுகள் | ... 46 |
| 18. | அவள் யார் (படக்காட்சிகள்) | ... 57 |
| 19. | தபால் பெட்டி | ... 66 |
| 20. | நவரச நாடகம் | ... 74 |
| 21. | நாலு வேலி நிலம் (படக்காட்சிகள்) | ... 81 |
| 22. | பாஞ்சாலி ( ,, ) | ... 85 |
| 23. | கேள்வி-பதில் | ... 95 |
| 24. | ஸ்டுடியோ விஜயம் | ... 96 |
| 25. | 'பேசும் படம்' போட்டோ ஆல்பம் | ... 105 |
| 26. | திரை மறைவில் கலை நிபுணர் | ... 114 |

★ SEVENTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM. Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

*Registered as a Newspaper in Ceylon.*

# செய்திச் சுருள்

## வாழவைத்த தெய்வம்

தேவர் பிலிம்ஸார் தயாரித்து இம் மாதம் வெளிவரவிருக்கும் 'வாழ வைத்த தெய்வம்' உள்ளத்தை உருக்கக்கூடிய கதை அமைப்பைக் கொண்டது. கணவனே தெய்வ மெனக் கருதும் மனைவியையும் தாயே தெய்வம் எனக்கொண் டாடும் மகனையும் பற்றிய கதை இது. ஜெமினி கணேசன். டி.எஸ். பாலய்யா, எஸ். வி சுப்பையா, வி.ஆர். ராஜகோபால், பி.சரோஜா தேவி, கண்ணாம்பா, ஜி. சகுந்தலா மற்றும் பலர் நடிக்கும் இப் படத்தை எம் ஏ. திருமுகம் டைரக்ட் செய்துள்ளார். தேவரின் படமல்லவா? வழக்கம்போல் இதில் மிருகச் சண்டைகளும் இடம் பெற் றிருக்கின்றன.

## பொன் விளையும் பூமி

கிராமியச் சூழ்நிலையில் வைத்துப் பின்னப்பட்ட 'பொன் விளையும் பூமி' படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. பீம்சிங் டைரக்ட் செய்யும் இப்படத்தின் பூரண உரிமைகளை எஸ். கே. பிக்சர்ஸார் பெற்றுள்ளனர். ஜெமினி கணேசன் இதில் முற்றிலும் நூதனமானப் பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார். மற்றும் பத்மினி, ராகினி, மற்றும் பல முன்னணி நக்ஷத்திர நடிகர்கள் நடித்து வரும் இந்தப் படத்தை ஓரியண்டல் மூவிஸார் தயாரித்து வருகிறார்கள்.

## பாக்ய தேவதை

'காலம் மாறிப் போச்சு' வெற்றிப் படத்தை அளித்த ஸாரதி பிலிம் ஸார், ஹைதராபாத்திலுள்ள தங்களது சொந்த ஸ்டுடியோவிலிருந்து வெளியிடும் முதல் படம் 'பாக்ய தேவதை'. தாபி சாணக்கியா டைரக்ஷனில் வளர்ந்துள்ள இதில் ஜெமினி கணேசன்-சாவித்திரி இருவரும் பிரதம பாகத்தில் நடித்துள்ளனர். இந்தப் பிரபல நக்ஷத்திர ஜோடியுடன் ராஜசுலோசனா, ரங்காராவ், வி. ஆர். ராஜகோபால் மற்றும் பலர் நடித்துள்ளனர். பொழுது போக்கும் போதனையும் நிறைந்த குடும்பச் சித்திரமாக இது திகழும்.



ஜுபிடரின் "மதுரை மன்னன்" படத்தை காமிரா வை முடுக்கி வைத்து ஆரம்பித்து வைத்தார் ஏஎல். ஸ்ரீநிவாஸன்.

## தூங்காதே தம்பி தூங்காதே

'பொன்னியின் செல்வன்' படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கும் எம். ஜி. ஆர். பிக்சர்ஸார், "தூங்காதே தம்பி தூங்காதே"



மணிமேகலையில் பானுமதி



கொழும்பு ரோஸ்லண்ட் ஏஜன்ஸி உரிமையாளரின் குமாரன் முத்தையாவுக்கும் பம்பாய் ஜயா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் குமாரவேலுவின் மகள் ராஜேஸ்வரிக்கும் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது.

என்ற பெயரில் ஒரு குழந்தைகள் படத்தையும் உடன் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதில் எம். ஜி. ஆர். நடிப்பதுடன், டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்பார்.

சுபாஷ் மூவீஸ் ஸ்தாபனத்தின் பெயரில் தயாராகும். டி. ஆர். ராமச்சந்திரன், சத்தியன், முத்தையா, என். லலிதா, விஜயலட்சுமி முதலியோர் இதில் நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கின்றனர்.

## கண் திறந்தது

கே. வி. ஸ்ரீநிவாஸன் டைரக்ஷனில் நாராயணன் கம்பெனியார் தயாரித்து வரும் சமூகப்படத்திற்கு

## ஆளுக்கொரு வீடு

சிவாஜி பிலிம்ஸில் பணியாற்றி வந்த பி. என். பிள்ளை சொந்தத்தில் தயாரிக்கவிருக்கும் படத்திற்கு ஆளுக்கொரு வீடு' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. சக்தி கிருஷ்ணசாமி கதை வசனம் எழுதியிருக்கும் இப்படம்



ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸின் ''நடமாடும் தெய்வம்'' படத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டவர்கள். 'நடிகர் திலக'த்தின் சகோதரர் வி. சி. ஷண்முகம் காமிராவை முடுக்கி வைத்தார்.



படவுலகில் பல நாளைய அனுபவம் கொண்டவரும் பிரபாத் டாக்கீஸ் மேனேஜருமான கண்ணபிரான் சமீபத்தில் காலமானுர்.

'கண் திறந்தது' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. மைனுவதி, சஹஸ்ரநாமம், என். கருப்பையா மற்றும் பல புதுமுகங்கள் நடித்து வரும் இப்படம் ஜெமினியில் தயாராகி வருகிறது.

## மதுரை மன்னன்

ஜூபிடர் பிக்சர்ஸார் தங்களது மின்னல் தயாரிப்பாக 'மதுரை மன்னன்' என்ற படத்தைத் தயாரித்து வருகிருர்கள் இதற்கான ஆரம்ப பூஜை சென்ற மாதம் நடைபெற்றது. சரித்திரப் பின்னணி கொண்ட கற்பனைச் சித்திரமான இதை சோலைமலை எழுதியிருக்கிருர். பி. சரோஜா தேவி, என் லலிதா, தங்கவேலு, எஸ். ஏ. நடராஜன் முதலியோர் நடிக்கும் இதன் டைரக்ஷனை எவி யெச். நாராயணமூர்த்தி ஏற்றிருக்கிருர்.

## நாக நந்தினி

பி வி. என் புரொடக்ஷன்ஸார் ஏவி எம். மில் தயாரித்து வரும் படத்திற்கு 'நாக நந்தினி' என்று பெயர் வைத்திருக்கிருர்கள். டி. ஆர். ரகுநாத் டைரக்ஷனில் வளரும் இப்படத்தின் கதை, வசனங்களை ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிருர்.

## களத்தூர் கண்ணம்மா

ஏவி. எம். ஸ்டுடியோவில் சென்ற மாதம் மற்ருெரு புதுப் படத்திற்கான ஆரம்ப விழா நடைபெற்றிருக்கிறது. 'களத்தூர் கண்ணம்மா' என்ற இப்படத்தின் கதை, வசனங்களை ஜாவர் சீதாராமன் அமைத்திருக்கிருர். ஜெமினி கணேசன்


காஷ்மீர்-குளூம்

சேவல்

மார்க்

ஸான்டலக்ஸ்

நஞ்சன்கூடு பல்பொடி

மற்றும்

வைத்தியர் உதவி விரும்பினால் எழுதியும் சிகிச்சை பெறலாம்.

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

சாவித்திரி ஜோடியுடன், டி. எஸ். பாலய்யா, வி ஆர். ராஜகோபால், டெய்சி இரானி மற்றும் பலர் இதில் நடிக்கிருர்கள். டி. பிரகாஷ்ராவ் டைரக்ஷனில் இக்கிராமியச் சித்திரம் உருவாகி வருகிறது.

## அசோசியேடட்டின் படம்

ஏ. நாகேஸ்வரராவ் - அஞ்சலி தேவி பிரதம பாகத்தில் நடிக்கும் குடும்பச் சித்திரத்தை அசோசியேடட் புரொட்யூசர்ஸார் தமிழில் தயாரித்து வருகிருர்கள். முரசொலி மாறன் வசனம் அமைத்துள்ள இதன் டைரக்ஷன் பொறுப்பை யோகானந்த் ஏற்றுள்ளார்.

## டாக்டர்

கதாசிரியர், டைரக்டர் ஏ. கே. வேலன் 'டாக்டர்' என்ற சமூகப் படத்தை, அருணுசலம் பிக்சர்ஸ் என்ற தனது சொந்த ஸ்டுடியோவில் தயாரித்து வருகிருர். 'வளையாபதி' முத்துகிருஷ்ணன், 'சௌகார்' ஜானகி இருவரும் இதன் பிரதம பாகத்தில் நடித்து வருகிருர்கள். இப்படம் விரைவில் வெளிவரவிருக்கிறது.

## மெஜஸ்டிக்கின் அடுத்தது

'நாட்டுக்கொரு நல்லவள்' படத்தை வெளியிட்டிருக்கும் மெஜஸ்டிக் பிக்சர்ஸார் அடுத்து ஒரு கிராமியக் கதையைப் படமாக்கப் போகிருர்கள். இதன் கதையை சாண்டில்யன் எழுதியுள்ளார்.

## ஏவி. எம். பயணமானுர்

ஏவி. எம். ஸ்டுடியோ அதிபரான ஏ. வி. மெய்யப்பன் உலகச் சுற்றுப் பிரயாணமொன்றை வகுத்துக் கொண்டு, சென்ற மாத மத்தியில் சென்னையிலிருந்து கிளம்பிப் போயிருக்கிருர். ஹாங்காங், ஜப்பான், ஹொனலூலு வழியாக தற்போது அமெரிக்காவில் சென்று தங்கியுள்ள அவர், மேனுட்டுப் படத்தொழில் நுணுக்க முறைகளை அறிந்து வருவார். மேனு திரும்பியதும் அவரது இப்பயண அனுபவம் ஏவி. எம். முத்திரையில் வரும் எதிர்காலப் படங்களில் பளிச்சிட்டுப் பிரகாசிக்கும் என்று திடமாக நாம் நம்பலாம்.





# போலீஸ் தரும் போதனைப்

பண்பு மிக்க பாரத நாட்டிலே தமிழ் நாடு தான் பல துறைகளில் முன்னேடியாக இருந்து வருகிறது. அரசியல், கலை மற்றெல்லாத் துறைகளிலும் தமிழகத்தின் பங்கு தனிச் சிறப்பைப் பெற்றுத்தான் வருகிறது. இதே போல் தான் சென்னை மாகாண போலீஸ் இலாக்காவும் தனிச் சிறப்பு பெற்று வருகிறது.

இன்றைய தினம் மற்றெல்லா மாகாணங்களையும் விட, சென்னை போலீஸ் இலாக்காவின் திறமையும் சேவையும் சிறந்து விளங்குகிறது என்று பல முறை எடுத்துக் காட்டப்பட்டு வந்திருக்கிறது.

தற்போதும் சென்னை போலீஸ் காவற்படை ஒரு மகத்தான சாதனையைச் செய்யப் போகிறது. அதன் மூலம் இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களுக்கும் வழிகாட்டியாக அது விளங்கப் போகிறது.

இதைக் குறித்து தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் பெருமைப்படலாம்.

அப்படி என்ன அவர்கள் செய்யப் போகிறார்கள் என்று கேட்கிறீர்களல்லவா?

வரப்போகும் ஆகஸ்டு இறுதியில் சென்னை போலீஸ் காவற்படையின் நூற்றாண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதற்காக சென்னை போலீசார் சுமார் மூவாயிரம் அடி நீளத்தில் ஒரு அருமையான திரைப்படம் தயாரிக்கிறார்கள்.



'போலீசார் பொது மக்களின் அன்பர்' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, போலீசார்-பொது மக்கள் உறவு குறித்து விளக்கும் வகையில், இப்படம்

# படம்...



தயாரிக்கப்படுகிறது. இதில் புகழ் பெற்ற திரை உலக நட்சத்திரங்களும் சென்னை போலீஸ் அதிகாரிகளும் நடிக்கின்றனர். போலீசாரின் பொது நலப் பணியை விளக்கும் இம்மாதிரிப் படம் தயாரிப்பது இந்தியாவிலேயே இது தான் முதல்தடவையாகும். ஆகஸ்டு 31-ம் தேதி பொதுமக்களுக்கு இது இலவசமாகத் திரையிடப்படும்.

இப்படத்தில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், டி. எஸ். பாலையா, தங்கவேலு, சந்திரபாபு, சாரங்கபாணி, வி. ஆர். இராஜகோபால், இராமசாமி, லட்சுமி நாராயணன், நாகய்யா, நம்பிராஜன் முதலியோரும் நடிகைகள் பத்மினி, எம். என். ராஜம், பி. சரோஜாதேவி, தேவிகா, எம். சரோஜா மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

இப்படத்திற்கான கதை-வசனத்தை சென்னை நகரப் போக்கு-வரத்துத் துணைக் கமிஷனர் பொ. பரமகுரு எழுதியுள்ளார். திரையுலகில் பெரும்



இன்ஸ்பெக்டர் மஜீத் பாலையா, தங்கவேலு வி. ஆர். ராஜகோபால், தேவிகா இப்படித் தோன்றுகின்றனர்-ஒரு காட்சியில்.



புகழ் படைத்த இரட்டையர்களான கிருஷ்ணன்-பஞ்சு இதை டைரக்ட் செய்கிறார்கள். ஏவி. எம். ஸ்டுடியோவின் ஒளிப்பதிவாளரான மாருதிராவ் இதனைப் படமாக்குகிறார்.

போலிசார் என்றாலே 'நாம் பயப்படக்கூடியவர்கள்; ஈவு இரக்கமற்றவர்கள்; சட்டத்தின் துணைகொண்டு அட்டகாசம் புரியும் அநியாயக்காரர்கள்' என்றெல்லாம் பொதுமக்களின் இடையே தவறான கருத்துக்களை பரவ விட்டிருக்கிறார்கள் சிலர்.

ஆனால் போலீஸ் இல்லாத ஒரு நகரத்தை நினைத்துப் பாருங்கள்!

சட்டத்தை அங்கே எப்படி அமல் நடத்த முடியும்?

பொதுமக்களின் உடமைக்கும் உயிருக்கும் உத்திரவாதமாக நிற்பவர் யார் அங்கே?

போலீஸார் இல்லாத நகரம் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ள நாம் மேலே கூறியுள்ள இரண்டு உதாரணங்களே போதும் என்று நினைக்கிறோம். எனவே போலீஸாரின் பணி பொதுமக்களுக்கு எவ்வளவு இன்றி

---

(மேலிருந்து கீழ்) 1. நடிகை எம். சரோஜாவும், சிரிப்பு நடிகர் தங்கவேலுவும் தங்கள் பாகத்தை எதிர்பார்த்துள்ளார்கள். 2. காமெடியன் ராஜகோபால், தங்கவேலு, துணைக்கமிஷனர் பரமகுரு, காமிரா மாருதிராவ், டைரக்டர் பஞ்சு, பாலய்யா, தேவிகா படப்பிடிப்பின் முடிவில் மகிழ்வுடன் நிற்கின்றனர். 3. எழும்பூர் ரயில் நிலையத்திற்கு முன்பாக நடந்த படப்பிடிப்பின்போது வந்த கமிஷனர் ஆர். எம். மகாதேவனை சிரிப்பு நடிகர் தங்கவேலு வரவேற்கிறார். அருகில் இருப்பவர் ஒலிப்பதிவாளர்



யமையாதது என்பதை எல்லோருக்கும் உணர்த்தும் வகையில் இந்தப்படம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இது முதலில் தமிழில் தயாரிக்கப்பட்டு, பின்னர் இந்தியில் பதிவு செய்யப்படும். 16 மி. மீ அளவில் இதனைக் குறைத்துக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்களுக்குத் திரையிட்டுக் காட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் இதற்கான சில காட்சிகள் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு முன்பாகவும் ஏவி. எம். ஸ்டுடியோவிலும் படமாக்கப்பட்டன. அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை நீங்கள் இங்கே காண்கிறீர்கள்.

போலீசார் தயாரித்து வெளியிடப்போகும் இப்படத்திற்கு பொதுமக்களின் அமோகமான ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று நம்பலாம்.

---

ராமனுதன். 4. படப்பிடிப்பிற்கான இடத்தைப் பார்த்து நிற்கின்றனர் நடிகர்கள் தங்கவேலு, சந்திரபாபு, காமிராமாருதிராவ், துணைக்கமிஷனர் பரமகுரு, டைரக்டர் பஞ்சு. 5. படத்தின் வசனகர்த்தாவான துணைக்கமிஷனர் பரமகுருவும் நடிகர் சந்திரபாபுவும் 6. பிக்பாக்கெட் சைக்கிள் திருடனாக நடிக்கும் லட்சுமிநாராயணன்.












# காரிருளில் ஒரு கண்காட்சி

வானவில்லின் எழிலைக் காட்டும் வண்ண விளக்குகளை வாரி இறைத்து, பகட்டுக்கு அடிமையாக்கி, பார்ப்பவரைத் தன் வசம் கவர்ந்திழுக்கும் 'காந்த' சக்தி வாய்ந்த கண்காட்சிகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் காரிருளில் ஒரு அற்புதக் கண்காட்சியைக் கண்டதாக இதுவரை நம்மிடம் எவரும் சொன்னதில்லை அத்தகைய ஒரு கண்காட்சியைப் பற்றி டைரக்டர் கே. சுப்ரமண்யம் நமக்கு இப்பேசது சொல்லப் போகிறார்.

இந்தக் கண்காட்சிக்கு வண்ண விளக்குகள் தேவையில்லை; "வா... வா" என்று விதியில் செல்வோரை வரவேற்க விளம்பரமும் தேவையில்லை! சொல்லப் போனால் இந்தக் கண்காட்சிக்குள் செல்ல பொதுவாக அனுமதி கிடைப்பதே கஷ்டம். அதுவும் சாதாரண கஷ்டமல்ல; கவுடத்தின் உச்சிக்கே போய்விட வேண்டியதுதான்!

இந்த அபூர்வக் கண்காட்சி லண்டன் மாநகரில் இருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் லண்டனிலிருந்து இருபத்திரண்டு மைல்கள் தள்ளியுள்ள ஹாரோ என்னுமிடத்தில் இருக்கிறது. அங்குள்ள கச்சா பிலிம் உற்பத்தி செய்யும் கோடக் ஸ்தாபனத்தைத்தான் 'காரிருளில் ஒரு கண்காட்சி' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

'இந்தத் தலைப்பு இதற்கு எப்படிப் பொருந்தும்?' என்று சிலர் கேட்கலாம்.

கச்சா பிலிம் செய்வதற்கு தேவைப்படும் மூலப் பொருள்களுடன், முழுக்க முழுக்க இருள் நிரம்பிய பிரதேசம்தான் தேவைப்படுகிறது. இந்த இருண்ட பிரதேசத்தில்தான் ஒவ்வொரு பகுதியாக மூலப்பொருள்கள் சென்று, படிப்படியாக அபிவிருத்தி அடைந்து, முடிவில் கச்சா பிலிமாக வெளிவருகின்றன.

ஹாரோவிலுள்ள கோடக்கச்சா பிலிம் தொழிற்சாலையில் வரவேற்பு அறை, நிர்வாகக் காரியாலயம் உள்ள இடம், பெட்டிகளில் அடைக்கப்பட்ட பிலிம்கள் ஏற்றுமதிக்கு வரும் இடம் இவை தவிர, தொழிற்சாலையில் மற்ற இடம் பூராவிலும் இருள்தான் மண்டிக் கிடக்கிறது. இங்கேதான் ஏனைய வேலைகள் பூராவும் செய்யப்படுகின்றன.

இந்தியாவிலிருந்து டைரக்டர் சுப்ரமண்யமும், அவரது கோஷ்டியினரும் தங்கள் ஸ்தாபனத்திற்கு வரப்போவதாக அறிந்ததுமே ஒரு மலர்ச்செண்டை தயாரித்து விட்டார் - தொழிற்சாலையின் பிரதம நிர்வாகியான திரு. பவர்.

அவரும், இந்த ஸ்தாபனத்தின் டைரக்டர்களுள் ஒருவருமான திரு. கிரேக் இருவரும் சுப்ரமண்யத்தையும் அவரது கோஷ்டியினரையும் மலர்ச்செண்டைக் கொடுத்து வரவேற்றனர். அதன் பின்னர் அவர்கள் இத்தொழிற்சாலையின் ஒவ்வொரு பிரிவுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

தொழிற்சாலைக்குள் நுழைவதற்கு முன்பாக அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு நைலான் தொப்பியும், ஓவர் கோட்டும் கொடுக்கப் பட்டன. தொழிற்சாலைக்குள் இவை இல்லாமல் யாரும் நுழையக்கூடாது. சுத்தத்திற்காக இவை அணியப்படுகின்றன. ''தூய்மையின் எல்லையை இங்குள்ள ஒவ்வொரு இடத்திலும் கண்டேன்'' என்றார் சுப்ரமண்யம்.

ஹாரோவிலுள்ள இத் தொழிற்சாலையில் எக்ஸ்-ரே பிலிம்கள், புகைப்படம் எடுப்பதற்கான பிலிம்கள், சினிமாப் படம் பிடிக்க தேவையான பிலிம்கள், மற்றும் வர்ணப் படம் மெடுக்க உதவும் பிலிம்கள் அனைத்தும் செய்யப்படுகின்றன.

சுமார் பத்தாயிரம் பேர்கள் வேலை செய்யும் இந்தத் தொழிற்சாலையில் முக்காலுக்கு மேற்பட்ட வேலைகள் இருள் சூழ்ந்த பிரதேசத்தில்தான் செய்யப்படுகின்றன. இந்தப் பதினாயிரம் பேர்களில் ஆறாயிரத்து நானூறு பேர்கள் இருளில்தான் பணியாற்றுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களே!

சிறு குழந்தைகள் ஒன்றன் சட்டையை ஒன்று பின்புறமாகப் பிடித்துக் கொண்டு ரயில் விளையாட்டு விளையாடுவதைப் பார்த்திருக்கிறோமல்லவா? அதைப்போலத்



தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கிறார்கள்.



தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு பிலிம் சுருளையின் விவரங்களும் இங்கு உள்ளன. ஒரு பிலிம் சுருளையை எடுத்துக் காட்டுகிறார் தொழிற்சாலை நிபுணர் சுப்பிரமண்யத்திடம்.

தான் இங்கும் ஒருவர் பின் ஒருவராகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இங்குள்ள தொழிலாளர்கள் நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் தான் வேலை பார்க்கிறார்கள். தவிர, ஒரு வருஷம் கழிந்ததும், சம்பளத்தோடு ஆறு மாதகாலம் அவர்களுக்கு விடுமுறை தந்து அனுப்பி விடுகிறார்கள். இது அங்கு கட்டாயமாக அமல் நடத்தப்படுகிறது!

பூரா பூராவும் இருளிலேயே வேலை செய்யும் அவர்களுக்கு இப்படிக் கொடுக்க வேண்டியது அவசியம். சுகாதார-அடிப்படையிலும் இது முக்கியமெனக் கருதப்படுகிறது. இது தவிர பிரதி சனி-ஞாயிறு இரு நாட்களும் இங்கு விடுமுறை நாட்களாகக் கருதப்படுகின்றன.

ஆங்கிலேயரான ஜார்ஜ் ஈஸ்ட்மென் என்பவர் கச்சாபிலிம் செய்யும் முறையைக் கண்டு பிடித்து, இங்குள்ள சிறு வீட்டில் இத்தொழிற்சாலையை ஆரம்பித்தார். சுமார் ஏழுரை ஏக்கரா நிலத்தில் அன்று தோன்றிய இத்தொழிற்சாலை இன்று உலகின் மிகப் பெரிய கச்சா பிலிம் உற்பத்திச் சாலையாகத் திகழ்ந்து வருகிறது.

ஈஸ்ட்மென் நிர்மாணித்த அந்த வீட்டைச் சுற்றித்தான் இன்று இத்தொழிற்சாலை கட்டப்பட்டிருக்கிறது. தொழிற்சாலையின் நெடுகே

பல தெருக்கள் இருக்கின்றன. கார் ஓடும் வீதிகள் இவை. இங்கு வேலை பார்ப்பவர்களில் ஏழாயிரம் பேர்களுக்கு சொந்தத்தில் கார் இருக்கிறது. கார்களை நிறுத்த நான்கு இடங்கள் உள்ளன.

இத் தொழிற்சாலையில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் இருக்கிறது. ஒவ்வொரு தினமும் இங்கு ஏதேனும் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. நடனமோ—நாடகமோ ஏதாவதொன்று நடைபெறத் தவறுவில்லை. இதற்காக ஒரு தனி கொட்டகையே இருக்கிறது. இதேபோல் சினிமாக் காட்டவும் ஒரு தியேட்டர் இருக்கிறது.

இங்குள்ள தொழிற்சாலை முதலாளி—தொழிலாளி கூட்டு வியாபாரத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. இத் தொழிற்சாலையின் நிர்வாகப் பொறுப்பிலும், லாபத்திலும் பங்கு கொள்ள — தொழிலாளர்களுக்குப் பிரதிநித்துவம் கொடுக்கப் பட்டுள்ளன.

தொழிற்சாலையின் பல்வேறு பிரிவில் வேலைபார்க்கும் தொழிலாளிகள்—வேலை செய்யும் போதோ, அல்லது தங்களது அனுபவம் காரணமாகவோ ஏதேனும் புதிய யுக்திகளையோ, அல்லது புதிய கண்டு பிடிப்புகளையோ சொல்ல இடமிருக்கிறதல்லவா? இதற்காக அவ்வப்போது விசேஷக் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இதில் தொழிற்சாலையிலுள்ள அனைவரும் கலந்துகொள்கிறார்கள். அங்கு அவரவர்கள் தங்களுக்குத் தோன்றியதை எடுத்துச் சொல்லுகிறார்கள். புதிதாக யாரேனும் கண்டு பிடித்துச் சொன்னால் அவர்களுக்கு விசேஷப் பரிசுகளும் பாராட்டும் கொடுக்கப்படுகின்றன. இவ்விதம் நாளுக்கு நாள் புதுமையையும் அபிவிருத்தியையும் தங்கள் தொழிற்சாலையில் நிலவ விட்டு விடுகிறார்கள்.

இங்கு தயாரிக்கப்படும் ஒவ்வொன்றும் கடுமையான பல சோதனைகளுக் குள்ளாக்கப்பட்ட பின்னரே விற்பனைக்கு அனுப்படுகின்றன. குறிப்பாக வண்ணப் பிலிம்கள் உள்ளாக்கப்படும் சோதனைகள் சொல்லத்தரமன்று. நாளொன்றுக்கு சுமார் இருபதாயிரம் அடி வண்ணப்பிலிம்கள் இங்கு விணைக்கப்படுகின்றன.

இங்கு தயாரித்து, விற்பனைக்கு வெளியே அனுப்பப்படும் ஒவ்வொரு பிலிம் சுருளைக்கும் - அவற்றின் மாதிரித் துண்டுகள் எடுத்து வைக்கப்பட்டு, அவற்றைப்பற்றிய இதர குறிப்புகளும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உலகின் எந்த மூலைக்கு இந்தப் பிலிம் சுருளை சென்றாலும், அது பற்றிய விவரம் தேவையானால் இக் குறிப்புகள் சொல்லிவிடும்.

இவ்வளவு பெரிய தொழிற்சாலையில்—இதுவரை இருளிலேயே பார்த்ததற்குப் பரிகாரமாகவோ என்னவோ—நல்ல வெளிச்சம் கொண்ட இடத்தில் ஒரு கண் காட்சியையும் வைத்திருக்கிறார்கள்!

இருளிலே ஒரு கண்காட்சி! ஒளி வெள்ளத்தில் மற்றொன்று வெளிச்சம் சூழ்ந்த இக்கண்காட்சியை 'கோடக் மியூசியம்' என்று அழைக்கிறார்கள். இங்கே 1890-ல் ஈஸ்ட்மென் கண்டு பிடித்தது முதல் இன்று வரை கோடக் ஸ்தாபனம் செய்துள்ள காமிரா. மற்றும் புகைப்படக் கலை சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

டைரக்டர் சுப்ரமண்யம் கோடக் தொழிற்சாலையைப் பார்வையிட்டு வந்ததோடு நிற்கவில்லை. இங்குள்ள நிர்வாகிகளுக்கும் இந்திய சர்க்காருக்கும் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடந்து, இந்தியாவில் கச்சா பிலிம் தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சி நடைபெறவும் வழிகோலி வந்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல் சுப்ரமண்யம் லண்டன் பி.பி.ஸி.யில் ஒரு பிரத்யேக பேட்டியிலும் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியச் சினிமாப் படத் தொழில் வளர்ச்சிக்கு கோடக்



தொழிற்சாலையில் விருந்தும் தரப்பட்டது.

ஸ்தாபனம் பெரிதும் உதவி யிருக்கிறது. மௌனப்படங்கள் தயாராகி வந்த காலத்தில் உங்கள் கோடக் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு குருபே என்பவர் இந்தியாவுக்கு வந்து பல வகைகளில் உதவியிருக்கிறார். மௌனப்பட காலத்திலிருந்தே—இந்தியாவில் படத்தொழில் ஆரம்பமான நாளிலிருந்தே கோடக் ஸ்தாபனமும் எங்கள் படத்தொழில் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது'' என்று பி.பி. ஸி யில் கூறியிருக்கிறார் சுப்ரமண்யம்.

இந்தியாவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் கச்சா பிலிம் தொழிற்சாலைப் பற்றியும் டைரக்டர் கே சுபரமண்யம் இந்திய சர்க்காரிடம் ஒரு முக்கியமான யோசனையைக் கூற விரும்புகிறார்.

இந்தியாவில் ஏற்படுத்தவிருக்கும் இத்தொழிற்சாலை ஆறு கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது முழுக்க முழுக்க கருப்பும் வெளுப்புமான- சாதாரண பிலிம்களை மட்டுமே தயாரிக்கும். வண்ணப்பட பிலிம்கள் இதில் தயாராகாது. சுமார் ஐந்து வருடங்களுக்குப் பிறகே பிலிம்கள் உபயோகத்திற்குக் கிடைக்கும்.

உலகத்தில் இப்போது வர்ணப்பட ஆதிக்கம்தான் அதிகரித்து வருகிறது. சாதாரணப் படங்கள் தயாரிப்பதில் உள்ள மௌசும் குறைந்து வருகிறது. இப்போதே இந்நிலை இருக்கும்போது ஐந்து வருஷங்களுக்குப் பிறகு சாதாரண படங்களுக்கு உள்ள ஆதரவு எப்படி இருக்குமோ தெரியாது. ஆனல் அப்போதுதான் நம் நாட்டில் சாதாரண பிலிம்கள் தயாராகத் தொடங்கும். இது, நம் நாட்டை மிகவும் பின் தங்கிய நிலையில் வைத்துவிடும்.

இதைத் தவிர்க்க வேண்டுமானல்—முதலீட்டுத் தொகை அதிகமானலும்—கச்சா பிலிம் தொழிற்சாலையை நம் நாட்டில் ஏற்படுத்தும்போது வண்ணப் படங்கள் தயாரிக்கும் கச்சா பிலிம்களையும் உற்பத்தி செய்யும் வகையில் அமைக்க வேண்டும்.

இதைத்தான் சுப்ரமண்யம் சர்க்காரிடம் வலியுறுத்த விரும்புகிறார்.



நாளொரு மேனியாக...
சரும
அழகினை
ஓங்கச்
செய்வது
ரெக்ஸோனு
சோப்
ரெக்ஸோனுவில் 'கேடில்' என்ற
விசேஷப் பொருள் அடங்கியுள்ளது.
எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள்
இணைந்த விசேஷத் தைலமே 'கேடில்'
என்பது.
எண்ணெய்கள்
உங்கள் சருமத்திற்கு
மளிப்பவை.
உங்கள் எழிலுக்கு ...
ரெக்ஸோனு
Rexona
BLENDED WITH CADYL
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனு ப்ரொ.
லிமிடெட் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால்
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.









நாடோடிப் பெண்ணைப்போல இ. வி. சரோஜா இப்படித் தோன்றுவது இந்திரா பிலிம்ஸ் 'கலீர் கலீர்' படத்திற்காக.



பி. எஸ். வி. பிக்சர்ஸ் “வீரக்கன”லில் கமலா லக்ஷ்மணன்



எஸ். பி. எஸ். பிக்சர்ஸ் 'தெய்வமே துணை'யில் சுந்தரிபாய்



சந்தர்ன் மூவிஸ் தயாரித்து வரும் 'கேப்டன் ரஞ்சன்'
என்ற படத்தில் புதுமுகம் எஸ். விமலா.







படவுலகில் சண்டைக் காட்சிகளுக்கு உயிர் கொடுத்தவர்கள் ஓரிருவர்தான். ஸ்டண்ட் காட்சிகளுக்குப் பிரதானமின்றி பாடலும், நகைச்சுவையும், வசனமும் காட்சியமைப்பும் பிரபலமாகி 'மவுசு' பெற்றிருந்த அந்தக் காலத்தில் இந்த ஸ்டண்ட் மாஸ்டர்கள் பயிற்சி பெற்று, படவுலகில் புரட்சி செய்து ஸ்டண்ட் காட்சிகளுக்குப் பிரதான்யம் ஏற்படச் செய்தார்கள். ஸ்டண்ட் சோமு! இவர் மூலம்தான் ஸ்டண்ட் காட்சிகளுக்கு மவுசு ஏற்பட்டது எனலாம். ஜெமினி 'சந்திரலேகா' சாட்சி சொல்லுமே! சோமுவுடன் பணியாற்றி அந்தக் கலைக்காக உழைத்தவரான ஸ்டண்ட் மணிதான் இவ்விதழில் ரசிகர்களுக்கு அறிமுகமாகிறார்.

இந்த மணிக்குப் படவுலகில் சுமார் இருபத்தைந்து வருஷ அனுபவமுண்டு. கவிரத்ன காளிதாஸ், வாயாடி போலிப் பாஞ்சாலி, திருவள்ளுவர், கம்பர் முதலிய அந்தக் கால படங்களில் சிறு வேடங்களேற்று நடித்தார் மணி. அப்போது ஒரு நாள் கூலி ஆறு அணா கிடைக்கும். அது கிடைத்தால் பசியும் பறக்கும்.

மணி நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர். நெசவுத் தொழிலில் அவருக்கு நல்ல தேர்ச்சி உண்டு.

சினிமாவில் அவருக்குப் பிடித்தது ஸ்டண்ட் காட்சிகள்தான். ஆனால் ஆங்கிலப் படங்களைப்




# 'ஸ்டண்ட் மாஸ்டர்கள்'
# ஸ்டண்ட் மணி

போல் தமிழ்ப்படங்களில் ஸ்டண்ட் காட்சிகள் அமையாதது கண்டு, தானாக ஏதாவது செய்யத் தீர்மானித்தார். சிலம்பப் பயிற்சிக்கு ஒரு ஊர், கத்திச் சண்டைக்கு மற்றொரு ஊர் என்று எல்லாவித சண்டைகளையும் கற்கப் பல ஊர்களுக்குச் சென்று கற்றார். அந்தந்த ஊரில் குறிப்பிட்ட சண்டையைக் கற்பார். நெசவுத் தொழிலும் செய்து செலவுக்குப் பணம் சம்பாதிப்பார்.

பல வருஷம் சிரமப்பட்டு எல்லா வித ஸ்டண்ட் வேலைகளும் தெரிந்தவராகச் சென்னை திரும்பினார் மணி. அப்போது ஜெமினியில் ஸ்டண்ட் சோமு பணியாற்றிப் பெரும் புகழும் பெற்று வந்தார். மணி சோமுவுடன் சேர்ந்தார். சோமுவின் சொற்படி மணி ஸ்டண்ட் காட்சிகளை அமைப்பார். மணியின் யோசனைகளைக் கேட்டு சோமுவும் மணியின் பொறுப்பில் சில ஸ்டண்ட் காட்சிகளை விட்டுவிடுவார். சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள் முதலியவற்றிற்கு மணி ஸ்டண்ட் காட்சிகளில் சிரமப்பட்டிருக்கிறார். இவை தவிர இதய கீதம், சொப்பனசுந்தரி, மாயக்காரி, பரமானந்தய்ய சிஷ்யிலு, வனசுந்தரி, ராஜ விக்ரமா, மனிதனும் மிருகமும், துளிவிஷம், பத்தினித் தெய்வம், சௌபாக்கியவதி, மங்கள கௌரி, ஜெனோவா, ராஜாம்பாள், (சேத்தூர் ஜமீன்தாரின்) பாசவலை, கேரள கேசரி, ஜெய சிம்ஹா, குமாரி, சிவகெங்கைச்சீமை முதலிய



'சௌபாக்கியவதி' படத்தின்போது செட்டில் எடுத்த படம். தாடியுடனிருப்பவர்தான் ஸ்டண்ட் மணி.

யவற்றில் மணி ஸ்டண்ட் காட்சிகளில் பெரிதும் பாடுபட்டிருக்கிறார்.

1951-ல் மணி அதிக வேலை இல்லை என்பதற்காக கர்ஸன் ரம்ப மில்லில் வேலைக்கமர்ந்தார். அங்கே அவரது கைவிரல்களில் நான்கு துண்டிக்கப்பட்டன. காலஞ்சென்ற கலைவாணர் மணிக்குப் பெரிதும் உதவியதுடன் மற்ற கலைஞர்களிடம் உதவிபெறவும் வகை செய்தார்.

மணியின் கைவிரல்கள் போய் விட்டனவே, கத்திபிடித்துச் சண்டை செய்து காட்ட அவரால் எப்படி முடியும், என்று எதிர்பார்த்தவர்கள் திகைக்கும்படி பல அற்புத வேலைகளைச் செய்து காட்டி யாவரையும் பிரமிக்கச் செய்தார் அவர். யாராவது இப்படிக் குறிப்பிடா விட்டால் அவருக்கு விரல்கள் இல்லை என்பது தெரியவே தெரியாது. அப்போது மாடர்ன் பிக்சர்ஸார் 'மஞ்சுளா' என்ற படத்தைத் தயாரிக்க ஆரம்பித்தனர். மணி அதன் ஸ்டண்ட் மாஸ்டராகப் பணியாற்றினார். ஆனால் படம் முடியவில்லை.

ரேவதி ஸ்டுடியோ ஆரம்பமானபோது மணி அதில் டைம்கீப்பராகவும் ஸ்டண்ட் மாஸ்டராகவும் பணியாற்றினார். தோழன், மனிதனும் மிருகமும், மேதாவிகள், டாக்டர் சாவித்திரி, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, கனவு, அதிகாரி முதலியவற்றில் சிறு வேஷங்களில் நடிக்கவும் செய்தார் மணி. மஹாவிர. பிரதாப், இந்து பைரவி ஆகிய கன்னடப் படங்களில் ஸ்டண்ட் ஆசிரியராகப் பணியாற்றினார் மணி.

தற்போது திரையிட விருக்கும் தோழன், மங்கையர் உலகம் படங்களில் மணியின் ஸ்டண்ட் வேலைகளைக் காணலாம். அவர் சுகிபவா புரொடக்ஷன்ஸ் "சபரி"யின் ஸ்டண்ட் ஆசிரியராகப் பணியாற்றுவதுடன், அபலை அஞ்சுகம் படத்தில் நடிக்கவும் செய்கிறார்.

சென்னை சைதாப்பேட்டையில் வாழும் நெசவாளர் பரம்பரையில் பொன்னம்பலம்—நீலாம்பாள் தம்பதிகளின் ஐந்து குழந்தைகளில் நான்காமவராகப் பிறந்த மணி நான்காவதுவரை படித்திருக்கிறார். 1950-ல் அவர் பொன்னம்மாளைக் கைப்பிடித்தார். ரேவதி, பிரதாபன் ஆகிய இரு குழந்தைகளிருக்கின்றன அவருக்கு.

ஸ்டண்ட் காட்சிகள் தமிழ்ப் படங்களில் மேனாட்டுப் படங்களுக்கீடாக அமைய வேண்டுமென்பதற்காக வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தவர்களுள் மணி குறிப்பிடத் தக்கவர். அவரிடம் திறமை இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தமிழ்ப்படவுலகின் கடமை.

— "சம்பத்து"


## வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இயக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், வித வித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனாம். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரூ. 15.50 வி.பி.பி. சார்ஜுகள் ரூ. 4.50 தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

Anand Industries
Mandi Ramdas Mathura

வசனகர்த்தா

# இரணியல் ரவி

படித்தவர்கள் படவுலகுக்கு வர வேண்டுமென்கிறார்கள் பலர். ஆனால் ஒரு சிலர்தான் இதைச் செயலில் காட்டுகிறார்கள். அவர்களுள் சுப்பையா குறிப்பிடத்தக்கவர். மெஜஸ்டிக் பிக்சர்ஸ் சார்பில் 'நாட்டுக்கொரு நல்லவள்' படத்தைத் தயாரிக்க அவர் ஈடுபட்ட போது, தசரத ராமையாவை டைரக்ஷனுக்கும் இரணியல் ரவியை வசனத்திற்கும் ஒப்பந்தம் செய்தார். முதல் தயாரிப்பில் அவர் விஷப்பரீட்சையில் இறங்கினாலும் அவருக்குத் தோல்வி கிடைக்கவில்லை. சுப்பையாவை நாம் பாராட்டுகிறோம்.

இந்தப் படத்தின் திரைக்கதை வசனங்களை அமைத்திருக்கிறவர், இரணியல் ரவி என்கிற இளைஞர். இரணியல் சரோஜா என்ற பெயரில் சிறு கதைகள் எழுதி வந்த



இரணியல் ரவி

ரவி, சென்னை வந்து சென்ற ஆண்டில் சட்டக்கல்லூரியில் சேர்ந்தார். அப்போதுதான் சுப்பையாவும் படத்தயாரிப்பில் ஈடுபட்டார். நன்றாக ஆர்வம் காட்டி வசனம் எழுதக் கூடியவர்களைத் தேடிக்கொண்டிருந்தார் சுப்பையா. சுந்தரம் என்ற அன்பர் ரவியை அழைத்துச் சென்றார். வசனப்பரீட்சை நடந்தது. பலர் பல காட்சிகளுக்கு வசனமெழுதிக்கொண்டு வந்தார்கள். பொன்னம்மாள், (பண்டரிபாய்) திருமணத்தின் போது தன் மகன் சங்கரை (எஸ். எஸ். ஆர்.) காமப்பிசாசு என்று ஏசும் கட்டத்தின் வசனங்களை ரவி அமைத்து சுப்பையாவிடம் காட்டினார். அவர் பக்கம் திறமையோடு அதிர்ஷ்டமும் இருந்தது. கல்லூரிப் படிப்பையும் விடாமல் 'நாட்டுக்கொரு நல்லவள்' திரைக்கதை வசனங்களையும் அமைத்தார் ரவி. படத்தில் அவரது வசன அமைப்பு நன்றாக இருக்கிறது. வார்த்தை ஜாலங்கள் அதிகமின்றி கருத்துச் செறிவுடன் அவர் எழுதிய வசனங்கள் படத்திற்குச் சுவை கூட்டின.

கல்லூரி மாணவர்களில் பலர் தமிழ்மொழியில் பேசுவதைக்கூடக் கேவலமாகக் கருதும் இந்தக் காலத்தில் தமிழ்மொழியில் இத்தனை ஆர்வம் காட்ட ரவியால் மட்டும் எப்படி முடிந்தது?

ரவியின் தகப்பனார் பி. ராமசாமிப்பிள்ளை ஒரு தமிழ் பக்தர். கன்யாகுமரி ஜில்லா தமிழ் நாட்டுடன் சேர வேண்டுமென்று போராடியவர். இந்தப் போராட்டத்தின் தலைவர் அவர்தான். தமிழ் பக்தி கொண்டவரின் குமாரர் ரவி. இது ஒன்று.

ரவியின் மூத்த சகோதரர் இரணியல் கலை என்ற பெயரில் ஏராளமான கதைகளைத் தமிழில் எழுதியிருக்கிறார். ரவி மொழிபேச,

எழுதத்தெரிந்த நாள் முதல் அண்ணன் வழியிலேயே செல்பவர். ஆகவேதான் தமிழ்க்கதைகளை இரணியல் சரோஜா என்ற பெயரில்எழுதி வந்தார். 'சரோஜாஎன்ற பெயரை ஏன் வைத்துக்கொண்டீர்கள்?' என்றேன். மௌனமாகச் சிரித்தார். பெயரில் இனக்கவர்ச்சி இருக்க வேண்டுமென்பதற்காக வைத்துக் கொண்டாரோ என்னவோ!

நாகர்கோயில் அருகே உள்ள இரணியல், ரவியின் சொந்த ஊர். ராமசாமிப்பிள்ளை அங்கே வழக்கறிஞராகப் பணியாற்றுகிறார். அவருக்கும் அவர் மனைவி சீதாலக்ஷ்மி அம்மாளுக்கும் பிறந்தவர்கள் ஐந்து குழந்தைகள். அழகம்மாள், கலை, ரவி, ஜானகி, ஆனந்தம் இவர்களில் ஆனந்தம் தவிர யாவரும் மணமானவர்கள். கலை எலக்டிரிஸிடி போர்டில் பணியாற்றுகிறார்.

ரவியின் இயற்பெயர் சிதம்பரதாணு. அது இரணியல் சரோஜாவாகி யிருக்கிறது. ரவிக்கு மலையாளம் இரண்டாம் மொழி. அதில் நன்குபேச, எழுத, படிக்கத் தெரியும் அவருக்கு. தமிழ், ஆங்கிலம். ஹிந்தி மொழிகளும் தண்ணீர்ப் பட்டபாடு. 1956-ல் ரவி தன் உறவுப் பெண் லக்ஷ்மியை மணந்தார். அவர் மகனுக்கும் ரவி என்றுதான் பெயரிட்டிருக்கிறார்.

'நாட்டுக்கொரு நல்லவள்' திரைக்கதை—வசனங்களை ரவி அமைத்தார். படத்தின் பல காட்சிகளிலும் அவரது வசனம் கருத்து மிக்கதாக இருக்கிறது. கதையமைப்பும் நன்றாக இருக்கிறது. கிராமிய சூழ்நிலையை அவர் அநேக காட்சிகளில் மிக அழகாகப் பிரதிபலித்திருக்கிறார். ஒரு கிராமத்திலிருப்பது போன்ற உணர்ச்சியை ரசிகர்களிடையே அவர் ஏற்படுத்தியிருக்கிறார். இது முதல் படம் என்னும்போது அவரது திறமையை யாரும் பாராட்டாமலிருக்க முடியாது. முத்தெடுக்கப் பலர் கடலில் குதித்துக் கரை யேறுகிறார்கள். சிலரிடம் தானே நல் முத்து கிடைக்கிறது.



சிவாஜி கணேசன் தன் அன்புத்தாயின் காலடியில் மகிழ்ச்சியோடு உட்கார்ந்திருக்கிறார். ...காரணம்? ...அடுத்த இதழில் பாருங்கள்.

சுப்பையா நல்முத்து எடுத்த அதிருஷ்டசாலி.

''நான் படத்தொழிலில் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துச் சென்னைக்கு வரவில்லை. ஆனால் நான் எடுத்த எடுப்பிலேயே திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பை ஏற்றேன். இதற்காக திரு. சுப்பையா அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று நன்றி உணர்ச்சியுடன் கூறினார் ரவி.

இரணியல் ரவி கற்பனை வளம் மிக்க எழுத்தாளர். அவருக்கு இதைப்போல் நிறைய சந்தர்ப்பங்கள் கிடைக்குமானால் அவர் எழுத்தில் இன்னும் மெருகேறிவிடும். படவுலகிற்கு நிறைய எழுத்தாளர்கள் தேவை. ரவி போன்றவர்களை உற்சாகப்படுத்த முற்பட்டால் நல்ல கதையும், கருத்தமைந்த வசனமும் படங்களில் மிளிரும்.

''குமார்''




## அறிமுகம்

சுந்தரம்பிள்ளை, முத்தையா பிள்ளை, ராமையா பிள்ளை இம்மூவரது குடும்பங்களும் ஒற்றுமையாக வாழும் குடும்பங்களாகும். சுந்தரம் பிள்ளையின் மனைவி பொன்னம்மாள் இந்தக் குடும்பங்களிடையே அன்பையும் பண்பையும் வளர்த்து வருகிறாள். அவளுடைய மகள் விஜயா நல்ல அழகி. ராமையா பிள்ளையின் மகன் ராமநாத்திற்கு அவளை மணமுடித்திருந்தனர். விஜயாவின் அண்ணன், கல்லூரியில் படிக்கும் சங்கர். அவன் முத்தையா பிள்ளையின் மகள் கௌரியைக் காதலிக்கிறான். கௌரி தாயில்லாப் பெண் என்பதால் பொன்னம்மாள் அவளை மிகுந்த பரிவுடனும் பாசத்துடனும் வளர்க்கிறாள். ராமையாவிற்கு ராமநாத்தைத் தவிர, ராஜம் என்ற பெண்ணுமுண்டு. அவர் மனைவி காமாக்ஷியே தன் மகளை அரைப்

பைத்தியமென்கிறாள் என்றால்......!

### காட்சி 1

### திருவிழா விரோதம்

முத்தையா, சுந்தரம் பிள்ளை முதலியோர் திருவிழாவை முன்னிட்டுக் கோயிலுக்குக் கிளம்புகின்றனர். அப்போது 'முதல் பிரசாதம்' வாங்கும் உரிமை பெற்ற ராமையாவுக்கு வேலையிருப்பதால் மற்றவர்களை முன்னால் செல்லும்படியும், தான் பிறகு வருவதாகவும் கூறுகிறார். ஆனால் அவர் கிளம்பத் தாமதமாகிறது சகஜமான எண்ணத்தில் யாவரும் முத்தையா பிள்ளையை முதல் பிரசாதம் வாங்கிக் கொள்ளும்படிக் கூறுகிறார்கள். அவர் வாங்கும்போது ராமையா அங்கு வந்து சேருகிறார்.

ராமை: டேய் நிறுத்து! என்னப்பா பூசாரி! பழக்க வழக்கமெல்லாம் என்ன ஆறது? உனக்கு அறிவில்லை?...ஹி...

சு. பி: ராமையா! இந்த சின்ன விஷயத்துக்கு...

ராமை: இதுவா சின்ன விஷயம்? பரம்பரை பரம்பரையா இந்தப் பிரசாதத்தை வாங்கக்கூடிய உரிமை எங்களைச் சேர்ந்தது. என் குடும்பத்தை சேர்ந்தது. இப்ப மட்டும் விட்டு குடுத்துட்டா என் குடும்ப கௌரவம் என்ன ஆறது?

சு. பி: உம்...நான் சொல்றதை கொஞ்சம் பொறுமையாகக் கேளேன். நீ வர்றதுக்கு ரொம்ப நேரமாச்சு...

ராமை: நேரமாச்சுன்னா இன்னொரு பைய வந்து வாங்கிட்டுப் போறதா? அதான் நடக்காதுன்னேன்.

## பாத்திரங்கள்

| | |
|---|---|
| பாலையா | ராமையா |
| பீர்முகமது | முத்தையா |
| சகஸ்ரநாமம் | சுந்தரம் பிள்ளை |
| பண்டரிபாய் | பொன்னம்மாள் |
| ராஜேந்திரன் | சங்கர் |
| விஜயகுமாரி | கௌரி |

திரைக்கதை, வசனம் ;
**இராணியல் ரவி**

டைரக்ஷன் :
**தசரதராமையா**

முத் : உன் இஷ்டப்படி ஊர் ஜோலியெல்லாம் முடிச்சுட்டு வரவரைக்கும் அத்தனைபேரும் காத்துக்கிட்டு இருக்க முடியாது.

ராமை : காத்துக்கிட்டுத்தான் இருக்கணும்.

முத் : அப்படிக் காத்துக்கிட்டு இருக்க இது உன் கோயிலுமில்லே; உன் பாட்டன் கோயிலுமில்லே.

ராமை : டேய்... ...பாட்டன் கோயிலா? அப்படியா சொல்றே? யார் கோயில்னு காட்றேண்டா நானு.

சு. பி : ராமையா...

ராமை : இதிலே நீங்க தலையிடாதிங்க...!

**ராமையா கிணற்றிலிருந்து நீர் எடுக்க மறுத்து கடன் வாங்க முற்படுகிறார் முத்தையா.**

**சுந்தரம் பிள்ளை தன் வீட்டை அடமானம் வைத்து ராமையாவுக்குக் கிணறு வெட்ட பணம் கடன் வாங்கித் தருகிறார். இதனால் முத்தையா அவரையும் தன் விரோதியாக நினைக்கிறார்.**

### தென்னமரத்தில் தேள் கொட்ட

**விரோதம் வளர்ந்து ராமையாவும் முத்தையாவும் ஒருவரையொருவர் தீர்த்துக்கட்டும் வரை வந்துவிடுகின்றனர். கோழிச்சண்டையின்போது ஆட்களைச் சேர்த்துக்கொண்டு இருவரும் சண்டையிடவே சுந்தரம் பிள்ளை சென்று தடுத்து அழைத்து வருகிறார். கௌரி, சுந்தரம் பிள்ளை வீட்டுக்குக்கூடப் போகக்கூடாது என்று**



எச்சரிக்கிருர் முத்தையா பிள்ளை. சங்கரை யாருமறியாமல் கௌரி சந்திக்கிருள். அவள் கண்களில் நீர்வழிவதைக்கண்டு திடுக்கிடு கிருன் சங்கர். கௌரி தனக்குக் கிடைக்கமாட்டாளோ என்று பயந்து அவளுக்குத் தாலியும் கட்டி விடுகிருன் சங்கர்.

## காட்சி 2

### சங்கரின் கோபம்

சிதம்பரத்திடமிருந்து சுந்தரம் பிள்ளை வீடு அடமானம் வைத்த பத்திரத்தை, யெல்லாம் சிதம்பரத்திடமிருந்து 'மேடோவர்' பெற்றுத் திரும்புகிருர் முத்தையா. இதை ஓடிப்போய் சுநதரம பிள்ளையிடம் கூறுகிருள் கௌரி.

கௌ : மாமா—மாமா...

சு. பி : கௌரியா......... என்ன இந்த நேரத்திலே வந்திருக்கே?

கௌ : உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்திருக்கேன்.

சு. பி : என்னம்மா அப்படி அவசரமான விஷயம்? இந்த நேரத்திலே உங்கப்பா உன்னை பார்த்தா என்ன நடக்கும் தெரியுமா உனக்கு?

கௌ : உம். எனக்கு என்ன வந்தாலும் பரவாயில்லே மாமா. ஆனு, உங்களை நாசம் பண்றதுக்கு என் அப்பா திட்டம் போட்டு இருக்கிறதை என்னுலே சகிக்க முடியாது மாமா.

சு. பி : என்னம்மா சொல்றே? உங்கப்பா அப்படி என்னம்மா செய்துடப்போருரு?

கௌ : உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது மாமா. நீங்க சிதம்பரம் பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த புரோநோட்டை எங்கப்பா மேட் ஓவர் வாங்கி உங்கள் சொத்துக்களை எல்லாம் ஏலம் போடப் போருராரு.

சு. பி : அவ்வளவு தானே? இதிலே என்னை நாசம் செய்யற துக்கு என்னம்மா இருக்கு? சிதம் பரத்துக்கிட்டே அந்த சொத்து இருக்கிறதைக் காட்டிலும் உங் கப்பாகிட்டே இருக்கிறதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்.

கௌ : அப்படின்னு இந்த அக்ரமம் எல்லாம் நடக்க வேண்டியதுதானு?

சு. பி : இதிலே என்னம்மா அக்ரமம் இருக்கு? இந்த விரோதம் என்னிக்குமே நிலேச்சுடுமா? வாழ்க்கையிலே சுகம், துக்கம் இரண்டும் கலந்துதான் இருக்கும் நீ கவலேபடாதே.



கௌ : சரிதான் மாமா. நம்ம செயலுக்கு மீறி துன்பம் வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனு வேணும்னே ஒருத்தரைக் கெடுக்க நினைக்கும்போது அதைத் தடுக்காமல் இருக்கலாமா?

சு. பி : அப்படியெல்லாம் யாரும் ஒத்தரை யொருத்தர் சீக்கிரம் கெடுத்துவிட முடியாதும்மா. பெரியவங்களுக்குத் தெரி

யாம உன்னை மாதிரி வயசுப் பிள்ளைங்க இந்த நேரத்திலே வெளியே வர்ரது தப்பும்மா! போம்மா!

கௌரி : சரி மாமா! அத்தையையும் விஜயாவையும் ஒரு தடவை பார்த்துட்டுப் போரேன மாமா...

சு. பி. : வேண்டாம், கௌரி! பொன்னம்மாவுக்கு இதெல்லாம் தெரிஞ்சுதுன்னு ரொம்ப கவலைப் படுவா! பின்னாலேயே பார்த்துக் கலாம். புறப்படும்மா.

**கௌரி முத்தையாவின் வீட்டினுள் நுழைகிருள். முத்தையா கையில் கழியுடன் உட்கார்ந்திருக்கிருர்.**

முத் : கௌரி எங்கேப் போனே? எங்கே போயிருந்தே? இந்த இருட்டிலே உனக்கு வெளியே என்னவேலை? சொல்லு! பொன்னம்மா வீட்டுக்குத்தானே? அந்த வீட்டுப்படியை மிதிக்காதேன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்.

**கௌரியை துடிக்கிருர்.**

கௌரி : அப்பா!

முத் : சொல்லு! சொல்லு!

**கௌரி துடிக்கிருள்,**

முத் : போவியா சொல்லு! போவியா சொல்லு?

லக்ஷ் : அடிக்காதீங்க! ஐயோ அடிக்காதீங்க!

**கதவு தட்டும் ஓசை கேட்கிறது. லக்ஷ்மி கதவுப்பக்கம் பார்க்கிருள்.**

முத் : கதவைத் திறக்காதே! திறக்காதே! மண்டையை உடைச்சுடுவேன்!

கௌரி : உள்ளே வர வேண்டாம்!

முத் : யார் வந்தாலும் கொலை விழுந்துடும் !

**லக்ஷ்மி கதவைத் திறந்து விடுகிருள். சுந்தரம்பிள்ளை, பொன்னம்மாள், சங்கர் மூவரும் உள்ளே வருகிருர்கள்.**

பொன் : என்னண்ணு இது. நடக்கறது! எங்க மேல இருக்கிற ஆத்திரத்தை அந்தப் பொண்ணு மேலே காட்டி, ஏன் இப்படி சித்திரவதைப் பண்ணுறீங்க?

முத் : என் பொண்ணு! நான் அடிப்பேன்! சித்திரவதை பண்ணுவேன்! நீங்க யாரு கேக்கறத்துக்கு?

சு. பி : முத்தையா...

பொன் : கண்ணைப்போல காக்கவேண்டிய கன்னிப் பெண்ணை அடிப்பேன் உதைப்பேன்னு சொல்றத்துக்கு வெட்கமாயில்லே?

முத் : வெட்கப்பட வேண்டியது நானில்லே. ஊரார் பெண்ணிடம் உரிமை கொண்டாடுறீங்களே. உங்களுக்குத்தான் இருக்கணும் வெட்கம்.

சு. பி : இதெல்லாம் என்ன பேச்சு முத்தய்யா? உனக்கு என்ன பைத்தியம் கியித்தியம் பிடிச்சுப் போச்சா! அர்த்தராத்திரியிலே இப்படி ஆர்ப்பாட்டம் பண்றியே. அக்கம் பக்கத்திலே இருக்கிறவங்க சிரிக்க மாட்டாங்களா? அப்படி அந்தப் பொண்ணு என்ன தான் குத்தம் பண்ணிடுத்து?

முத் : எங்க வீட்டிலே ஆயிரம் இருக்கும்! அதைக் கேட்க நீங்க யாரு? அதைத் தீர்க்க எனக்குத் தெரியும். நீங்கப் போயிட்டு வாங்க!

சு. பி : கண்டிக்க வேண்டியது உன் கடமைதான். அதுக்கு இப்படியா? எக்கச் சக்கமா ஏதாவது ஆயிட்டா!...

முத் : நீங்க ஒண்ணும் கவலைப் பட வேண்டாம்! அப்படி வாயை பிளந்துட்டா தூக்கி சுடுகாட்டிலெறிய பெத்த அப்பன் நானிருக்கேன்.

(118-ம் பக்கம் பார்க்க)

# படவுலகத் திருமணங்கள்





தயாரிப்பாளர் ஜூபிடர் சோமசுந்தரத்தின் குமாரத்தி சுலோசனு பி.ஏ.வுக்கும், வி.எம். முத்துசாமியின் குமாரர் மாணிக்கம் பி.ஏ.வுக்கும், ஜூன் 25-ம் தேதியும், நடிகர் டி.எஸ். பாலய்யாவின் மகள் துர்காலக்ஷ்மிக்கும் துரைராஜுக்கும் சென்ற 9-ம் தேதியன்றும், நடிகர் டி.ஆர். ராமச்சந்திரனின் மகள் சரோஜா பி.ஏ.வுக்கும் சுப்பிரமணியனுக்கும் சென்ற 12-ம் தேதியன்றும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.









1. தங்கவேலு டி. ஆர் ஆர். 2. சாவித்திரி 3 துர்காலக்ஷ்மி துரைராஜ். 4. சோமு, வாசன் 5. சுலோசனு மாணிக்கம். 6. சோமு 7. சரோஜா - சுப்ரமண்யம் 8. டி ஆர். ஆர். வீட்டில்.





# புதிய வெளியீடுகள்

## பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

தயாரிப்பு: சாவித்திரி பிக்சர்ஸ்
டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
கதை, வசனம்: பி. எஸ். ராமய்யா
நீளம்: 14,514 அடி
வெளியிட்ட தேதி: 17-7-59

நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. ஆர். ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், பி. சரோஜா தேவி, என். சாந்தினி.

ராஜாமேடு கிராமத்தின் பஞ்சாயத்து போர்டு பிரஸிடெணட் பஞ்சாட்சரத்தின் ஒரே மகள் மேகலே. கல்லூரியில் படிக்கும்போது தற்செயலாக சிமாமணி என்ற வாலிபனைச் சந்திக்கிருள். வேலையில்லாத பட்டதாரியான சிகாமணி மேகலேயைத் தொடர்ந்து வருகிருன்.

பஞ்சாயத்துபோர்டு நிர்வாகத்தின் ஊழலே அறிய ரகசிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டதாக அறிந்த பஞ்சாட்சரம், சிகாமணியே அந்த அதிகாரி என்று நினைத்து, அவனுக்கு ராஜோபசாரங்கள் செய்து, அத்துடன் தன் மகள் மேகலேக்கும் அவனையே கணவனுக்கத் தீர்மானிக்கிருர்.

திருமணத்தன்றுதான் அவருக்கு சிகாமணியின் உண்மை சொரூபம் வெளிப்படுகிறது. பிரஸிடெணட் பஞ்சாட்சரம் சிகாமணியைத் திட்டி விரட்ட ஆரம்பிக்கும்போது. அவன் அவரது தூரத்து—தாயாதியின் உறவினன் என்பது தெரிகிறது. அத்துடன் அந்த ரகஸிய அதிகாரியின் வேலேயும் சிகாமணி—மேகலே திருமணமும் சுபமாக நடைபெறுகின்றன.

### விமர்சனம்

சேவாஸ் ஸ்டேஜ் குழுவினர் நாடகமாக நடத்திய இந்தச் சிறு கதையில் முழுநீளப் படத்திற்குத் தேவையான கதையம்சமும் சம்பவங்களும் இல்லே. இப்படத்தில் வரும் ''வ. உ. சி. நாட்டிய நாடகம்'' சிறுவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு சிறந்த அறிவூட்டும் அம்சமாக அமைந்திருக்கிறது.

## புதுமைப்பெண்

தயாரிப்பு: கஜலக்ஷ்மி பிக்சர்ஸ்
டைரக்ஷன்: எம். திருவேங்கடம்
கதை-வசனம்: பி. ஏ. குமார்
நீளம்: 15,760 அடி
வெளியிட்ட தேதி: ?

நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், பாலய்யா, மனோகர், ராஜசுலோசனு, எம். என். ராஜம், எஸ். வி. சுப்பய்யா.

தனது மானேஜர் ராமனுதனுல் வஞ்சிக்கப்பட்ட சிவானந்தம் ஆஸ்திகளே இழந்து, தனது குமாரர்களில் ஒருவனுன மாணிக்கத்தை சந்தானம் என்பவரிடமும், முத்துவை நாராயணசாமியிடமும் விட்டு விட்டு எங்கோ போய் விடுகிருர்.

காலேஜில் படித்த மாணிக்கம் ரஞ்சனியைக் காதலிக்கிருன். பாலு என்ற நண்பனும் அவனுக்கு உதவியாக இருக்கிருன். முத்து ஒரு நெசவாளியின் வீட்டின் வளர்ந்ததால் ஏழையாகவே வாழ்கிருன். ஆனுல் புதுமைப் பெண்ணுன வித்யா, தான் ஒரு வக்கீல் மகளாக இருந்தும், முத்துவைக் காதலிக்கிருள்.

இதற்கிடையில் தகாத செயலால் தீராத நோய்க்காளான ராமனுதன், தான் சாகும்போது, சொத்துக்களே

மாணிக்கத்துக்கே உயில் எழுதி அதை ஒரு படத்தின் பின்னல் வைத்துப் பிரேம் போட்டு வக்கீலி டம் கொடுத்து விடுகிருர். அந்தப் படத்தைக் கேவலமாக மதித்த மாணிக்கம் அதை எங்கோ போக்கி விடுகிருன்.

வக்கீல் மகன் மோகன் ரஞ்சனி மீது ஏற்பட்ட காதலால் அவளேயும் மாணிக்கத்தையும் கொடுமைப் படுத்துகிருன். வித்யாவும் முத்துவும் தக்க சமயத்தில் செய்த உதவிகளினுல் காதலர்கள் தப்புகின்றனர். முடிவில் உயிலும் கிடைக்கவே முத்துவும் மாணிக்கமும் உடன் பிறந்தவர்கள் என்பது தெரிகிறது.

### விமர்சனம்

தேவையற்ற பாத்திரங்களேயும், சம்பந்தமற்ற சம்பவங்களேயும் நிறையப் புகுத்தியிருப்பதால் பிரதான கதைப் போக்கின் அடிப்படைக்கு முக்கியத்துவ மில்லாமல் போய் விட்டது. டி. எஸ். பாலய்யாவின் ஹாஸ்யம் ஒன்றுதான் இப் படத்தின் விசேஷமான அம்சம்.

## பெண் குலத்தின் பொன் விளக்கு

தயாரிப்பு : அசோகா பிக்சர்ஸ்
டைரக்ஷன் : பி. விட்டலாசார்யா
வசனம் : முகவை ராஜமாணிக்கம்
நீளம் : 15,145 அடி
வெளியிட்ட தேதி : 10-7-59
நடிகர்கள் : ஜெமினி கணேசன், நம்பியார், நரசிம்ம பாரதி, அசோகன், எம். என். ராஜம், ஸ்ரீரஞ்சனி.

சிற்றப்பனும் பாங்கருமான சபாரத்தின முதலியாருடன் ஒன்ருக வாழ்ந்து வந்த சுந்தரம், முதலியார் மகள் கலாவல்லியின் துடுக்குத்தனம் காரணமாகத் தனது மனைவி பார்வதியுடன் வீட்டை விட்டு வெளியேறித் தனிக்குடித்தனம் ஆரம்பிக்கிருன்.

கலாவின் தோழியும், கணவனையே விவாகரத்து செய்துவிட்டு வந்தவளுமான லலிதாவின் வலையில் விழுகிருர் தனவந்தர் வரதராஜ முதலியார். அவரிடம்தான் வேலை செய்தான் சுந்தரம். லலிதாவைப் பற்றி அவரிடம் அவன் எச்சரித்த காரணத்திஞல் அந்த வேலையும் போய்விடுகிறது.

ஆணுக்கு அடங்காத அடங்காப் பிடாரி கலாவல்லியை அடக்க, ஒரு பாட்டு வாத்தியாராக வந்து சேருகிருன் கோதண்டம் என்ற சீர்திருத்த வாலிபன். அவனை அவள் மணந்து, பிரிந்து பின் திருந்துகிருள்.

இதற்கிடையில் வரதராஜனின் காரில் அடிபட்டுக் காலை இழந்த சுந்தரத்தின் மனைவி பார்வதியின் மேல் சபலம் கொண்ட வரதராஜன் அவளது உபதேசத்தால் மனம் மாறி அவளைச் சகோதரியாக ஏற்கிருன். ஆனல் விதியின் காரணமாக இந்த உறவைச் சந்தேகிக்கிருன் சுந்தரம். முடிவில் உண்மை வெளியாகவே எல்லாம் சுபமாக முடிகிறது.

### விமர்சனம்

இப்படிப்பட்ட கதைகளினுல் சமூகத்திற்கு எந்தவித நன்மையும் ஏற்படாது. சமூக நன்மைக்கு ஒத்துவராத கதைகள் படமாக்கப் படவேண்டிய அவசியமே இல்லை.

## உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

தயாரிப்பு : லலிதகலா பிலிம்ஸ்
டைரக்ஷன் : எம். ஏ. திருமுகம்
கதை, வசனம் : அய்யாப்பிள்ளை
நீளம் : ?
வெளியிட்ட தேதி : ?
நடிகர்கள் : பிரேம் நஸிர், ஓ. ஏ. கே. தேவர், டி. பாலசுப்ரமணியம், இ. வி. சரோஜா, கண்ணம்பா, எம். என். ராஜம், காமினி.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்களைப் பிரிக்கிறது விதி. மூத்தவன் ஒரு மில் முதலாளியின் வீட்டில் வளர்ந்து பெரியவனாகி மில்லுக்கும் முதலாளியாகிறான். இளையவன் தன் தாயாருடன் வறுமையில் வாடிக் களைத்துக் கடைசியில் தமையனிடமே வேலைக்கமருகிறான். ஆனால் முதலாளி - தொழிலாளி மனப்பான்மையும், ஒருவரை மற்றவர் தெரிந்து கொள்ளாததாலும், இருவரும் ஒரே பெண்ணைக் காதலித்ததாலும், இளையவன் மில்லிலிருந்து வெளியேறி கிராமத்துக்கு வந்து உழவுத் தொழிலை மேற்கொண்டு முன்னுக்கு வருகிறான்.

அண்ணன், தம்பியையும் மற்றவர்களையும் கிராமத்தோடு ஒழிக்கத் திட்டமிடும்போது உண்மை வெளியாகி உடன்பிறந்தோர் ஒன்று கூடுகின்றனர்.

### விமர்சனம்

நல்ல கருத்தும், நோக்கமும் இப்படக் கதையின் சிறப்பான அம்சங்கள். கதைப் போக்குக்காக வேண்டி, பெருக்கப்பட்ட சம்பவங்கள் நம்பமுடியாதனவாகி யிருப்பதால் படம் பார்ப்போருக்குச் சலிப் பேற்படுகிறது.

## நாட்டுக்கொரு நல்லவள்

தயாரிப்பு : மெஜஸ்டிக் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : கே. தசரதராமய்யா
கதை - வசனம் : இரணியல் ரவி
நீளம் : 15,104 அடி
வெளியிட்ட தேதி : 10-7-59
நடிகர்கள் : எஸ். எஸ். ராஜேந்திரன், டி. எஸ். பாலய்யா, பீர் முகமது, சகஸ்ரநாமம், பண்டரி பாய், விஜயகுமாரி, காமினி

இப்படக்கதை இவ்விதழில் வசனத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

### விமர்சனம்

நமது கிராமங்களில் நடக்கும் வழக்கமான நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அழகாக எழுதப்பட்டிருக்கிறது இப்படக் கதை. வசனங்களும் நன்றாக இருக்கின்றன.

## தெய்வ பலம்

தயாரிப்பு : பொன்னலூரி பிரதர்ஸ்
டைரக்ஷன் : வசந்தகுமார் ரெட்டி
வசனம் : உதயகுமார்
நீளம் : 15,900 அடி
வெளிட்ட தேதி : 11-7-59
நடிகர்கள் : பாலாஜி, கும்மிடி, வி. ஆர். ராஜகோபால், ஜெயஸ்ரீ கிரிஜா, மாலதி

ராஜகுமாரி யொருத்தியை மணக்க ராஜகுமாரனொருவன் முயன்று நாட்டைவிட்டு ஓடி பலவித இன்னல்களுக்காளாகி கடைசியில் தெய்வபலத்தால் வெற்றி பெற்று ராஜகுமாரியுடன் திரும்பி நாட்டின் முடியையும் அவளையும் அடைகிறான்.

### விமர்சனம்

மந்திர தந்திர மாயா ஜாலங்கள் நிறைந்த இந்தக் கதை பாமர ரஞ்சகமான முறையில் படமாக்கப்பட்டிருக்கிறது.

## வண்ணக்கிளி

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : டி. ஆர். ரகுநாத்
கதை, வசனம் : ரா. வே.
நீளம் : 15,150 அடி
வெளியிட்ட தேதி : 3-7-59
நடிகர்கள் : மனோகர், பிரேம்நஸீர், டி. ஆர். ராமச்சந்திரன், பி. எஸ். சரோஜா, மைனாவதி,

போக்கிரி யொருவன் புனிதை யொருத்தியால் திருந்தும் கதை இது.

### விமர்சனம்

இப்படக் கதையின் கருத்து புனிதமானது. இப்படத்தின் சிறப்பான அம்சமும் அதுதான். கதைப் போக்கும் சம்பவங்களும் விறுவிறுப்பாக உள்ளன. நல்ல கருத்துள்ள "பழமொழித் தொகுதியான 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்ற பாட்டு நன்றாகப் படமாக்கப்பட்டுள்ளது.

# வெட்டுங்கள் வெட்டுங்கள்

### வீரபாண்டிய கட்டபொம்மன்

வெள்ளையம்மாள் வளர்க்கும் சீனிக்காளையை அடக்க யாராலும் முடியவில்லை என்ற அபிப்பிராயம் நிலவும்போது, 'நானிருக்கிறேன்' என்கிறான் வெள்ளையத்தேவன். ஆனால் நடப்பது 'காளைகள்' சண்டை அல்ல. செத்த பாம்பை அடிப்பதுபோல பின்கால்கள் கட்டப்பட்டிருக்கும் - அசையாமல் நிற்கும் - காளையின் கொம்புகளைப் பிடித்திழுத்து அதை இம்சிக்கிறான் தேவன். ஆங்கிலப் படங்களில் இதுபோன்ற காட்சிகள் மயிர்க்கூச்செறியச் செய்யும். ஆனால் தமிழ்ப் படங்களில்......? இந்தக் காளைமாட்டுச் சண்டையை வெட்டிவிட்டு, வெள்ளையத்தேவன் வெற்றிபெற்றதாகக் கூறினாலே போதுமே.

ரா. இலக்குவன்,
ஸ்ரீரங்கம்.

### சிவகெங்கைச் சீமை

மருதிருவரும் கும்பினியாரால் சிறை பிடிக்கப்பட்டபோது காளையார் கோவிலில் சிட்டுவை மணக்கிறான் தளபதி முத்தழகு. வாய்க்கரிசி கொடுத்துப் போருக்கனுப்பச் சொல்லுகிறான். சிட்டுவும் மனங் கலங்கியபடி வாய்க்கரிசி கொடுத்து விடை கொடுக்கிறாள். போருக்குப் புறப்படும் கணவனுக்கு வெற்றித் திலகமிட்டு அனுப்பும் தமிழ்ப் பெண்ணின் பெருமை இருக்க, ஏன் வாய்க்கரிசி தர வேண்டும்? நெற்றியிலே வெற்றித் திலகமிடும் காட்சி மக்கள் மனதிலே ஊன்றி நிற்பது. அது இல்லாததால் உணர்ச்சி வசப்படுத்த வேண்டிய இந்தக் காட்சி சப்பிட்டுப் போய் விடுகிறது. இதை வெட்டிவிட வேண்டும்.

ந. அரங்கசாமி,
விருதுநகர்.

### தெய்வபலம்

டக்குவும் டமாரமும் தாங்கள் காப்பாற்றுவதாகக் கூறி இளவரசியை அழைத்து வருகின்றனர். இடையில் இளவரசி களைப்பால் மயக்கமுறும் நிலையில் வர மறுக்கவே, அவளை ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டு வருகின்றனர். வழியில் அதுவும் வனாந்திரப் பிரதேசத்தில் பெட்டி எப்படி வந்தது? அவர்களுக்குத் தெய்வபலம் இருந்து மந்திரத்தால் வரவழைத்தார்களா? இந்தக் காட்சி வெட்டப்படவேண்டும்.

இராம. தோழன்,
காரைக்குடி.

### பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

மேகலை பெண்கள் விடுதியில் தங்கிப் படிக்கிறாள். கல்லூரிப் பெண்கள் விடுதியில் இருப்பவர்கள் யாவரும் வயது வந்தவர்கள். அந்த இடத்தில் கட்டுப்பாடு அதிகம்- ஆனால் சிகாமணி - வாலிபன் படித்துப் பட்டம் பெற்றவன் தன் இஷ்டப்படி நுழைந்து பருவப் பெண்கள் தங்கியிருக்கும் விடுதியில் நுழைந்து தகராறு செய்கிறான். கல்லூரிப்பெண்கள் விடுதியில் கட்டுப்பாடு கிடையாது. வாலிபர்கள் தம் விருப்பம்போல் நுழையலாம் என்று காட்டப்படுவது தவறு,

இது பெண்ணைப் பெற்றோரைப் பயமுறச்செய்யும். ஆகவே இதை வெட்டி விடவேண்டும்.

இராம. மாணிக்கம்,
காரைக்குடி.

### தலை கொடுத்தான் தம்பி

கடற்கரையிலே இன்பசாகரன் மடியிலே பூங்கொடி படருகிறது! ஆபாசத்தின் எல்லையிலே எக்காளமிடும் இக்காமக் காட்சியை அப்படியே வெட்டிவிட வேண்டும்.

டி. பி. கிருஷ்ணமூர்த்தி,
புதுக்கோட்டை.

### வீரபாண்டிய கட்டபொம்மன்

வெள்ளையர்களால் ஏவப்பட்ட கொள்ளையர்களைப் பிடிக்க மாறுவேடமிட்டுச் செல்கிறான் கட்டபொம்மன். அவனுடன் பெண் வேடமணிந்து செல்கிறான் சுந்தரலிங்கம். மார் அணிச் சேலை முகப்பை விலக்கிக் காட்டி கள்ளர்களை மயக்குகிறான் சுந்தரலிங்கம்! வேடிக்கையாக இருந்த போதிலும் கட்டபொம்மன் காலத்துப் பெண்டிரின் ஒழுக்கம் பற்றிக் குறைக் படுத்திக் காட்டுவதால் இந்தக் காட்சியை வெட்டிவிட வேண்டும்.

ஏ. என். சூர்யநாராயணன்,
திருச்சி.

### தலைகொடுத்தான் தம்பி

தாய் கூறுகிறாள், தன் கணவனும் மகனும் எங்காவது சுகமாக வாழட்டும் என்று. ஆனால் மகன் கிளம்புகிறான் அப்பனையும் அண்ணனையும் கொல்ல. சாந்தவல்லிக்குக் கணவனும் துரோகி; மகனும் துரோகி. இதுதான் நாம் படத்தில் பார்ப்பது. தாய்க்குத் துரோகம் செய்யும் மகனை இந்திஜித்தைச் சித்தரிக்கிறது, 'அவர்கள் எங்காவது சுகமாக வாழட்டும்' என்ற வசனம். அது இல்லாதிருந்தால் பழிவாங்கப் பறப்படுவதில் துளியாவது அர்த்தமிருக்குமே. இந்த வசனம் வெட்டப்படலாம்.

எஸ். வேம்புசாமி,
சிதம்பரம்.

### கலைவாணன்

அண்ணியின் சடலத்தைக் கோயிலில் கிடத்துகிறான் காசி. முதலாவதாக இது தவறு. சமூகத்தால் ஒதுக்கப்பட்டவன் காசி. குடியால் பாழாகி விட்டவன் காசி. அவன் கோயிலுக்குள் நுழைவதையே யாரும் விரும்ப மாட்டார்கள். அப்படியிருக்க பிணத்தைக் கோயிலுக்குள்ளே தூக்கிச் செல்லலாமா? பிணத்தை ஒருவனே தூக்க முடியுமா? உயிர் ஊசலாடுகிறது என்றால் கவனிக்க வேண்டியது வைத்தியரே தவிர கடவுள் அல்ல. கடவுள் ஏதாவது ஒரு உருவில் உதவி செய்வார். அவரே பிரத்தியட்சமாவது அந்தக்காலம்! கோயிலில் பிணம் கிடத்துவது தவறு. பாட்டினால் உயிர் வருவது காலத்துக்கேற்றதல்ல. அதனால் இக்காட்சி வெட்டப்பட வேண்டும்.

கே. எஸ். அருணாசலம்,
மதுரை.

சிட்டடெல் பிலிம் கார்ப்பொரேஷனின் ''விஜயபுரி வீரன்'' இரு பாஷைப் படத்தில் அசோகன் வில்லனாகத் தோன்றிச் சிறப்பாக நடிக்கிறார்.





உங்கள்
அழகுக்கு
அழகு
செய்பவை...

ஹிமாலயா
புக்கே




நறுமணங் கமழும், குளுமையான ஹிமா
லயா புக்கே ஸ்நோ உங்கள் மேனியை மிருது
வாகவும் மழமழப்பாகவும் வைத்திருக்கிறது,
வெல்வெட் போன்ற ஹிமாலயா
புக்கே டாய்லெட் பவுடர்
உங்கள் மேனியின் இயற்கை
அழகைப் பன்மடங்
காக்குகிறது.




# ஹிமாலயா புக்கே ஸ்நோ, டாய்லெட் பவுடர்

லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

HBS. 15-50 T

# நான் ரசித்த காட்சி

## பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்

போலி அதிகாரியான சிகாமணி பிரசிடெண்ட் பஞ்சாட்சரம் வீட்டில் தங்கி இருக்கும்போது, அவனைப் பார்க்க வந்த ரோடு கண்டிராக்டர் அவனைப புகழ்ந்து, 'கையூற்ருக - அன்பளிப்பு என்ற பெயரில் - பணம் கொடுத்து உபசரிப்பது எங்கள் பழக்கம்' என்று கூறுகிருன். அதற்கு சிகாமணி, "கையூற்றுக் கொடுப்பதும் பழக்கமோ?" என்று கேட்க, கண்டிராக்டர் திகைக்கிருன். கையூற்று கொடுத்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கும் பச்சோந்திகட்கு நல்லதோர் சவுக்கடி இக்காட்சி இதை நல்லவர் யாவரும் ரசிப்பார்கள் என்பது திண்ணம்.

இராம. நல்லவன்,
காரைக்குடி.



சரவணு பிலிம்ஸின் "பாகப்பிரிவினை"யில் எம். ஆர். ராதா யாரைக் கோபிக்கிருரோ?

தில்லியிலிருந்து ரகசிய அதிகாரி வரப்போகிருர் என்று பிரசிடெண்டுக்குத் தெரிகிறது. அவர் நிலை தடுமாறிப்போகிருர். தனக்குப் பழக்கமில்லாத-தான் அடிக்கடி பார்க்காதவர்களைக் கண்டால் திடுக்கிடுகிருர். இவர்தான் ரகசிய அதிகாரியோ என்ற பயத்தால் தவிக்கிருர். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதை விளக்கும் அருமையான இக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

சாரு - சீனு,
திருமயிலை.

## தலைகொடுத்தான் தம்பி

இன்பசாகரன் பார்வை யிழந்த நிலையில் வைத்தியரிடம் கொண்டு வரப்படுகிருன். அங்கே அவன் மனைவியும் மகளும் தங்கி யிருக்கிருர்கள். இந்த விஷயம் அவனுக்குத் தெரியாது. அவன் மகள் அவனிடம் வந்து பேசிக்கொண்டிருக்கும்போது, தன் மனைவி தனக்குத் துரோக மிழைத்து விட்டதாக அச்சிறுமியிடம் கூறுகிருன். சந்தேகம் காரணமாக அவன் மனம் தவருகத் தீர்மானித்து விட்டிருக்கக்கூடும் என்று கூறுகிருள் சிறுமி. அவன் தன் தவறை உணருகிருன். சந்தேகம் ஒரு மனிதனின் வாழ்க்கையையே வீணடித்துவிடும் என்று எச்சரிக்கும் ரசமான இந்தப் போதனைக் காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

அநா. ஜானு முகம்மது அலி,
சேலம்.

தன் அண்ணன் உயிரைக் காப்பாற்றத் துணியும் இந்திரஜித், அவனுக்குப் பதில் தான் சிறையில் இருந்து உயிர்விடத் துணிகிருன். காசு கொடுத்துச் சிறைக்காவலனைச் சரிப்படுத்திவிட்டு, அண்ணனை வெளியே அனுப்பி விடுகிருன் "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்பார்கள். அண்ணனுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை தம்பி தான் தலைகொடுத்து ஏற்கிருன். சகோதரபாசம், தவறு செய்பவன் தியாகத்தின் மூலம்

பெருமை பெறுதல் இவற்றைவிளக்கும் அருமையான காட்சி இது.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

பெற்ற தகப்பனையும் கூடப் பிறந்தவனையும் கொலை செய்யும் நோக்கத்தோடு வருகிறான் இந்திரஜித் தனது தந்தையைச் சந்திக்கிறான். அங்க ஹீனனான விஜயன் தன் மகனிடம் மன்னிப்பு கேட்டபடி மாண்டு விடுகிறான். தான் கொல்ல வந்த மனிதன், அவனாகவே அழிந்தபோது, மகிழ வேண்டும் இந்திரஜித். ஆனால், "அப்பா...அப்பா!!" கதறிக் கண்ணீர் விடுகிறான். அப்பா! இந்த மூன்றெழுத்துச் சொல் இல்லையேல் மகன், மகள் என்ற மூன்றெழுத்துச் சொற்களுக்கு இடமில்லையே! பாசம் என்ற மூன்றெழுத்து இந்திரஜித்தின் உடலைக் குலுக்கி விடுகிறது! பாசத்தின் பெருமையை விளக்கும் ரசமானகாட்சி இது.

சுஜாதா,
சென்னை.

## கலைவாணன்

காசி குடிப்பழக்கம் காரணமாகத் தன் சாரீர வசதிகளை இழக்கிறான். பிறகு சரீர வலிவை இழக்கிறான். உடமைகளையெல்லாம் இழக்கிறான்; உயிரை இழக்கும் நிலை வரையில் அவனைக் குடிப்பழக்கம் கொண்டு செல்கிறது. குடிப்பழக்கம் ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால் அவன் வாழ்வே வீணாகிவிடும் என்பதை விளக்கி குடியின் கொடுமையை



"வனமோஹினி" யில் புதுமுகம் லலிதா.

விளக்கும் காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

"கலைக்காவலன்"
மரக்காணம்.

## வீரபாண்டிய கட்டபொம்மன்

வீரபாண்டிய கட்டபொம்மன் கொள்ளையர்களைப் பிடிக்கக் கிளம்புகிறான். அப்போது மீனா, "பெரியப்பா....பெரியப்பா" என்று கூவியபடி ஓடிவருகிறாள். திருடன் என்ற இனம் வறுமையின் காரணமாக ஏற்படுவது. ஆகவே திருடனை அடிக்கக்கூடாது" என்று குறிப்பாகக் கூறுகிறாள் சிறுமி மீனா. கட்டபொம்மன் முதலிய யாவரும் அவளது அறிவாற்றல் கண்டு வியக்கிறார்கள். 'குழந்தை, தெய்வத் தன்மை வாய்ந்தது; அது கூறும் வார்த்தைகளில் பல போதனை கொண்டதாயும், நடக்கக்கூடிய

தாகவும் இருக்கு'மென்பதை விளக்கும் ரசமான காட்சி இது.

இ. ரா. இராசேந்திரன்,
சின்னாளப்பட்டி.

ராமலிங்க விலாசத்திற்குச் சென்று ஜாக்சனைப் பேட்டி காணுகிறான் வீரபாண்டிய கட்டபொம்மன். தனக்கு சரி ஆசனம் தரப்படாதபோது, அதற்காக வருந்தினாலும் பெருந்தன்மையோடு தயங்கி நிற்கிறான். ''நீதானே வீரபாண்டிய கட்டபொம்மன்?'' என்று அலக்ஷியமாகக் கேட்கிறான் ஜாக்சன். அவன் ஆசனத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு விடுகிறான் கட்டபொம்மன். தன் திறமையையும் கௌரவத்தையும் இப்படிக் குறிப்பால் உணர்த்துகிறான் அவன். வரி, வட்டி, திறை என்று கேட்க ஆரம்பிக்கிறான் ஜாக்சன். கட்டபொம்மன் வார்த்தைகளால் சுடுகிறான் அவனை. பிறகு ஜாக்சன் அவனைத் தாக்கவே கட்டபொம்மன் புலி போல் சிறிப் பாய்ந்து அடித்துப் போட்டு விடுகிறான். சாதுவாக இருந்த கட்டபொம்மனின் பொறுமையை அளவுக்கு அதிகமாகச் சோதிக்கிறான் ஜாக்சன். 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதை விளக்கும் அருமையான காட்சி இது.

மீரா. ஆசைத்தம்பி,
சின்னாளப்பட்டி.

மீனாவைக் களத்திற்குத் தூக்கி வருகிறாள் சுந்தரவடிவு. மரண வாயிலில் நிற்கும் மீனா, 'நீ தோத்துட்டே. நம்பள்ளாம் ஒண்ணா செத்துப் போகலாம்பா' என்கிறான். வாழ்நாளிலேயே கட்டபொம்மன் அப்போதுதான் மனம் கலங்குகிறான். வரும் பொருளுரைக்கும் குழந்தை தெய்வத்திற்குச் சமமானது என்பதை விளக்கும் உள்ளமுருக்கும் காட்சி இது.

சித்சபேசன்,
சிதம்பரம்.

போருக்குப் புறப்படும் வீரக் கணவனுக்குப் பத்தினித் தெய்வமான ஜக்கம்மா, அவன் வாளால் தன் கரத்தைக்கீறி, நெற்றியில் ரத்தப் பொட்டு இடுகிறாள். பிறகு அந்த வாளை உரையில் சரக்கென்ற சப்தத்தோடு தள்ளுகிறான் கட்டபொம்மன். மயிர்க் கூச்செறியச் செய்யும் காட்சி இது. 'நடிகர் திலக'த்தின் நடிப்பு இந்தக் கட்டத்தில் பிரமாதமாக இருக்கிறது.

நீ. பிரகாசம்,
திண்டுக்கல்.

தான் செய்த தவறுக்காகத் தன்னையே தண்டித்துக் கொள்ளுகிறான்



புதுமுகம் வசந்தா ''பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்'' படத்தில் நடித்திருக்கிறார்.

கட்டபொம்மன். சவுக்கடிப் பட்டுக் படுக்கையில் படுத்திருக்கும் அவன் மெல்லக் கண்ணயருகிறான். அப்போது அங்கே வருகிறார் மந்திரி தானாபதி பிள்ளை. கட்டபொம்மனின் நண்பர் டேவிசன் துரை வந்திருப்பதாக அவர் கூறும்போது, 'அவர் இப்போதுதான் தூங்குகிறார்' என்கிறாள் ஜக்கம்மா. கட்டபொம்மன் கனவு கலைந்தது போல் எழுந்து, 'பிள்ளையவர்களே! இதோ வருகிறேன்' என்கிறான் நம் மனம் வேதனையாலும் மகிழ்ச்சியாலும் நெகிழ்ந்து பூரிக்கிறது. வீரன் தூங்குவதுகூட அபூர்வம். இதைச் சிறப்பாகப் பிரதிபலிக்கிறது இந்த அரிய காட்சி.

பி. எஸ். ராஜேந்திரன்,
கீழக்கோட்டை.

எட்டப்பன் துரோகியாக வந்தான். அதைப் புரிந்துகொண்ட கட்டபொம்மன் அவனை எச்சரித்து அனுப்புகிறான். 'நாட்டில் புகழ் படைத்து வாழ வேண்டுமானால் நல்ல எண்ணத்தை நாடு' என்று புத்திமதி கூறி, 'என் முன்னால் நிற்காதே ஓடு' என்று கூறுகிறான். இனத்துரோகியானால் கூட, தூதுவனாக வந்து விட்டால் அவன் உடலுக்கு ஊறு செய்யாமல் அனுப்ப வேண்டுமென்ற பண்பாட்டை விளக்கும் அருமையான காட்சி இது.

தா. இரகோத்தமன்,
சென்னை.

கோட்டை தகர்ந்ததும் கட்டபொம்மனும் ஊமைத்துரையும் வெளியேறி ஒரு கிழவின் வீட்டில் தஞ்சம் புகுந்து விடுகிறார்கள். வெள்ளையர்கள் அங்கு தேடிவந்து விடுகிறார்கள். வீட்டிலே பெரியம்மை இருக்கிறது என்று கூறி வெள்ளையர்களைத் துரத்தி விடுகிறாள் கிழவி. கட்டபொம்மன் விம்மியபடியே, ''அன்னையே உங்களை உயிருள்ளவரை மறக்க மாட்டேன். என்ன கைம்மாறு செய்வேன்? என்னிடம் ஒன்றுமில்லையே காணிக்கையாகக் கொடுக்க'' என்கிறான். நம் இதயம் அழுது விடுகிறது. இந்தக் காட்சியிலே சிவாஜி கணேசனின் நடிப்பால் அந்தக் காட்சி உயிர்பெற்று விடுகிறது. சமயோசித புத்தியையும், நொடிந்த போதும் வள்ளல் மனம் கொடையையே நினைக்கும் என்பதையும் விளக்கும் இந்த அருமையான காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

சி. செல்லப்பா,
தாகுர்லி-பம்பாய்.

## கல்யாண பரிசு

'உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே வசந்தி' என்கிறான் பாஸ்கர். இந்தப் படத்தின் பல கட்டங்கள் பிரமாதம் என்றாலும் இந்தக் கட்டத்தில் ஸ்ரீதரின் திறமையைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஒரே வரியில் பெண் மனம் பற்றி எவ்வளவு அழகாக விளக்கி விடுகிறார்! பெண்ணுள்ளம் மிக மிக ஆழமானது. அவள் எண்ணத்தைப் புரிந்து கொள்ளுவது மிக மிகக் கடினமானது என்பதை அந்த ஒரு வரி விளக்கி விடுகிறதே!

மெ. கயிலை சங்கரன்,
திருச்சி.

தன் வாழ்வு எதிர்பார்த்தபடி இனிக்கவில்லை என்று வசந்திக்குக் கடிதம் எழுதுகிறாள் கீதா. வசந்தி பாஸ்கருக்கு எழுதும் கடிதத்தில் அவன் கடமையை உணர்த்துகிறாள். கீதாவை காதலிக்காவிட்டாலும் அவள் குற்றமற்றவள் என்பதை உணருகிறான் பாஸ்கர். கீதா வரும்போது அவளுடன் அன்புமொழி பேசி உடை மாற்றிக் கொண்டு வரும்படிக் கூறுகிறான். அவள் சென்றதும் சோகச்சிலையாக மாறி, ''வசந்தி! நீ என் இதயத்தில் மட்டுமல்ல, எல்லோர் இதயத்திலும் நீ வாழ வேண்டுமம்மா'' என்று நாத்தழுதழுக்கக் கூறுகிறான் பாஸ்கர். ஒரு பெண்ணால் எதுவும் செய்ய முடியும் என்பதையும், தியாகம் செய்பவரைப் புரிந்து கொண்டவர்கள் அவரைத் தெய்வமாக மதிப்பர் என்பதையும் விளக்கும் இந்தக் காட்சியில் விஜயகுமாரியும் ஜெமினி கணேசனும் மிக நன்றாக நடித்திருக்கிறார்கள்.

குமாரி ஸி. எஸ் லக்ஷ்மி.
சென்னை






# யின் பிரயாண நினைவுகள்

''சிங்கப்பூர் பயணத்தை இம்முறை நாங்கள் மேற்கொண்டபோது இரட்டிப்பு சந்தோஷம் கொண்டோம்'' என்று பத்மினி, ராகினி சகோதரிகள், தங்கள் 'சிங்கப்பூர்-மலாயா பிரயாணத்தைப் பற்றிய விஷயங்களைச் சொல்ல ஆரம்பிக்கும்போது குறிப்பிட்டார்கள்.

''அந்த இரட்டிப்பு மகிழ்ச்சி என்ன?'' என்று கேட்டோம்.

''சென்ற முறை - அதாவது சில மாதங்களுக்கு முன்பு நாங்கள் அங்கே சென்றபோது, 'உங்கள் நடனங்களை நாங்கள் பார்க்க வேண்டாமா?' என்று நேரிலும் கடிதம் மூலமும் கேட்டு பலர் எங்களைத் துளைத்து விட்டார்கள். நாங்கள் பூரண ஓய்வுக்காகச் சென்றதால் அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால் இம்முறை நாங்கள் அவர்களுக்காக நடனமாடவே எங்கள் பிரயாணத்தை வகுத்துக் கொண்டோம். மலாயா ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்கிறோம் என்ற மகிழ்ச்சி ஒன்று. லல்லிக்கு திருமணம் ஆன பிறகு நாங்கள் ஒன்று சேர்ந்து பிரயாணம் செய்தது இது


பத்மினி
ராகினி
அம்பிகா
சுகுமாரி
VARAH-


1
2


3
4


பிரயாண
நினைவுகள்
5

1. கோலாலம்பூரில் சகோதரிகளின் நடனத்தைப் பார்க்க ஜோஹூர் இளவரசியும் வந்தார். 2. ஈபோவில் ரேடியோ கடையைத் திறந்து வைத்தார் பத்மினி. 3. ஆசியப் படவிழாவில் பிலிப்பைன் நாட்டு நடிகையுடன் பப்பியும், வால்ட் டிஸ்னே சகோதரருடன் ராகினியும் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். டிஸ்னேயின் படத்தில் வரும் 'டோனல்ட் டக்' என்ற வாத்தைப்போல் 'விகடம்' செய்து காட்டிய ராகினியை 'நீ ஒரு பெண் டோனல்ட்டக்' என்று பாராட்டிப் பேசினர் அவர். 4. கோலாலம்பூர் தமிழ்ச் சங்க வரவேற்பில் பத்மினி. மூன்று டாலர் இதற்கு நுழைவுக் கட்டணம் விதிக்கப்பட்டது. 5. மலேயா மந்திரி சம்பந்தனுடன் சகோதரிகள். எதிர்ப்பக்கம்: மலாயாவில் உள்ள தங்களது மாமாவுடன் சகோதரிகள்.





தான் முதல் தடவை. அதுவும் எங்கள் தாயார், மற்றும் பெரியம்மா, அம்பிகா, சுகுமாரி எல்லோருடனும் சேர்ந்து - எங்கள் குடும்பமே பிரயாணம் செய்தபோது எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. நாங்கள் இப்படிக் கூட்டமாகக் கிளம்பிச் சென்றது நரிக்குரவர்களின் நினைவைத்தான் எங்களுக்கு ஏற்படுத்தியது. அவர்கள் இப்படித்தானே கூட்டம் கூட்டமாகக் கிளம்பி விடுவார்கள்!" என்று சகோதரிகள் சொன்னர்கள்.

"இந்த முறை உங்கள் பிரயாணத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத



நிகழ்ச்சி எது?'' என்று கேட்டோம்.

''லல்லி உடன் வந்ததுதான்!'' என்று பதில் கொடுத்தார் பத்மினி.

சிங்கப்பூரில் சகோதரிகள் மே மாதம் 5-ம் தேதி போய் இறங்கினார்கள். அவர்கள் அங்கு சென்று இறங்கிய முதல் ஒரு வாரம் வரை எந்த நடன நிகழ்ச்சியிலும் பங்கு கொள்ளவில்லை.



'ஸீ-வ்யூ' என்ற வசதிமிக்க பிரபலமான ஓட்டலில் அவர்கள் தங்கியிருந்தார்கள்.

அங்கே ஒரு சுவையான சம்பவம் நடைபெற்றது.

அந்த ஓட்டலில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர் பணியாளாக இருந்தார்.

சகோதரிகளிடம் அவர் வந்து ஆங்கிலத்தில் உரையாடினார். ஆனால் அதற்குப் பதிலாக ரஷ்யமொழியில் சகோதரிகள் அவருக்கு விடையளித்தபோது, வியந்து நின்றுவிட்டார் அவர்.



1. கையெழுத்து வேட்டைக்காரர்களிடம் உண்டியில் பணம் வாங்கப்படுகிறது. 2. மந்திரியின் மனைவி ராகினிக்கு மாலையிடுகிறார். 3. நடனமாடிக் காட்டியகோபால் ஷெட்டியைப் பாராட்டுகிறார் பத்மினி.



தன் தாய் மொழியில் சகோதரிகள் பேசியது கண்டு வியந்த அந்த ரஷ்ய நாட்டவரிடம் சகோதரிகள், தாங்கள் ரஷ்யா சென்றபோது இம்மொழியை ஓரளவு பயின்றதாகத் தெரிவித்தபோது அவர் பெரிதும் மகிழ்ந்து விட்டார்.



அந்த ஓட்டலில் தங்கியிருந்த நாட்கள் பூராவும் சகோதரிகள் இருவரும் ரஷ்ய மொழியிலேயே பெரும்பாலும் அவருடன் உரையாடினார்கள். இது அந்த ஓட்டலில் தங்கியிருந்தவர்களிடையேயும் ஆச்சர்யத்தை எழுப்பி விட்டது!

ரசிகர்களிடையேயும், இம்முறை சகோதரிகளுக்கு, அங்கு தங்கியிருந்த சமயம் பல விசித்திர சம்பவங்கள் ஏற்பட்டன.

அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் அவர்கள் திரள் திரளாகக் கூடியிருந்து வரவேற்றார்கள். பலர் அவர்களை நேரில் கண்டு சந்திக்க பல நூறு மைல்கள் பிரயாணம்செய்து வந்தார்கள்.



“சென்ற முறை வந்தபோது நான்

4. ரீ டிப்யூஷன் - ஒலி பரப்புக்கான பேட்டி நடக்கிறது. 5. பினாங்கு ஹில்ஸுக்கு ரயிலில் பயணம் செய்கிறார்கள். 6. உடையைத் தேர்ந்தெடுக்கிறார் ராகினி.

உங்களைச் சந்தித்தது நினைவிருக்கிறதா?'' என்று பலர் கேட்டார்கள்.

பல ஆயிரம் பேர்களைச் சந்தித்த அவர்களுக்கு எல்லோரையும் நினைவில் வைத்திருக்க முடியுமா? எனவே அவர்கள் அனைவரிடமும் நினைவிருக்கிறது என்று சொல்லி வைத்தார்கள்.

இவை எல்லாவற்றையும் விட விநோதமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

ஒரு ரசிகை சகோதரிகளிடம் வந்தார். 'சென்ற முறை நான் உங்கள் லல்லியின் குழந்தைக்கு ஒரு பட்டுச் சொக்காய் கொடுத்திருந்தேனே, நினைவிருக்கிறதா? இப்போது தன் குழந்தையுடன் லலிதாவும் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தச் சொக்காயுடன் குழந்தையைப் படம் பிடிக்க வேண்டும். கொஞ்சம் குழந்தையைக் கொண்டுவரச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டார்.

சென்ற முறை சகோதரிகள் அங்கு சென்றபோது சிலர் லல்லியின் குழந்தைக்காக சட்டைகள் பரிசாகக் கொடுத்தது உண்மை தான். இவரும் அந்த ரசிகைகளில் ஒருவர் என்பதை எப்படி நினைவில் வைத்துக் கொண்டிருக்க முடியும்?

தவிர, இவர் படம் பிடிப்பதற்காக வருவார்; அந்தச் சொக்காயைக் கொண்டு வரவேண்டும் என்பது சகோதரிகளுக்குத் தெரியுமா என்ன?



''மலைநாடு ஆசிரியர் திரு. மீனாக்ஷிசுந்தரம் தலைமையில் நடைபெற்ற விழாவில் சகோதரிகள்.



மலாயா சுகாதார (தமிழ்) மந்திரி கனம் சம்பந்தன் இல்லத்தில் அவரது சகோதரர் மீனாக்ஷிசுந்தரத்தின் குழந்தைகள் ராகாமாதவன், நிர்மலா இருவருடனும் பத்மினியும் ராகினியும் கொஞ்சி விளையாடினர்.

என்றும் மாறாது!'' என்று விசுவாசத்துடன் சகோதரிகள் இருவரும் சொன்னார்கள்.

இம்முறை பிரயாணத்தில் சகோதரிகள் மொத்தம் இருபத்திரண்டு நடன நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இவற்றில் இரண்டு நிகழ்ச்சிகள் நிதி வசூலிக்க நடத்தப்பட்டன.

கோலாலம்பூர் அப்பர் தமிழ்ப் பாடசாலை நிதிக்காக ஒன்றும் மற்றொன்று செயிண்ட் ஜான் ஆம்புலஸ் நிதிக்காகவும் நடத்தப்பட்டன. கோலாலம்பூர், ஈப்போ, சிங்கப்பூர் முதலிய இடங்களில் சகோதரிகளின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

''சிங்கப்பூரில் உங்கள் நடன நிகழ்ச்சிக்குத் தடை விதிக்கப்பட்டதாக இங்குள்ள சில பத்திரிகைகளில் செய்தி வெளி வந்ததே, உண்மை அல்லவா அது?'' என்று சகோதரிகளிடம் கேட்டோம்.

''சிங்கப்பூரில் நான்கு நடனங்கள் நடந்தன! நாங்கள் அங்கு சென்ற சமயம் தேர்தல் நடந்து கொண்டிருந்தது. எங்கள் நடன நிகழ்ச்சிக்கு அனுமதி கிடைக்கத் தாமதமானதே தவிர, தடை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ஆதாரமற்ற செய்தி அது!'' என்று சகோதரிகள் சொன்னார்கள்.

கோலாலம்பூரை அடுத்து ஈப்போவில் அவர்களது நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈப்போவுக்கு அவர்கள் காரிலேயே பிரயாணம் செய்தார்கள்.

''வழி நெடுக நாங்கள் கண்ட இயற்கைக் காட்சிகள் மலையாளப் பிரதேசத்தைத்தான் எங்களுக்கு நினைவூட்டின. சற்றேறக்குறைய கேரள நாட்டின் சூழ்நிலையே இங்கும் இருக்கிறது'' என்று கூறினார் பத்மினி.

பொது நிதிக்காக இரண்டு நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்தது தவிர, சகோதரிகள் மற்றும் இரண்டு வழிகளைப் பின்பற்றி நிதி வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி முதன் முதலாக ஹரிஜன நிதிக்காக பணம் திரட்ட முயன்றபோது தன் கையெழுத்தை விரும்பிக் கேட்போர் அனைவரிடமும் பணம் பெற்றுப் போட்டுக் கொடுத்தார்.

இதையேதான் சகோதரிகளும் இங்கு பின்பற்றி யிருக்கிறார்கள்.

இங்குள்ள ராமகிருஷ்ண மிஷன் அனாதைகள் விடுதி நிதிக்காகத் தான் இவர்கள் இம்முறையைக் கையாண்டார்கள். தங்களிடம் கையெழுத்து வாங்க வருவோரிடம் உண்டியை நீட்டினார்கள் அவர்கள். அவர்கள் உண்டியலில் பணத்தைப் போட்டதும், அவர்களிடமிருந்து புத்தகத்தை வாங்கி கையெழுத்துப் போட்டார்கள்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்து இவர்கள் யாருக்கும் கையெழுத்திட்டுக் கொடுக்கவில்லை.

இதன் மூலம் நிறையப் பணம் சேர்ந்தது.

இரண்டாவது, ஈபோவில் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடந்த கூட்டம். இதில் கலந்து கொள்ள நுழைவுக் கட்டணமாக மூன்று டாலர்கள் வைக்கப்பட்டன. பத்மினி, ராகினி சகோதரிகள் இச் சங்கத்தினர்கள் அளித்த தேனீர் விருந்தில் கலந்து கொண்டு, நன்றி தெரிவித்தனர். அன்றைய வசூல் பூராவும் தரும நிதிக்குத் தரப் பட்டது.

பஞ்சார் ரோடு தமிழ்ப் போதனா மொழிப் பள்ளிக்கூடத்தின் விளையாட்டுப் போட்டிகளில் பரிசளிக்க தங்கள் பெயரில் இரண்டு பெரிய வெள்ளிக் கோப்பைகளை சகோதரிகள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஈப்போவிலே பத்மினி ரேடியோ, கிராமபோன் விற்பனை செய்யும் ஒரு கடையையும் திறந்து வைத்தார்.

"என்னை ஒரு பெரிய மந்திரியைப் போல் அவர்கள் நினைத்து நடத்தியது பெருமையாக இருந்தது. அப்போது ஒரு கணம் நான் மந்திரியாகவே மாறி விட்டேன்" என்றார் பத்மினி.

"ஒட்டுப் பெருமலேயே மந்திரியாகி விட்டீர்களே என்று நாங்கள் சொன்னபோது பத்மினி சிரித்து விட்டார்.

இம்முறை சகோதரிகள் சிங்கப்பூருக்குச் சென்றபோது அங்கு 'ஆசிய பிலிம் விழா' நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தியாவிலிருந்து அதிகாரபூர்வமான முறையில் இல்லாவிட்டாலும், நடிகைகள் என்ற முறையில் இதில் கலந்து கொண்டார்கள் அவர்கள்.

இவ்விழாவிற்கு வந்திருந்த பல அயல்நாட்டு நடிகர்களைச் சகோதரிகள் சந்தித்து உரையாடினார்கள். இதெல்லாவற்றையும் விட முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, பிரபலஅமெரிக்ககார்ட்டுன் படத் தயாரிப்பாளரான வால்ட் டிஸ்னேயின் சகோதரை அவர்கள் சந்தித்தது தான். ராகினி இவரிடம் வால்ட் டிஸ்னே தயாரித்த 'டோனல்ட் டக்' என்ற படத்தில் வரும் வாத்தைப் போலவே நடித்துக் காட்டினர். ராகினியின் திறமையைக் கண்டு அவர் பெரிதும் பாராட்டினர்.

பத்மினியும் ராகினியும் இம் முறை நடன நிகழ்ச்சிகளை ஆடிக் காட்டவே சென்றாலும், பத்மினியைப் படப்பிடிப்பு விடவில்லை.

பம்பாய் தயாரிப்பாளர் மெஹ்ரா தயாரிக்கும் 'சிங்கப்பூர்' என்ற படத்தின் சில வெளிபபுறக் காட்சிகளில் நடித்தார் அவர். இதில் பத்மினியுடன் பிரபல மலாயா திரைப்பட அழகி மரியா மனேடோ நடிக்கிறார்.

ஒரு துணிக்கடையில் சற்றும் எதிர்பாராத வகையில் மனேடோ வின் சந்திப்பு ஏற்பட்டது சகோதரிகளுக்கு. சற்றும் முன் பின் பார்த்திராத இவர்கள் நெடுநாள் பழகியவர்களைப் போலப் பழக ஆரம்பித்து விட்டார்கள்.

''உயர்ந்த பண்புகள் கொண்ட, அன்பு மயமான நடிகை இவர்'' என்று மனேடோவைப் பற்றிக் கூறினுர் பத்மினி.

சகோதரிகள் இருவரும் இம்முறை மலாயா நாட்டின் பல முக்கிய இடங்களுக்குப் போய்ப் பார்த்தார்கள்.

பினங்கிலே 'பினங்கு ஹில்ஸ்' என்ற மலைமீதும் ஏறினுர்கள். செங்குத்தாக மலைமீது செல்லும் ரயில் வண்டியில் ஏறிப் பிரயாணம் செய்தார்கள் இவர்கள். ''இதில் செல்லும்போது ஒரே பயமாக இருந்தது!'' என்ருர்கள் சகோதரிகள்.

இங்குள்ள 'ஹாட் ஸ்பிரிங்' என்ற இடத்திற்கும் சென்ருர்கள். இங்கே ஒரு சுனையிலிருந்து சுடுநீர் கொதித்தபடி வருகிறது. இதில் குளித்தால் தீராத எந்த வியாதியும் தீர்ந்துவிடும் என்று சொல்கிருர்களாம்.

''ஆனுல் நாங்கள் இதில் குளிக்கவில்லை. குளிக்க வேண்டிய அவசியமும் எங்களுக்கு ஏற்படவில்லை'' என்ருர் பத்மினி.

சகோதரிகளிடமிருந்து கிளம்புவதற்கு முன்னுல் கடைசியாக பத்மினியிடம் ஒரு கேள்வி கேட்டேன்.

''உங்கள் எதிர்காலக் கணவரைப் பார்க்கவே நீங்கள் சிங்கப்பூர் போனதாகச் சிலர் சொல்கிருர்களே, இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''சிங்கப்பூரில் போய் இறங்கியதும் விமான நிலையத்திலும் பலர் இதைக் கேட்டார்கள். ஆனுல் இந்தியாவில் கிடைக்காத மாப்பிள்ளையா சிங்கப்பூரில் கிடைக்கப் போகிருர்?'' என்று பதில் சொன்ஞர் பத்மினி.

இம்முறை சகோதரிகள் சென்றபோது ரீடிப்பூஷன், ரேடியோ மலாயா இரண்டிலும் பேட்டி அளித்து பேசினுர்கள். இரண்டும் ஒலிபரப்பப்பட்டன. தவிர பத்திரிகைகளும், பத்திரிகை உலக நண்பர்களும் அவர்களுக்குப் பெரிதும் ஆதரவாக இருந்து வந்தார்கள்.

''இவர்கள் செய்த உதவியை நாங்கள் மறக்க முடியாது!'' என்று எங்களுக்கு விடையளிக்கும் போது கூறினுர்கள் சகோதரிகள்.

இம்முறை அவர்களது பிரயாணம் ரசமாகவே அமைந்திருந்தது.

---


## வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான் : தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

**வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.**













ஏ. எஸ். மேனன



முன் ஏழு பக்கங்களில்
நீங்கள் பார்த்தவை!

# அவள் யார்

...படக் காட்சிகள்...

சுதர்சனம் பிக்சர்ஸ் தயாரிப்பு

B & W
NEGATIVE

POSITIVE

AGFACOLOR

SOUND

DUPLICATING

Agfa

## 35mm and 16mm
## Raw Cinefilm
## for all purposes

**AGFA PICTURE NEGATIVE FILMS:**
PANKINE K and ULTRARAPID

**AGFA SOUND RECORDING FILMS:**
Tf 4 and Tf 6

**AGFA FINEGRAIN RELEASE POSITIVE FILM**

**AGFA DUPLICATING NEGATIVE FILM**
**AGFA DUPLICATING POSITIVE FILM**

"AGFACOLOR" Negative Type B. 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

*For particulars please write to:*
*The Sole Importers & Distributors:*

**REGE CINEFILMS PRIVATE LTD.**
198, Jamshedji Tata Road, Bombay-1

*Branches:*
31, Chittaranjan Avenue, Calcutta-12
202, Mount Road, Madras-2

# தபால் பெட்டி

சினிமாப் பத்திரிகைகள், நடிகர்கள், இயக்குநர்கள், படாதிபதிகள், ரசிகர்கள் யாவரும் ஒரு குழு அமைத்து நிதி சேர்க்க வேண்டும். அரசாங்கத்தின் மூலம் இந்தப் பணம் குழுவின் சிபாரிசுடன், கலைஞர்களுக்கு உதவியாகக் கொடுக்கப்படலாம். இதன் மூலம் யாவருக்கும் எல்லோரும் உதவி செய்ததாக ஆகும்.

எஸ். வேணுகோபால்,
தென்காசி.

### * இது அவசியம்

ஒரே நடிகர் பல படங்களில் நடிப்பது பற்றிப் பலர் கூறுகிறார்கள், அது தவறு என்று. இன்று நிலை மாறியிருக்கிறது. ஒரு கதாசிரியர்—வசனகர்த்தா இருபது படங்களில் பொறுப்பேற்கிறார். டைரக்டர், பாடலியற்றுபவர், சங்கீத டைரக்டர் எல்லோருமே இப்படித்தான். இதனுடன் இப்போது ‘குழுக்கள்’ ஏற்பட்டிருக்கின்றன. கதை முதல் காபி கொடுப்பது வரை ‘யூனிட்டுக’ளின் பொறுப்பில் இருக்கின்றன. இதனால் பல திறமைசாலிகள் வெளிப்படும் சந்தர்ப்பமே இல்லாமலிருக்கிறது.

வினஸ் பிக்சர்ஸார் துணிச்சலுடன் ஸ்ரீதரை டைரக்டராக்கினார்கள்; ராஜாவை சங்கீத டைரக்டராக்கினார்கள். எம். ஜி. ராமச்சந்திரன் துணிந்து வர்ணப்படப் பகுதி உட்பட்ட முழுப் படப்பிடிப்புப் பொறுப்பையும் ஜி. கே. ராமுவிடம் விட்டார். இதைப் போல் பலர் முன்வரவேண்டும். பெரிய ஸ்டுடியோ முதலாளிகள் இளைஞர்களை உற்சாகமூட்ட வேண்டும். புகழ் பெற்றவர்களைக் கொண்டே எல்லாம் செய்துவிட முயற்சிப்பது நல்லதல்ல. இதனால் நாளடைவில் திறமைக் குறைவு ஏற்பட வழி உண்டாகி விடும்.

ஆர். ஜி. ராஜ்,
ஈப்போ, மலாயா.

### * ஒரு சொல்!

ஆங்கில, வடநாட்டு நாகரிகமெல்லாம் தமிழ்ப் படவுலகிலும் பரவி வரும் விபரீதம் கண்டு மிகமிக வருந்துகிறோம். வடநாட்டு நடிகைகளை மிஞ்சும் விதத்தில் தமிழ்நாட்டு நடிகைகள் ஆடை விஷயத்தில் கருணையுடன் நடந்து கொள்ளுகிறார்கள். ரவிக்கை இன்றி படங்களில் நடிப்பது ஒன்றுதான் இல்லாமலிருந்தது. இப்போது அந்தக் குறையும் தீர்ந்து விட்டது! படவுலகிற்கு இது நல்லகாலம் அல்ல. தமி ப்படவுலகம் போகும் போக்கு விபரீதமாக இருக்கிறது. இதைப் பார்த்துத்தான் கண்டிக்கும் முறையில் சினிமா ஒழிய வேண்டுமென்கிறார்கள் சிலர். அதற்கேற்றாற் பால் சோளியின்றி நடிக்க முன் வருகிறார்கள் சில நடிகைகள். பெண்கள் கவர்ச்சிகரமாகத் தோன்ற பல வழிகளிருக்கின்றன. ரவிக்கையில்லாமல் நடிக்க முயற்சிப்பது அவற்றுள் ஒன்றாக இருக்க வேண்டாம்.

எஸ். எஸ். மரூது,
அயன்புரம்.

### எல்லோரும் வாருங்கள்

நடிகர்களுக்கு அரசாங்கம் ‘உதவிப்பணம்’ கொடுக்க முற்படுவதால் விஷயம் தீர்ந்து விடாது.

### இது கேவலம்

பீஸ்கட் டப்பாவிலிருந்து பீடி வரை எல்லா விளம்பரங்களிலும் நடிக நடிகையரின் படங்கள் இடம்

* இக்குறியிட்ட இரண்டு கடிதங்களுக்கு தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

பெறுகின்றன. பல கோணங்களில் ஆபாசமான முறையில் இந்த விளம்பரங்கள் செய்யப் படுகின்றன. இதனால் நடிக, நடிகையரைப் பற்றிக் கேவலமான எண்ணம் நல்லவர்களிடையே ஏற்பட ஏதுவாகிறது. இவற்றுள் எத்தனை படங்கள், சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியுடன் பிரசுரிக்கப் படுகின்றன? அரை நிர்வாணமாக நடித்தாவது புகழ்பெற முடியுமென்றால் நான் தயார் என்ற தோரணையில் நடிப்பது போதாதென்று இப்படிப்பட்ட விளம்பரங்களுக்குப் படமும் அனுமதியும் தருவது முறையா? இது கேவலமானதல்லவா?

எஸ். ஜோசப்,
வதுளை—இலங்கை.



இருவரும் இப்படிப் பார்ப்பதற்குக் காரணம் எதுவாக இருக்குமோ?—ஸாரதியின் 'பாக்ய தேவதை'யில் ராஜசுலோசனா—சாவித்திரி.

## மூவரில் ஒருவர்

திரையுலகின் மூவேந்தர்களென எம். ஜி. ஆர். சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் என்று பத்தி



'நாகசம்பா' ஹிந்திக் கதையை லலிதா மூவீஸார் ''பாம்பை மணந்த பதிவிரதை'' என்று தமிழாக்கி வருகிறார்கள். அப்படத்தில் காமூ.

ரிகைகள் பறை சாற்றுகின்றன. இவர்களில் எம். ஜி. ஆர். புரட்சி நடிகர் என்றும், சிவாஜி கணேசன் நடிகர் திலகம் என்றும் பட்டப் பெயர் பெற்றுள்ளார்கள். அடுத்த படியாகப் புகழ்பெற்றிருக்கும் எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு இலட்சிய நடிகர் எனப் பட்ட மிருக்கிறது. ஆனால் மூவேந்தரில் ஒருவர் எனக் குறிப்பிடப்படும் ஜெமினி கணேசனுக்கு மட்டும் பட்டப் பெயர் போடுவதில்லையே ஏன்? ஜெமினி கணேசன் சமீப வெளியீடுகளான 'நல்ல தீர்ப்பு', 'கல்யாண பரிசு' இவற்றில்பிரமாத மாக நடித்து ரசிகர்களின் பேராத வைப் பெற்றிருக்கிறார். அப்படி யிருக்க அவருக்குப் பட்டப் பெயர் தாங்கும் தகுதி வரவில்லையா? சிந்தித்துப் பார்க்க வேண்டும் யாவரும்.

ந. சரஸ்வதி,
அரிசிப்பாளையம்.

[ஈரோடு அன்பர்கள் ''நடிப்புச் செல்வன்'' என்று பட்டமளிக்க முன் வந்ததையே ஏற்கவில்லை, ஜெமினி கணேசன். பட்டம் இருப் பதையும் அவர் விரும்பவில்லை. இதனால்தான் ஜெமினி கணேசன் என்று மட்டும் குறிப்பிடுகிறோம்.
—ஆ-ர்]



ரவி பிலிம்ஸாரின் ''பச்சை மலைக் குறத்தி'' படத்தில் என். டி. ராமராவ் இப்படிக் கவர்ச்சி கரமாகத் தோன்றுகிறார்.



இவரைப் பார்த்தால் அப்பாவியாகத் தோன்றுகிறதல்லவா? மோகேஷஸ்வர் சித்ராவின் 'அருந்ததி'யில் பாலசந்தர்.

### எதிர்பார்க்கலாமா?

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் நடித்திருக்கும் ''வீரபாண்டிய கட்டபொம்மன்'' படவுலகுக்கே—ஏன் இந்தியாவுக்கே பெருமை தருவதாக இருக்கிறது. சர்வதேசப் படவிழாவுக்கு எதையெதையோ அனுப்பும் அரசினர், கட்டபொம்மனை ஆங்கில விளக்க உரையுடன் அனுப்ப வேண்டும். இது என் போன்ற பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பேராவல். தமிழில் சிறந்த படங்கள்—ஒரு நல்ல குறிக்கோளுடன் தயாரிக்கப் பட்டாலும் வரிவிலக்கு அளிக்காது ஓரவஞ்சனை செய்யும் அரசாங்கம், நாட்டின் பெருமையை எடுத்துக் கூறும் கட்டபொம்மன் படத்தையாவது சர்வதேசப் படவிழாவுக்கு அனுப்ப முன் வருமா?

ஆ. தமிழருவி,
உப்பிலிப்பாளையம்.



இந்தப் போஸ் நல்லா இருக்கா? நாராயணன் கம்பெனி படத்தில் நடித்து வரும் நடன நடிகை சந்திரகலா.

## முன் வருவார்களா?

சென்னையில் எத்தனையோ இந்திப் படங்கள் மாதக் கணக்கில் ஓடுகின்றன. ஆனால் இங்கு வடவரின் எண்ணிக்கை குறைவு. வடநாட்டின் முக்கிய நகரங்களில் ஏராளமான தமிழர்கள் வசிக்கிறார்கள். ஆனால் அங்கு தமிழ்ப் படங்கள் வாரம் ஒரு காட்சிமட்டும் காட்டுகிறார்கள். இதனால் பலர் படங்களைப் பார்க்க முடியாமல் போய் விடுகிறது. தமிழ்ப்பட முதலாளிகள் ஏராளமாகச் செலவு செய்து படங்களைத் தயாரிக்கிறார்கள். அவற்றை வட நாட்டில் திரையிட்டால் நிறைய வருமானம் கிடைக்கும். ஆனால் வடநாட்டுத் தியேட்டர்களில் இப்படங்கள் வாரம் ஒரு முறை ஒரு வேளை மட்டும் காட்டப்படுகின்றன. இந்த நிலை மாற தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் எப்படியும் வடநாட்டு நகரங்களில் சொந்தத் தியேட்டர்களைக் கட்ட முன்வரவேண்டும். அப்போது நம் படங்கள் டெல்லி பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலும் ஒரே சமயம் திரையிடப்பட்டு, வருமானமும் பெருகுமல்லவா? படாதிபதிகள் முன் வருவார்களா?

ஜி. இராமசாமி,
கல்கத்தா-29.

## நிறைவேறுமா?

சமீபமாகப் படவுலகில் காப்பியடிக்கும் கலை பெரும் அளவில் வளர்ந்து விட்டிருக்கிறது. திறமை குறைந்து எதுகை மோனைக்காக—டப்பிங் படங்களில் அதுவுமில்லாமல்-பாடல்கள் அமைப்பது வழக்கமாகி விட்டது. இந்தக் கும்பலுக்கிடையே தோன்றியுள்ள சில திறமையாளர்களும் இல்லாமலில்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். சிவாஜி கணேசனுக்கு, 'நடிகர் திலகம்' என்ற பட்டமளித்த தாங்கள், எங்கள் விருப்பப்படி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு—செவியுடன் கருத்துக்கும் இன்பந்தரும் பாடல்கள் இயற்றுபவருக்கு—"கவிஞர் திலகம்" என்ற பட்டத்தைக் கொடுத்துக் கௌர



"என்னங்க, இதுலெ ஒண்ணும் வரல்லே!"—ஸ்ரீ ஜெய மாருதி பிக்சர்ஸ் 'படிதாண்டா பத்தினி'யில் ராஜகோபால், புதுமுகம் லலிதா.



சவுத் இந்தியன் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷனின் 'வனமோஹினி'யில் சிங்கப்பூர் வசந்தா நடனமாடுகிறார்.

விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கவேலுவும் நண்பர்களும்,
நாமக்கல்.

[அங்ஙனமே ஆகுக! — ஆ-ர்.]

## திரைக்கதை

இப்போது வரும் பெரும்பாலான படங்கள் தோல்வியுறுகின்றன. இதற்குக் காரணம் கதையமைப்புத்தான். மேல்நாட்டுப் படங்கள் ஏன் வெற்றி பெறுகின்றன? 'டென் கமாண்ட்மெண்ட்ஸ்', 'பிரிட்ஜ் ஆன் தி ரிவர் க்வாய்' போன்ற படங்களில் அனுவசியமான கூத்தும், பாடல்களும், அர்த்தமற்ற சம்பவங்களும் இருந்தனவா? அருமையான கதைதான் இவற்றின் வெற்றிக்குக் காரணம். கதை நன்றாக இருந்துவிட்டால் மற்ற அம்சங்கள் ஏறத்தாழ இருந்தாலும் வெற்றி கிட்டுவது நிச்சயம். கதை நல்லதாக இருந்து மேற்கொண்டு அழகு செய்தால் சிறப்பாக இருக்கும். கதைகள் நல்ல கருத்துடைருப்பதுடன் சமூக வாழ்வைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். வெறும் கற்பனை காசுதராது. சம்சாரம், முதலாளி, குலதெய்வம், கல்யாணபரிசு போன்ற படங்கள் கதைக்காக வெற்றி பெற்றவை. தவிர கட்டபொம்மன், மதுரை வீரன், குலேபகாவலி, மலைக் கள்ளன், ராமாயணம் போன்றவை கதை யம்சத்தோடு கவர்ச்சியும் சேர்ந்ததால் வெற்றி பெற்றன. கதை முக்கியம். பிறகு அழகான யுவதிக்கு, ஆடை ஆபரணம், கூந்தல் அலங்காரம் முதலிய வற்றால் அலங்காரம் செய்யப்படுவதுபோல வசனம், பொருத்தமான காட்சியமைப்பு, நல்ல படப்பிடிப்பு, ஒலிப்பதிவு இவற்றால் கவர்ச்சியை அதிகப்படுத்தலாம். கதை உயிர் என்றால் வசனம் அதன் உருவம். ஆகவே கதையின் கால வேறுபாடுகளுக்குத் தக்கபடி வசனம் அமைக்கப்பட வேண்டும். ஆகவே நல்ல கதையைத் திரைக்கேற்றபடி அமைத்துப் படத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும். யாவருமறிந்த விஷயங்கள் இவை; ஆனால் படாதிபதிகள் மனதில் பதியாத இது பதிந்தால் படவுலகின் எதிர்காலம் மகத்தானதாக இருக்கும்.

கே. எஸ். சக்ரவர்த்தி,
மதுரை.

## இந்திய அரசுக்கு

சிவாஜி கணேசன்-பந்துலு இவர்கள் பெருமுயற்சியால், 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படம் தயாராகி வெற்றி முழக்கமிட்டு வருகிறது. நமக்குச் சுதந்திரம் கிடைத்தபின் மக்களின் பிரதிநிதிகள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். தென்னக சரித்திர வரலாற்றிலே முதல் முழக்கம் செய்த மாவீரன் கட்டபொம்மனின் பெயருக்குத் தனியிடம் உண்டு. அவனைப் போன்ற மாவீரர்களின் படங்களைத் தபால் பில்லைகளாக வெளியிட மத்திய அரசினர் முன் வரவேண்டும்.

பாஸ்கர குமார்,
கோலார் தங்கவயல்.



சிட்டடெல் பிலிம் கார்ப்பொரேஷ
னின் "விஜயபுரி வீரன்" படத்தில்
அசோகன் - ஹேமலதா இருவ
ரும் இப்படித் தோன்றமாட்
டார்கள்!





தியாகராஜனும் அவரது சகோதரர்களும் தயாரிக்கும் "பாஞ்சாலி" தமிழ் சமூகப் படம் வி. ஸ்ரீநிவாஸன் டைரக்ஷனில் சேலம் ரத்னு ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும் எம். ஏ. வி.யின் இந்தப் படம் இம்மாதம் திரையிடப்படுகிறது. மனோகர், தேவிகா, விஜயலக்ஷ்மி, முத்துலக்ஷ்மி, பக்கிரிசாமி, டி.கே. ராமச்சந்திரன், வி.கே. ராமசாமி, கன்னையன் முதலியோர் நடித்து வருகின்றனர்.





# வரச டகம்

'நவரச நாடகம்' வரிசையில் இந்த இதழில் இடம் பெறுகிறார் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன். 'பராசக்தி' மூலம் பட வுலகிற்கு அறிமுகமாகி எல்லாவித பாத்தி ரங்களிலும் நடிக்கும் வாய்ப்பு பெற்றவர் அவர்.

**சாந்தம்: சந்திரசேகரன், குணசேகரன் இருவருக்கும் நடுவே பிறந்தவன் ஞானசேக ரன். பொறுமையே பூஷணம் என்பதறிந்த உத்தமன் அவன்.**

**ஞானசேகரன் முடவனாகிறான்; பிச்சைக்கார னாகிறான். ஆனால் அவன் காலத்தின் மாறுதல் களினால் பாதிக்கப்படவில்லை. சுட்டாலும் வெண்மை தரும் சங்கைப்போல், கெட்டாலும் அவன் நேர்மையோடு வாழ்கிறான். பிச்சைக் காரர்கள் மகாநாடு நடத்த முற்படுகிறான்.**

**ஞானசேகரனின் பாத்திரத்தில் முதன்முத லாக அறிமுகமாகிய ராஜேந்திரன் முதல் பட மான 'பராசக்தி'யின் மூலமே ரசிகர்களுக்கு அறிமுகமாகி விட்டார். சாந்த ரசத்தைத்தான் எவ்வளவு இயற்கையாக அதில் சித்தரித்தார்.**

தயாரிப்பு: **பேசும் படம்**
ஸ்டுடியோ: **அண்ணா இல்லம்**
நடிப்பு: **எஸ். எஸ். ராஜேந்திரன்**
புகைப்படம்: **டி. ஐ. சந்தாமியான்**
ஓவியம்: **வரன்**
அமைப்பு: **எஸ். வி. சம்பத்குமார்**

## அற்புதம்

அவன் பெயர் முருகன். சமூகத் தொண்டன்போல் நடிக்கும் கொடியவனிடம் அவன் பணியாற்றி வருகிறான்.

நாட்டியக்காரி மோகனா கொடியோனின் வீட்டில் தங்குகிறாள். அவளுக்குத் தேவையானவற்றைக் கவனிக்க கொடியோனால் நியமிக்கப்படுகிறான் முருகன்.

நாட்டியராணி, வாட்ட சாட்டமாக வளர்ந்திருக்கும் வாலிபனிடம் மனம் பறிகொடுக்கிறாள்; சரசமாடுகிறாள். முருகன் ஆச்சரியப்படுகிறான்! தன் எதிரே நிகழும் அற்புதம் கண்டு ஆனந்தப் பரவசமடைகிறான்! பணமும் அழகும் இளமையும் கொண்ட கட்டழகி ஏழையான தன்னை விரும்புவதென்றால்....?

அற்புத ரசத்தை எஸ்.எஸ். ஆர். அருமையாகப் பிரதிபலித்தது பி. எஸ். வி. பிக்சர்ஸாரின் "பிள்ளைக் கனியமுது" படத்தில்தான்.





## கோபம்

ராஜய்யா மிகவும் நல்லவன். குடும்பத்திலே பற்றுள்ளவன். அண்ணனிடத்திலும் அண்ணியிடமும் மரியாதையும் பக்தியும் கொண்டவன். பெரியண்ணன் சொல்படி கேட்காமல் மாமியார் வீட்டு மருமகனாக வாழும் சின்ன அண்ணனிடம் அளவு கடந்த கோபம் அவனுக்கு. அதையே சகித்துக் கொள்ளுகிறான் அவன். ஆனால் குடிகெடுக்கும் கோடரியாக வரும் மனைவி மங்களத்தின் மேல் அவனுக்கு ஏற்படும் கோபத்தைக் கண்டு நாம் கூட அல்லவா பயந்து விடுகிறோம்?

ராஜேந்திரன் "குலதெய்வம்" படத்தில் ராஜய்யாவாகத் தோன்றி திறமையை வெளிப்படுத்தி நக்ஷத்திர ஸ்தானத்தை எட்டிப் பிடித்தார். எல்லா ரசங்களுக்கும் அதில் அவருக்கு இடமிருந்தாலும் பாத்திரத்தின் தன்மையை மிக நன்றாகப் பிரதிபலிக்கும் கோப (ரௌத்திர) ரசத்தில் திறமை நன்கு பளிச்சிடும் வகையில் நடித்தார்.



## கருணை

வஸந்தன் ஒரு பெரிய தொழிற்சாலையின் முதலாளி. மேனாடுகளில் சுற்றுப்பயணம் செய்து திரும்பும் அவனை ஓட்டல் தொழிலாளி பூங்காவனம் சந்தித்துப் பேசுகிறான். தொழிலாளிகளிடம் கருணையுள்ளத்தோடு நடந்து கொள்ளவேண்டும் என்பதை எடுத்துக் கூறுகிறான் பூங்காவனம்.

ஊர் திரும்பும் வஸந்தன் தன் மானேஜர் தொழிலாளருக்குத் தரும் துன்பங்களை எண்ணி மனம் புண்ணாகி முழு விவரமறியத் தீர்மானித்து மாறு வேஷமிட்டு, தொழிலாளியாகத் தன் கம்பெனியிலேயே சேருகிறான். தொழிலாளிகள் யாவரையும் அவன் சந்திக்கிறான். யாவருக்கும் தன்னாலியன்றதையெல்லாம் கருணையுடன் செய்து வருகிறான்.

எம்.ஏ.வி. பிக்சர்ஸின் 'முதலாளி' படத்தில் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் கருணா ரசத்தைச் சிறப்பாகப் பிரதிபலித்தார் அல்லவா?

## வெறுப்பு

வேலன் தன் தங்கை மருதியிடம் உயிரையே வைத்திருக்கிறான். அவளது திருமணத்தின்போது கலாட்டாவாகி விடுகிறது. சகோதரியின் மணவாழ்வு கானல் நீரானதாக வேலன் நினைப்பதால், எரிமலையாகி வெடிக்கிறான். பலன்–அவன் சிறை செல்கிறான்.

தான் பழிவாங்க வந்தவன் வீட்டிலே தன் சகோதரியைக் காண்கிறான். தனது ஆசைக்கனவு பலித்ததை எண்ணிப் பூரிப்பதற்குப் பதில் சகோதரியிடம் வெறுப்பு கொள்கிறான். எவன் ரத்தத்தை சந்தனமாகப் பூசிக்கொள்ள வந்தானோ, அவனுடைய மனைவியாகத் தனது சகோதரி திகழ்வதறிந்து வெறுக்கிறான். உடன்பிறந்த சகோதரி, உயிர் எல்லாவற்றையுமே வெறுக்கிறான்.

ஏ. கே. வேலனின் "தை பிறந்தால் வழி பிறக்கும்" படத்தில் வேலனாகத் தோன்றி வெறுப்பு ரசத்தை அருமையாகச் சித்தரித்திருக்கிறார் எஸ். எஸ். ராஜேந்திரன்.





## காதல்

காதல் (சிருங்காரம்) ரசம் என்று
நான் குறிப்பிடும் போதே 'தேடி
வந்த செல்வம்' படம்தான் ரசிகர்கள்
கண்முன் வந்து நிற்கும்! கண்மண்
தெரியாமல் சிதம்பரம் சண்பகத்
துடன் காதல் செய்ததை, கொஞ்சம்
அளவு கடந்தது என்று வர்ணித்த
வர்களும் உண்டு. என்றாலும் இளம்
உள்ளங்களைக் கிளுகிளுக்கச் செய்
யும் காதல் காட்சிகளில் எஸ். எஸ்.
ராஜேந்திரனும் ராஜசுலோசனாவும்,
படம் பார்க்கிறோம் என்ற உணர்ச்
சியே யாருக்கும் ஏற்படாத வகை
யில் அவ்வளவு 'ப்ரீ'யாக நடித்
தார்கள்!

சிதம்பரம் உத்தமன். தன் காதலி
சண்பகம்தான் தன் இன்ப உலகம்
என்று நினைக்கிறான். ராஜேந்திரனுக்கு
இப்படத்தில் பலதரப்பட்ட குண
விசேஷக் காட்சிகளிருந்தாலும்
சிருங்கார ரசக்காட்சிகளில் மிகச்
சிறப்பாக நடித்தார். யாரும் ஏற்
கும் உண்மை இது!



## பயம்

கோபாலப்பா சென்னைக்கு வரு
கிறான். அவன் தகப்பனாரும் குடும்பத்
தோடு வந்து விடுகிறார். அவன்
தங்கை ஒரு குறும்புக்காரி. கோபா
லப்பாவுக்கு ஒரு காதலியும் உண்டு
என்பதை அறிந்து அப்பாவிடம்
சொல்லி விடுவதாகப் பயமுறுத்தி
விடுகிறாள்.

தனது தகப்பனார் என்று, குண்டு
மணியை பஸவப்பாவிடம் அறிமுகப்
படுத்துகிறான் கோபால். ஆனால்
குண்டுமணியை கலாநிகழ்ச்சி நடை
பெறும் மேடையில் கோபாலப்பா
வின் தந்தை என்று அறிமுகப்
படுத்தி விடுகிறார்கள். கோபாலின்
தகப்பனார் மேடைக்கு வர, எல்லாம்
ஒரே களேபரமாகி விடுகிறது. கோபா
லப்பா நடுநடுங்கிப் போய் விடு
கிறான். சப்த நாடியும் ஒடுங்கி வெல
வெலத்துப் போகிறான். பயம் (பீபத்
ஸம்) ரசத்தை இலட்சிய நடிகர்
திறம்பட பிரதிபலித்தது நாசுவின்
"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"
படத்தில்தான்.

## ஹாஸ்யம்

'மாமியார் மெச்சிய மருமகள்'
தமிழ்ப்படம் திரையிடப்பட்டதும்
ராஜேந்திரனுக்கு ஹாஸ்ய பாகத்
தில் தகுதி உண்டு என்பதை யாவ
ரும் ஏற்ருர்கள். அந்தப் படநெடு
கிலும் அவரது ஹாஸ்ய நடிப்பு தர
மாக இருந்தது. குறிப்பிடத்தக்க
விஷயமென்னவென்ருல், இப்படத்
தில் அவரைத் தவிர வேறு காமெடி
யன் கிடையாது என்பதுதான்.

வசந்தா தன்னைக் காதலிக்கிருள்
என்றறிந்த குஷியில் கண்ணன், தன்
நண்பன் அறையை தன்னுடையது
என்று நினைத்து பூட்டையே
உடைத்து விடுகிருன். பங்கஜம்
குழந்தையை தன் குழந்தையாக
நடிக்க வைக்க முயலுவது அவ
னுக்கே ஆபத்தாக முடிகிறது. குழந்
தைக்கு நீ தகப்பன். நான் இதைப்
பெற்றவள். ஆகவே நீ என் கணவன்
என்கிருள் பங்கஜம். தவிக்கிருன்
கண்ணன். சிரிக்கிறோம் நாம். இப்படி
ஒவ்வொரு கட்டத்திலும் ஹாஸ்ய
பாகத்தில் சிறப்பாக நடித்திருக்
கிருர். எஸ். எஸ். ஆர்.



## வீரம்

வில்லாளன் என்ற பெயருடைய
இளவரசனுக்கு வீரன் என்று பெய
ரிடுகிருன் குணசேகரன். பிறகு
அவன் மாபெரும் வீரனுகி 'வேங்கை
மலைவீரன்' என்று பாராட்டப்படு
கிருன். தனியொருவனுகப் பலபேரி
டம் போரிடும் அவன், எல்லோரும்
பயப்படும்போது கூட தர்மவீரனுக
நடந்துகொண்டு அரசன் முன் தன்
கட்சியை எடுத்துரைக்கிருன்.

தந்திரம், மனவலிமை, தோள்
வலிமை, போர்முறைப் பயிற்சி
ஆகிய எல்லாம் நிறையப் பெற்ற
வீரன், அடிபட்டுக் கிடக்கும்போது
யாரென்றறியாமல் தாயாலேயே
ஆதரிக்கப்படுகிருன்; தன் தாயா
லேயே காட்டிக் கொடுக்கப்படும்
போதும் நன்றி தெரிவித்துப் போகி
ருன் அவன்.

ஒரு சுத்தவீரனின் பாத்திரத்தில்
நடித்து ராஜேந்திரன் புகழும் வெற்றி
யும் பெற்றது, மாடர்ன் தியேட்டர்
ஸின் "பெற்ற மகனை விற்ற அன்னை"
படத்தில்தான்.






சமாதானத்தையும், சமரசத்தையும் குறிக்க உலகமெங்கும் உபயோகிககப்படும் சின்னம் வெண்புருதான். மகத்தான நிகழ்ச்சிகளைக் கொண்டாட வெள்ளைப் புருக்களைப் பறக்க விட்டுக் குதூகலிப்பது வழக்கம். மேட்டூர் மல்களையும், லாங்கிளாத்தையும் பொறுத்தவரை வெள்ளைநிறம் ஒரு பாரம்பரிய அம்சமாகும். திண்ணமான நெசவு, மிருதுத்தன்மை, நீடித்த உழைப்பு ஆகியவற்றிற்குப் பிரசித்திபெறறவை இவை.

உங்கள் நகரத்திலும், கிராமத்திலும், தேர்ந்தெடுக்கப்பட்ட வியாபாரிகள் மேட்டூர் அடையாளத்தைக் காட்சிக்கு வைத்து, மேட்டூர் மல்களையும், லாங்கிளாத்தையும், நிர்ணயிக்கப்பட்ட சிக்கனமான விலைகளில் விற்கிறார்கள்.

METTUR INDUSTRIES LTD
METTUR MULL

# மேட்டூர் மல்கள் & லாங்கிளாத்

தயாரிப்பவர்கள்:

**மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட், மேட்டூர் அணை R. S.—சேலம் ஜில்லா**

மானேஜிங் எஜெண்டுகள்:

**W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி (பிரைவேட்) லிமிட்டெட், மதராஸ்-1**

EP



ஸேவாஸ்கிரீன்ஸ்

# நாலு வேலி நிலம்

காட்சிகள்

PSR

















சேவாஸ் ஸ்கிரீன்ஸ் தயாரித்திருக்கும் "நாலுவேலி நிலம்" படம் கிராமீய சூழ்நிலையைக் கொண்டு பின்னப்பட்டிருக்கும் அருமையான கதையமைப்பு கொண்டதாகும். பண்பட்ட நடிகர்கள் பலர் நடித்திருக்கும் இதில் உணர்ச்சிமயமான கட்டங்கள் பலவுண்டு.

வி. ஸ்ரீநிவாஸன் டைரக்ஷனில் வளர்ந்திருக்கும் இத்தப்படம் ஜனரஞ்சகமாக இருக்குமென்பது நிச்சயம்.




M.A.V. PICTURES SALEM
ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும்
எம்.ஏ.வி. பிக்சர்ஸ்...
பாஞ்சாலி
படக்காட்சிகள்
BHARATH








ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும் எம்
ஏ வி யின் ''பாஞ்சாலி'' சமூகப்
படம் ஜனரஞ்சகமான முறையில்
தயாரிக்கப்பட்டிருக்கிறது மனோ
கர் புதுவித பாத்திரத்தில் தோன்
றிச் சிறப்பாக நடத்திருக்கிறார்


ரோஜா
மலர்
போன்ற
வதனம்
பட்டுப் போன்ற மென்மையான
விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப்
பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும்.
இணைபிரியாத அதன் ரோஜா மணம் கமகமவென்று
மணிக்கணக்காக உங்கள் மீது கமழ்ந்திருக்கும்.
விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்
வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்
லண்டனிலுள்ள விநோலியா கம்பெனி சார்பாக, இந்துஸ்தான்
லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
VRTP.3-50 TM

# கேள்வி பதில்

**ஏ. டி. மணி, மதுரை**

சிவாஜி வீட்டுக் கல்யாணத்திற்கு எம். ஜி. ஆர். அழைக்கப்பட்டிருந்தாரா? அவர் வந்தாரா திருமணத்திற்கு?

**திருமணத்திற்கு எம். ஜி. ஆர். அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் கால் எலும்பு முறிந்து மருத்துவ மனையில் இருந்ததால் எம். ஜி. ஆர். திருமணத்திற்கு வர இயலவில்லை. அவரது சார்பில் எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிர்வாக டைரக்டரான வீரப்பன் திருமணத்தில் கலந்து கொண்டு, ஒரு பரிசையும் சிவாஜியிடம் கொடுத்தார்.**



இப்ப என்னை அவர் நிச்சயம் விரும்புவார்!—பிரண்ட் பிக்சர்ஸ் "தங்கம் மனசு தங்கம்" படத்தில் எம். என். ராஜம்.

நீண்ட வசனங்கள் நம் தமிழ்ப் படங்களில் மட்டும்தான் வருகின்றனவா?

**அப்படியொன்றும் சொல்வதற்கில்லை. சமீபத்தில் வெளி வந்திருக்கும் 'கம்பல்ஷன்' என்ற ஆங்கிலப் படத்தில் ஒரு வழக்கு மன்றக் காட்சி வருகிறது. அதில் தோன்றும் நடிகர் ஆர்ஸன் வெல்ஸ் நீண்ட வசனம் பேசுகிறார். படத்தில் பனிரெண்டு நிமிஷங்கள் வரை இந்த வசனம் மட்டும் ஓடுகிறது! ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்டது இது.**

**வசந்தன், வசந்தாநகர்**

ஒருவர் புகழடைய பணமும் பக்க பலமும்தான் அவசியம் என்ற கூற்று உண்மையா?

**நாகரீக உலகில் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது!**

தமிழகத்தின் பண்பையும் கலாச்சாரத்தையும் தற்கால நடிக, நடிகையரால் காப்பாற்ற இயலுமா?

**படங்களில்தானே சொல்கிறீர்?**

**விசாலாட்சி, வள்ளியூர்**

பழைய ஆர்யமாலா தமிழ்ப் படத்தைத் தயாரித்தவர்கள் நாராயணன் கம்பெனியாரா, இல்லை பக்ஷிராஜாவா?

**ஆர்யமாலாவைத் தயாரித்தது பக்ஷிராஜாதான். அதன் விநியோக உரிமையை நாராயணன் கம்பெனி பெற்றிருந்தது.**

**இ. மா. காந்தி, இருமந்தூர்**

கலைஞன், கவிஞன் இவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை என்ன?

**கலைஞன் என்ற அரங்கத்தில் ஒரு அங்கம் வகிப்பவன் கவிஞன்.**

தணிக்கைக்குச் சென்ற சிவகெங்கைச்சீமை என்னவாயிற்று?

**திரையிடப்பட்ட போது இல்லாத பாட்டு ஒன்று சேர்க்கப்பட்டது.**



ரவி பிலிம்ஸின் "பச்சைமலைக் குறத்தி" படத்தில் முக்காமல கிருஷ்ண மூர்த்தியும் அஞ்சலிதேவியும்

**கே. ஆர். பரமசிவம், பூலாம்பட்டி**

பல சூழ்நிலைகளின் காரணமாக வாழ்வின் மீது வெறுப்படைந்தேன். இந்நிலையில் என் அன்னையைக் காட்டிலும் என்மீது பன்மடங்கு பாசமும் அன்பும் கொண்ட என் அண்ணியின் செய்கைதான் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இன்று போலவே என்றும் அவர்களது பாசமும் அன்பும் என்னை வாழவைக்குமா?

**உங்களுக்கு அண்ணியின் பாசத்தையும் அன்பையும் விட தன்னம்பிக்கைதான் தேவைப்படுகிறது.**

**மணிவண்ணன், காஞ்சீபுரம்**

எம். ஜி. ஆர். தன் முதற்கண் தெய்வமாக வணங்குவது யாரை?

**காலம் சென்ற அவரது அன்னையாரை. கால் எலும்பு முறிந்து மருத்துவ மனையில் கிடந்தபோது, அங்கேயும் அவரது அன்னையின் படத்தைத்தான் வைத்து, பூமாரி சொரிந்திருந்தார் எம். ஜி. ஆர்.**

**ஏ. நாகலக்ஷ்மி, பொள்ளாச்சி**

சினிமாவில் அதிகம் படித்த நடிகை யார்?

**வசனத்தை சட்டென்று நினைவில் நிறுத்திக் கொள்ளாத நடிகைகள் தான் அதிகம் படிக்கிறார்கள் அதை.**

'லொள் லொள்' ராஜாமணியைப் பற்றிச் சில வரிகள் கூறலாம்?

**'லொள் லொள்' என்ற பட்டப் பெயர் அவருக்கு அவசியம் இல்லாதது மட்டுமல்ல. வேறு எதையோ கூட நினைவு படுத்துகிறது!**

### வி. எம். ரத்னம், திருச்சி

தமிழ்ப்படக் கதாநாயகனுக்கும் ஹிந்திப்படக் கதாநாயகனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**தமிழ்ப் படக் கதாநாயகனுக்கு வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதில்லை; அங்கே, வாங்கும் கூலிக்கு ஏற்ப வேலை அமைவதில்லை.**

### வி. மோகன், பெருந்துறை

புகழேணியின் இறுதிப்படி எது?

**ஆணவத்தின் ஆரம்பம்.**

### ந. அரங்கசாமி, விருதை

எம். ஜி. ஆர். அவர்கள் சொந்தத்தில் ஒரு ஸ்டூடியோ வாங்கி இருப்பதாகச் சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தனவே, உண்மையா?

**சென்னையிலுள்ள சியாமளா ஸ்டூடியோவை எம். ஜி. ஆர். வாங்குவதற்கான பேச்சுகள் நடைபெற்றனவே தவிர, செயலுருவில் எதுவும் முடியவில்லை.**

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பல்லடத்தில் ஒரு தெருவிற்கு 'எம். ஜி. ஆர். ரோடு' என்று பெயரிட்டிருக்கிறதே அப்பெயர் 'புரட்சி நடிக'ரைக் குறிப்பிடுவதா?

**படவுலகில் எம். ஜி. ஆர். என்றால் புரட்சி நடிகரைத்தான் குறிக்கும். ஆனால் இது எதைக் குறிக்கிறது என்பது தெரியாது!**

### டி. ஏ. ராஜப்பா, பேலூர்

கலைஞர்களுக்குத் தலைவன் யார்?

**பாராட்டும் பண்புள்ளம் கொண்ட ரஸிகன்.**

பத்மினிக்கு சொந்தக் குரலில் பாட வருமா?

**ஓ! சுருதி சேராமல், ராகம் இல்லாமல் வரும்!**

### கே. ரெங்கராஜா, இலங்கை

நரசுவின் 'ஸ்ரீவள்ளி' எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறாள்?

**மழலைப் பருவத்தைக் கடந்திருக்கிறாள்.**

சிவாஜி கணேசனின் உயரம் என்ன?

**நடிப்புத்துறையில் வேறு எவரும் அடைய முடியாத உயரம் அவருடையது!**



லிபர்டி பிக்சர்ஸ் தமிழாக்கி வரும் 'ராம ஆஞ்சநேய யுத்தம்' படத்தில் பிரேம் அதிப் - ஷாலினி

### சா. ரா. ரத்னம், சென்னை

புலித்தேவன் வரலாற்றைப் படமாக்கப் போகிறார்களாமே, புலித்தேவனாக நடிக்கப் போவது யார்?

**சகாதேவன் அல்ல.**

சந்திரபாபுவை எங்கே காணோம்?

**தன் 'மரகதத்'தை அடைய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.**

**ந. மங்கையர்க்கரசி, தஞ்சை**

நான் சினிமாவிற்கு கதை எழுத விரும்புகிறேன். எழுத வேண்டுமானால் எங்கு எழுத வேண்டும்?

**உங்கள் வீட்டிலேயே உள்ள ஒரு அறையில் உட்கார்ந்து எழுதலாமே!**

**எம். சகுந்தலா, டர்பன், தென் ஆப்ரிக்கா**

இங்கிருந்து வந்த ஒரு பெண் நடிகை சாவித்திரியை தன்னோடு நின்று படம் எடுத்துக் கொள்ளும் படிக் கேட்டும், சாவித்திரி மறுத்து விட்டதன் காரணம் என்ன?

**சாவித்திரி நின்று ஓய்ந்து, அப்போதுதான் உட்கார்ந்திருப்பார்!**

**வி. கோசன், வலம்புரி**

ஐந்தறிவுள்ள மனிதர்கள் பலர் நம் தமிழகத்தில் உள்ளனர். அவர்களை அநேகமாக எங்கே பார்க்கலாம்?

**பொதுக்கூட்டங்களில் - பிரசங்கிக்கு முன்னால் மந்தைகளாக.**

பத்தரை மாத்து தங்கம் படம் எடுத்தவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**படத்தலைப்பில் இல்லாத களங்கத்தை படவுலகுக்குக் கொடுத்து விட்டார்கள்.**

"அட ... செய் ... என்ன உலகம்..." என்று சொல்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**வாழ்க்கையில் ஏமாற்றப்பட்டவர்கள் என்று.**

**முத்தியாலு, அரிய பெருமானூர்**

எம். ஜி. ஆர். நடித்து அடுத்து வெளிவரப்போகும் படம் எது? எப்போது வரும்?

**எம். ஜி. ஆர். கால் எலும்பு முறிந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவர் படப்பிடிப்புக்கு அக்டோபர் மாத வாக்கில் செல்வார். அவர் உடனடியாக முடிக்கப் போகும் படம் 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' நவம்பரில் வெளிவரவிருக்கும் இதுதான் எம். ஜி. ஆர். நடித்து இவ்வாண்டு வரப்போகும் படமாகும்.**



சரவணா பிலிம்ஸ் 'பாகப் பிரிவினை'யில் என். லலிதா

**க. பழனியப்பன், ஊத்துக்குளி**

'மந்திரிகுமாரி' புகழ் ஜி. சகுந்தலாவின் விலாசம் என்ன?

**நியூ கிரி ரோடு, சென்னை-17.**

எம். ஜி. ஆருக்கு கார் ஓட்டத் தெரியுமா?

**அவர் ஓட்டி நான் பார்த்ததில்லை.**

**ந. எதிராசன், சென்னை**

'மாலா ஒரு மங்கல விளக்கு' படத்தில் வரும் நீர்வீழ்ச்சி எங்குள்ளது?

**மைசூரில்.**

நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியில் நடிகைகள் உள்ளனரா?

**அந்தப் பேச்சையே எடுக்காதீர்கள்! பொசுக்கி விடுவார்!**

ஜெமினி கணேசன் 10-6-59-ம் தேதி மாலை ஆறு மணிக்கு சென்னையிலுள்ள மகமத் இப்

ராஹிம் கம்பெனியில் ஒரு அட்டைப் பெட்டியுடன் சாமான் ஒன்றை வாங்கினார். அது என்ன?

**பெட்டிக்குள் இருப்பதைக் காண 'எக்ஸ்-ரே' கண்களா எனக்கு இருக்கின்றன?**

கே. எம். சுப்ரமண்யம்,
கோட்டப்பட்டி

'நாடோடி மன்னனை' எடுத்து முடிக்க எவ்வளவு செலவாயிற்று?

**சுமார் பதினெட்டு லக்ஷங்கள்.**

ம. மகேந்திரன், கொழும்பு,
இலங்கை

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் சினிமாஸ் ஸ்தாபனத்தார் மட்டும்தான் நல்ல படங்களைத் திரையிடுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களது முயற்சியா அல்லது செல்வாக்கா?

**இரண்டுமல்ல! சாமர்த்தியம்.**

'பெரிய கோயில்' என்ற படத்தை இலங்கையில் 'தாயின் அன்பு' என்று விளம்பரம் செய்தார்கள். ஏன் இவ்விதம் பெயர் மாற்றப்பட்டது?

**இலங்கை ரசிகர்களின் அன்பைப் பெறுவதற்காக!**

வெ. ரா. மனோகர்,
ராஜபாளையம்

பி. சரோஜாதேவி நடித்து அடுத்து வரப்போகும் தமிழ்ப் படம் எது?

**சாவித்திரி பிலிம்ஸாரின் 'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்' வந்திருக்கிறதே! அடுத்து வரவிருப்பது 'வாழ வைத்த தெய்வம்''.**

புகழ் வந்தும் சொந்தமாக கார் வைத்துக் கொள்ளாத நடிகை யார்?

**அங்கமுத்து. மாட்டு வண்டியில் அவருக்குள்ள மோகம், மோட்டார் மீது இன்னும் ஏற்படவில்லை!**

பி. ஏ. ரம்பண்டா,
மஸ்கெலியா, இலங்கை

நடிகை சரோஜா தேவிக்கு எப்போது கல்யாணப்பரிசு கொடுக்கலாம்?

**''சாவதற்கு முன் ஒருநாள் நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன்'' என்று சரோஜாதேவி 'கல்யாண பரி'சில் சொல்லியிருக்கிறாரே, அந்தச் சமயம் பார்த்து நீங்கள் உங்கள் பரிசை அனுப்பி வைக்கலாம்!**

'கல்யாண பரி'சில் மழையில் நனைந்த ஜெமினி கணேசனுக்கு, தலையைத் துவட்ட சரோஜாதேவி தன் முந்தானையைக் கொடுக்கும் காட்சியை சாவித்திரி பார்த்தால் என்ன நினைப்பார்?

**சரியான சமயத்தில் உதவியிருக்கிறார் என்று நினைப்பார்!**



இந்திரா பிலிம்ஸ் 'கலீர் கலீர்' படத்தில் 'நடிகவேள்' எம். ஆர். ராதா இப்படி வருகிறார்.

துரை. முருகேசன்,
காரமடை

சமீபத்தில் சலனப்பட வுலகிற்குக் கிடைத்த திரைக் காவியங்களான 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'சிவகெங்கைச் சீமை' இரண்டில் முதல் தரமானது எது?

**நீங்கள் தான் இரண்டையுமே காவியங்கள் என்று சொல்லி விட்டீர்களே! கட்டபொம்மன் முதல் தரமானது என்று மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.**

வே. நம்பி, சென்னை

'கட்டபொம்மன்' படத்தில் வரும் யுத்தக் காட்சிகளில் சில ஆங்கிலப் படத்திலிருந்து வெட்டப்பட்டுச் சேர்க்கப்பட்டனவாமே. எந்தப் படம் அது?

**'ஜான்–ஆப்-ஆர்க்' என்ற ஆங்கிலப் படத்திலிருந்து சில காட்சிகள் வெட்டப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன.**

ஜி. பி. வேலு, புதுச்சத்திரம்

நடிகர் திலகம், புரட்சி நடிகர், ஏ.நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி, பானுமதி, சாவித்திரி இவர்களில் எவர் மக்களுக்கு அதிகமாக உதவி புரிந்து உள்ளார்கள்?

**நடிகர் திலகமும் புரட்சிநடிகரும் இதில் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபட்டிருக்கிறார்கள். நாகேஸ்வரராவும் அஞ்சலி தேவியும் ஆந்திரா சர்வகலாசாலைக்குப் பெருமளவில் நிதி தந்திருக்கிறார்கள். சென்னை சர்வகலாசாலைக்கும் தரப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். தங்கவேலு அவ்வப்போது சில்லறை உதவிகளை பல நாடகங்கள் மூலம் செய்து வருகிறார். மற்ற இருவரைப் பற்றி ஒன்றும் தெரியாது.**



'உணவு ருசிக்கவில்லையோ?' சரவணா பிலிம்ஸ் 'பாகப் பிரிவினை'யில் நடிகவேள்.

வி. ராமமூர்த்தி, செங்கற்பட்டு

தற்போது தென்னிந்தியப் படவுலகில் என். எஸ். கே. யைப் போல் நடிக்கக் கூடிய ஹாஸ்ய நடிகர் யார்?

**இந்தியாவில் இதுவரை ஒரு காந்திதான் தோன்றி யிருக்கிறார்!**

ஆணவத்தின் இருப்பிடம் எது?

**புகழும் செல்வமும் இணைந்துள்ள இடத்தில் - சிந்திக்கும் தெளிவான அறிவு மங்கும்போது.**

எம். வி. சுவாமிநாதன், மாயூரம்

இன்பம் துன்பம் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**கடன் கேட்டு, அதைப் பெறும் போது ஏற்படுவது இன்பம்; கொடுத்தவர் அதைத் திரும்பிக் கேட்கும்போது வருவது துன்பம்!**

எஸ். செயராமன், மன்னார்குடி

'ஒரே வழி', 'சிவகெங்கைச் சீமை' முதலிய படங்களின் ஆர்ட் டைரக்டராகப் பணிபுரிந்த ஏ. பாலு, ஓவியர் பாலு சகோதரர்களில் ஒருவரா?

**அல்ல. இவர் ஏவி. எம். மில் பணி புரிந்தவர்**

ஆர். வீரசேகரன், சிவகெங்கை

புதுமை விரும்பி சாந்தாராமின் புகழ் உலகெங்கும் பரவ, நம் பாலசந்தரின் புகழ் ஏன் குடத்தி லிட்ட விளக்காயுள்ளது?

**சாந்தாராமுக்கு இருக்கும் வசதி பாலசந்தருக்கு இல்லையே!**

அன்றைய தமிழ்ப்படக் கலைஞனுக்கும் இன்றைய தமிழ்ப் படக் கலைஞனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**அன்றைய கலைஞனுக்கு தான் நடித்து வந்த படங்களின் பெயர்கள் நினைவில் இருந்தன; இன்றைய கலைஞனுக்கு கையெழுத்துப் போடத்தான் நேரமிருக்கிறது. படத்தின் பெயர்கள் நினைவில் இருப்பதில்லை!**

# ஸ்டுடியோ

# விஜயம்



ஹாஸ்யக் காட்சி ஒன்று படமாக்கப் பட்டதைப் பார்த்தேன். ராஜா தண்ட பாணி ஒரு போலி மந்திர வாதி வேணு பாய் மந்திர வாதியின் மனைவி; ராஜேஸ்வரி அவள் மகள். மந்திர வாதியிடம்

கணேஷ் பிரசாத் மூவீஸ் 'மருதநாட்டு வீர'னில் சிவாஜி கணேசன்.

விஜயா ஸ்டுடியோவில் சைதன்யா சித்ராவின் முதல் படம் ஒன்று பி. லக்ஷ்மி குமார் டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது. தஞ்சை ராமய்யாதாஸ் வசனம் எழுதியுள்ள இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், ராஜா தண்ட பாணி, ராஜேஸ்வரி, வேணு பாய் ஆகியோர் நடித்த



'சபரி'யில் அசோகன்

வந்து மாட்டிக்கொண்ட டி. ஆர். ராமச்சந்திரன் அங்கே எதிர்பாராமல் தன் காதலியைச் சந்திக்கும் கட்டம் தான் அன்று படமாகியது.

*　　*　　*

நெப்டியூனிலிருந்து நேராக கோல்டன் ஸ்டுடியோவுக்குப் பறந்து வந்தபோது "சைனா பஜாருக்கு வந்து விட்டீர்களா?" என்று கேட்டார் ஒரு நண்பர். நமக்குத் தான் தூக்கக்கலக்கமா அல்லது நண்பருக்கா என்று தெரியாமல் நான் விழித்தபோது, தயாரிப்பாளர், டைரக்டர், வசனகர்த்தாவாகிவிட்ட ரவீந்தர் அங்கே வந்தார். அவரைப் பார்த்ததும் எனக்குப் புரிந்துவிட்டது. சைனா பஜார் என்ற படத்துக்கு அன்று ஆரம்ப பூஜை. மாலினி, கண்ணன். மாஸ்டர் ராஜா, முதலியோர் நடித்த காட்சி ஒன்றும் அன்றைக்கே படமாக்கப்பட்டது. கண்ணனும், மாலினியும் அண்ணன் தங்கையாக நடித்தனர். அன்பு, கருணை நிறைந்தவளாக மாலினியும், கொஞ்சமும் கருணையில்லாத கல்மனிதனாகக் கண்ணனும் நடிக்கின்றனர்.

*　　*　　*

ராமன் புரொடக்ஷன்ஸ் முழுநீளக் கலர்ப் படமான "கொஞ்சம் சலங்கை"யின் காட்சி ஒன்று நரசு ஸ்டுடியோவில் சென்ற மாதம் படமாக்கப்பட்டது. எம் வி. ராமன் டைரக்ட் செய்யும் இதில் கமலா லக்ஷ்மண், மனோஹர் முத்துலக்ஷ்மி, ஞானம், வி. சீதாராமன் ஆகியோர் நடித்த காட்சியை அன்று பார்த்தேன். சேற்றிலே முளைத்த செந்தாமரையான மல்லிகா குடும்பப் பெண்ணாக வாழவிரும்புவதை அவள் தாயார் ஒய்யாரி விரும்புவதில்லை. ஆனால் தோழி அலங்காரம் மல்லிகாவுக்கு உதவுகிறாள். கொடுமைக்கார தளபதி நாகதேவன் மல்லிகாவை அடைவதினின்றும் தோழிதான் தடுக்கிறாள். ஒரு காட்சியில் கன்னிமாடத்தில் நின்றிருந்தவளை மல்லிகா என்றெண்ணி மனமகிழ்ந்து பேசும்போது, அது அலங்காரி என்று தெரிந்து சிறுகிறான் நாகதேவன்.

இக்காட்சியில் மல்லிகாவாக கமலாவும், ஒய்யாரியாக ஞானமும், மாமாவாக சீதாராமனும், நாகதேவனாக மனோஹரும், அலங்காரமாக முத்துலக்ஷ்மியும் நடித்தனர். இப்படத்தில் ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

*　　*　　*

அந்தரத்தில் ஆடி ஆடிப் பறந்து



'மருதநாட்டு வீரன்' படத்தில் ஜமுனா.


1.


2.


3.


4.


5.


6.


7.


8.

1. 'உத்தமி பெற்ற ரத்தினம்' ஸெட்டுக்கு வெளியே பாலாஜி, டி. கே. ஆர்., மாலினி. 2. 'அபலை அஞ்சுகம்' ஸெட்டில் எம். என். ராஜம், வி. எஸ். பாண்டியன், மகாலிங்கம், ராஜன். 3. 'சைனா பஜார்' ஆரம்ப விழாவில் காமிராவை முடுக்கி வைக்கிறார் ராமண்ணா. 4. 'சைனா பஜார்' ஸெட்டில். 5. பாண்டுரங்கா புரொடக்ஷன்ஸ் ஸெட்டில் கலைஞர்களும் நடிகர்களும். 6. 'வழிகாட்டிய தெய்வம்' படப்பிடிப்பின் போது. 7. 'சைதன்யசித்ரா' ஸெட்டில். 8. ராஜா தேசிங்கு' ஸெட்டில் எம். ஜி. ஆர்., சக்ரபாணி.

கொண்டிருந்த எனது ஸ்புட்னிக்கில் திடீரென்று ஒரு விசித்திர ஒலி கேட்டது. அடுத்து அது எங்கிருந்து வருகிறது என்று நான் கண்டுபிடிப்பதற்குள்ளாக மேலே பறந்து கொண்டிருந்த வேகத்தை விட அதிவேகமாக கீழே இறங்க ஆரம்பித்துவிட்டது. நான் அதைத் தடுக்க எவ்வளவோ முயற்சித்தும் கூட முடியவில்லை.

ஸ்புட்னிக் கீழே இறங்கியதும், நான் மெள்ள அதிலிருந்து இறங்கினேன்.

''வாருங்கள் வாருங்கள்! சீக்கிரம் வாருங்கள்! ஓடி வாருங்கள்!'' என்றெல்லாம் குரல் கொடுத்தபடி, சிறிது தூரத்தில் மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். சற்று முன்னே சென்று எட்டிப் பார்த்தேன்.

தங்களால் முடிந்த அளவுக்கு ஒவ்வொருவரும் நன்றாக அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை விழுந்தோடிக் கொண்டிருந்தது.

''வாருங்கள் ஐயா, நீங்கள் மட்டும் ஏன் நிற்கிறீர்கள்?'' என்று என் கையைப்பிடித்து ஒருவர் தர தரவென்று இழுத்தார்.

''எங்கே செல்கிறீர்கள்?'' என்று அவரிடம் நான் கேட்டேன்.

''அழகாபுரி மன்னரின் அரண்மனைக்குத்தான். இன்றைக்கு நமது இளைய மகாராஜா சர்வாதிகாரிக்கும், மற்றும் முக்கியமானவர்களுக்கும் பரிசு வழங்கப் போகிறார். விழா ரொம்பவும் விமரிசையாக இருக்கும். வாருங்கள்'' என்று

சைனாபஜாரில் மாலினி; அசோகன் நடித்து வெளிவந்திருக்கும் படம் 'பெண் குலத்தின் பொன் விளக்கு'; புதுமுகம் லலிதா 'சைனா பஜார்' படத்தில் நடித்துவருகிறார்.







என் கையை மேலும் பலமாகப் பிடித்து இழுத்துக் கொண்டே போனுர்.

''ஐயா! எனக்கு விவரம் ஒன்றுமே தெரியாது நான் இந்த நாட்டுக்குப் புதியவன் தவறிப் போய்'' என்று இழுப்பதற்குள், ''ஓ, விஷயம் ஒண்ணுமே தெரியாதா? அப்படியானுல் சொல்லி விடுகிறேன்'' என்று வ்வரங்களைச் சொன்னுர்.

அழகாபுரியின் இளவரசி காஞ்சனுதேவி; இளவரசன் மதிவாண பூபதி.







நாட்டின் அரசுரிமையை ஏற்று நடத்தப் போகிய வயது வராததால் இளவரசருக்குப் பதிலாக நஞ்சப்பனை சர்வாதிகாரியாக நியமித்து

1. 'நாடோடிகள்' படத்தில் அம்பிகா. 2-3. சாயிராம், கே. வி. சாந்தா 'வழிகாட்டிய தெய்வத்'தில்.



4. 'சைனு பஜார்' தயாரிப்பாளர்கள் ஆரம்ப பூஜையில்.

ராஜ்யத்தை நடத்தி வந்தது அழகாபுரி.

அன்றைய தினம் நாட்டை திறமையாக ஆண்ட சர்வாதிகாரிக்கு, அரசாங்கத்தின் சார்பில் பரிசு அளிக்க ஏற்பாடாகியிருந்தது.

அந்த ஆசாமி விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்கும் அரண்மனை தர்பார் மண்டபத்தை அடைவதற்கும் சரியாக இருக்கிறது.

அரண்மனையின் தர்பார் மண்டபம் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இருபுறமும் வரிசையாக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றில் அரசாங்கத்தின் பிரதான அதிகாரிகள் அமர்ந்திருந்தார்கள்.

தர்பாரின் ஒரு கோடியில் இளவரசி காஞ்சனாதேவியுடன், இளவரசர் உட்கார்ந்திருந்தார். இதற்கு சற்று தள்ளிப் போடப்பட்டிருந்த மற்றொரு ஆசனத்தில் சர்வாதிகாரி உட்கார்ந்திருந்தார்.

பரிசளிப்பு விழாவில், முக்கிய நிகழ்ச்சியான பரிசளிக்கும் வைபவத்திற்கு முன்பாக நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும், சேவகன் ஒருவன் வந்து. "இளவரசரின் சார்பாக இந்நாட்டைத் திறமையுடன் ஆண்டு வந்த சர்வாதிகாரிக்கு..." என்று சொல்லி நிறுத்தினான்.

இளவரசர் எழுந்தார். சர்வாதிகாரியும் தன் ஆசனத்திலிருந்து எழுந்து வந்தார் இளவரசரிடம். இளவரசரிடம் ஒரு தட்டை நீட்டினான் மற்றொரு சேவகன். இளவரசர் அதிலிருந்த ஒரு பெரிய வைர மோதிரத்தை எடுத்து "இந்த வைர மோதிரத்தைப் பரிசாக அளிக்கிறேன்..." என்று சொல்லி அந்த மோதிரத்தை நஞ்சப்பனின் கையில் அணிவித்தார்.

"அடுத்து..." என்று சேவகன் நீட்டி முழக்கினான்.

89693

சர்வாதிகாரி சுற்றுமுற்றும் பார்த்தார். சற்று முன்பு வரை பெருமிதத்தில் மூழ்கியிருந்த அவரது முகத்தில் வஞ்சனையின் ரேகை படர்ந்தது. தனக்குச் சமமாக மற்றொருவருக்குப் பரிசு வழங்குவதை சர்வாதிகாரி விரும்பவில்லை



'விஜயபுரி வீரனை' உருவாக்கும் கலைஞர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் காமிராவுக் கருகில் தொப்பியுடன் காட்சியளிப்பவர் தான் டைரக்டர் ஜோசப் தளியத் ஜூனியர்.

என்பதை அவரது முகபாவம் சொல்லாமல் சொல்லியது.

இதை இளவரசர் கவனித்திருப்பாரோ?...

வாசகர்களை நீண்ட நேரம் மர்மத் திரையில் வைத்திருக்கும் நான் உண்மையைச் சொல்லி விடவிரும்புகிறேன்.

இந்த அழகாபுரி அரண்மனை சென்னை சிட்டடெல் ஸ்டுடியோவில் கட்டப்பட்டிருந்தது. அவர்கள் தயாரித்து வரும் 'விஜயபுரி வீரன்' படத்திற்காக மேற்படி காட்சி அன்றைய தினம் படமாக்கப்பட்டது.

அசோகன் இதில் சர்வாதிகாரியாக வருகிறார். மாஸ்டர் கோபு அழகாபுரி இளவரசராகவும், காஞ்சனாதேவியாக ஹேமலதாவும் நடித்து வருகிறார்கள். ஜோசப் தளியத் ஜூனியர் டைரக்ட் செய்யும் இப்படத்தின் வசனங்களை நாஞ்சில்நாடு டி. என். ராஜப்பா எழுதி வருகிறார்.

* * *

விஜயா ஸ்டுடியோவில் பாண்டுரங்கா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் தமிழ்ப் படத்துக்கான காட்சி ஒன்று சென்ற மாதத்தில் படமாக்கப்பட்டது. போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டராக டி. எஸ். பாலய்யா அமர்ந்திருந்தார். குலதெய்வம் ராஜகோபால், காகா ராதாகிருஷ்ணன், மனோஹர், பிரியதர்ஸனி, பண்டரிபாய் ஆகியோர் இக்காட்சியில் நடித்தனர். மா. ரா. கதை, வசனம் எழுதியுள்ள இப்படத்தை ஆர். ராமமூர்த்தி டைரக்ட் செய்கிறார்.



ஜெமினி கணேசன், சாவித்திரி இருவருடன் கால்டெக்ஸ் மானேஜர் ஒரு படப்பிடிப்பின் இடை வேளையில்.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER



## உங்களுக்கும்—
## சினிமா நட்சத்திரங்களின் சுடர் மேனியழகு!

வைஜயந்திமாலா கூறுகிருர்: "எனது மேனியை வாடாமலர்ப் புதுமையுடனும் மென்மையுடனும் வைத்திருப்பது லக்ஸ் டாய்லெட் சோப். அதன் மிருதுவான நுரையினுல் எனது சருமத்திற்கு நன்மை, அதன் நறுமணத்தினுல் எனக்குப் புதுமலர்ச்சி!".
அன்ருட அழகுசாதனமாக நீங்களும் லக்ஸ் சோப் உபயோகியுங்கள்.

தூய, வெண்மையான

# லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்




LTS. 9-50 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

## பேசும் படம் * போட்டோ ஆல்பம்



சில பெண்களுக்கு ஆபரணங்கள் இல்லாமலிருந்தால் தான் நன்ருக இருக்கிருர்கள். கழுத்தில் மணிச்சரடு மட்டும் அணிந்திருக்கும் இந்த யுவதியிடமும் கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது! ஏவி. எம். ஸ்டுடியோவில் வளர்ந்து வரும் 'திலகம்' தமிழ்ப் படத்தில் திலகமிடாமல் குங்குமப் பொட்டுடன் தோன்றுகிருர் எம். என். ராஜம்.

PSR



வேதனை அதிகமாகி விட்டால் யாராக இருந்தாலும் ஒரு ஜன்னல் கம்பியையோ, சட்டத்தையோ பிடித்துக் கொண்டு அழுகிறார்கள். இதன் ரகசியம் என்னவென்று தான் தெரியவில்லை! பாலாஜி ஏன் இப்படி வேதனைப் படுகிறார் என்பதை நாம் அறியவேண்டுமானால், ஜி. கே. புரொடக்ஷன்ஸ் 'சகோதரி'யைப் பார்க்க வேண்டும்.



இந்த இளைஞர் தவறு செய்து விட்டாரா என்ன? பயத்தால் கைகளைப் பிசைந்து கொண்டு உடல் வியர்க்க இவர் திருதிருவென்று விழிக்கக் காரணம் என்னவாக இருக்கலாம்? பிரேம்நசீர் இப்படித் தோன்றுவதன் காரணத்தை ஏவி. எம். புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'திலகம்' படத்தில் நம்மால் அறிய முடியும்.



'ஏ, பொண்ணு, வெட்கப்படாமெ சொல்லு, என்னெ கட்டிக்க ஒனக்கு இஸ்டம்தானே?' என்று அவர் ரகசியமாகக் கேட்கிறுரா? அவள் முகத்தைப் பார்த்தால் நடப்பது காதல் விளையாட்டு என்றுதான் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் முதன் முதலாக ஏவி. எம். மில் தயாராகி வரும் 'ஆகாஷ் பாதல்' வங்கப் படத்தில்.



இத்தனை நாட்களாகக் கிடைக்காதிருந்த அவள் பெற்றோரின் அனுமதி இன்று கிடைத்துவிட்ட ஆனந்தம் அவனுக்கு! மழை கண்டு மகிழும் பயிர் போன்ற நிலை அவளுக்கு. இந்தக் காட்சியில் மழை பெய்யப் போகிறது போலிருக்கிறதே! ஜி. கே. புரொடக்ஷன்ஸ் 'சகோதரி'யில் பிரேம் நசீர், தேவிகா நடிக்கும் ரசமான காட்சி.



பெண்களுக்குள், ஆண்களைக் கவருவதில் எத்தனை போட்டி! பொன்நகைகளையும் புன்னகையையும் காட்டி இந்த யுவதி ஒரு ஆடவனை இப்படிப் பார்த்தால் அவன் அப்போதே மனதால் சொர்க்கலோகம் போய் விடுகிறான்! பி. வி. என். 'நாகநந்தினி'யில் இவள் (தேவிகா) யாரை அனுப்புகிறாள் என்பதை பார்க்கலாம்.



வாயை மூடவும் செய்யாமல், வாய்விட்டுச் சிரிக்கவும் செய்யாமல், நேருக்குநேர் பார்க்கவும் செய்யாமலிருக்கும் யுவதி, ஆடவன் மனதைக் கொள்ளை கொள்ளுவாள்! இந்த யுவதி (பத்மினி) யார் மனதைக் கொள்ளையடிக்கிருள் என்பதை, கமால் சகோதரர்களின் 'தெய்வப் பிறவி' தமிழ்ப் படத்தில் நிச்சயம் பார்க்கலாம்.



வடநாட்டுப் படவுலகில் 'செக்ஸ்-அப்பீல்'தான் வெற்றியின் உயிர்நாடி. அதனுல்தான் சோகத்தின் எல்லையிலே-சாகும் போதும் 'செக்ஸ் - அப்பீ'லுடன் இவள் கிடக்கிருள் போலும்! ஏவி. எம். ஸ்டுடியோவில் வளர்ந்து வரும் புரொடக்ஷன் நெ. 36 ஹிந்திப் படத்தில் ஜெகதீப், குமாரி நந்தா.

புகைப்படங்கள் :

பி. கே. நடராஜன் (ஏவி. எம்.)

PSR

# மில்க் ஆப் மக்னீஷ்யா

மக்னீஷ்யா மாக்மா U. S. P

சிறு குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் பத்திரமும் பயனளிப்பதும்

அமிலத்தைத் தடுக்கவும் பேதிக்கும்

நிச்சயமாக இதையே கேளுங்கள்....

MARTIN & HARRIS (PRIVATE) LTD. INDIA & BURMA

M & H பிராண்ட்




MANUFACTURED IN INDIA BY

**MARTIN & HARRIS (PRIVATE) LTD.**

18, ASHUTOSH MUKHERJEE ROAD, CALCUTTA 20

ஒரு 'டல்லனுல்' காரின் தயாரிப்பு



## (டீலக்ஸ்) தானுகவே 50 முறை சுடும் பிஸ்டல்




லைசென்ஸ் தேவையில்லை. தானுகவே இயங்கி, 50 முறைகள் சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். இது வெடிக்கும்போது வரும் பயங்கர ஒலியும், தீப்பொறிகளும், திருடர்களையும் வன விலங்குகளையும் பயப்படச் செய்யும். சினிமா, நாடக நடிகர்களுக்கு முற்றிலும் பயன்படக்கூடியது. விரோதிகளிடமிருந்து தப்பவும் மற்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கும் உங்களுக்கு சிறந்த துணை இது. விலை ரூ. 10/50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2/50. தபால் செலவு இலங்கைக்கு ரூ. 4.50 25 ரவைகள் இலவசம். அதிகப்படி ரவை டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1. பிஸ்டல் கேஸ் விலை ரூ. 3. பிஸ்டலை சுத்தம் செய்யும் எண்ணெய் ஒரு சீசா ரூ. 1. (திருப்திக்கு உத்தரவாதம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.)

**எலக்ட்ரிக் & ரேடியோ கைட்:** சிறந்த மெக்கானிக்காக மாற உதவும் புத்தகம். 117 படங்கள் கொண்டது. ரூ. 15 செலவில் வீட்டிலேயே ரேடியோ தயாரிக்கவும், மற்றும் ரேடியோ ரிப்பேர் செய்வது, வயரிங், எலெக்ட்ரிகெல் மெகானிஸம் மற்றும் மின்சார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவும் புத்தகம். வேறு தொழில்கள் பற்றியும் கற்கலாம். புதுப்பிக்கப்பட்ட பதிப்பு ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1. திருமண வாழ்க்கையின் நுணுக்கங்கள் 88 படங்களுடன் ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1-25

**GLOBE TRADERS. (P.P.10) P.B. 19 ALIGARH (INDIA)**










# திரை மறைவில் கலை நிபுணர்

அது ஒரு பிரம்மாண்டமான சமவெளிப் பிரதேசம். அதில் சுமார் எழுபத்திரண்டு யானைகள் ஒரே வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. இடது கோடி முதல் வலது கோடிவரை நின்றிருந்த யானைகள் வேகமாக வர வேண்டும். எல்லாம் கிளம்ப ஆயத்தமானபோது, திடீரென்று இரண்டு யானைகளுக்குள் குஸ்தி ஏற்பட்டுவிட்டது. எதிர்பாராத விதமாக இரண்டு யானைகள் படத்திற்குச் சம்பந்தப்படாத காட்சியில் நடிக்க ஆரம்பிக்கவே, மற்ற யானைகள் பயத்தாலும், ஒன்றும் புரியாத மிரட்சியாலும் அங்குமிங்கும் கலைந்து ஓட ஆரம்பித்தன. யானைப் பாகன்கள் தலை தெறிக்க ஓடினார்கள். மற்றவர்களும் காற்றாகப் பறந்தார்கள்.

---

1. தெய்யென்னே ரதே' வெளிப்புறக் காட்சி. 2. மங்களா படப்பிடிப்பில் 3. சுமங்கலியில் பாலாஜி அருகே. 4. ஜெமினியில் அதிபர் வாசனுடன்.



காமிரா

# எஸ்.எஸ்.நாதன்

அந்த யானைகளைப் படமாக்க காமிராவோடு தயாராகி நின்ற ஒளிப்பதிவாளர், ஆபத்துக் காலத்தில் குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடும் பூனையைப்போல் காமிராவைத் தூக்கிக்கொண்டு இப்படியும் அப்படியும் ஓடினர். ஒரு நிமிடம் தான். பிறகு அவர் ஓட்டம் நின்றது. ஏனெனில் மிரண்ட யானைகள் அவரைச்சுற்றி வளைத்து நின்றன. மிரட்சி நீங்கியதும் யானைகள் தாமாகவே, டிரில் வகுப்பு பையன்களைப் போலத் தங்களிடத்திற்குச் சென்றன. பள்ளியில் குறும்புப் பையன் மற்றவன் சட்டையைக் கிழிப்பதுபோல சில குறும்புக்கார யானைகள், 'பாட்டரி செட்'டை நொறுக்கிவிட்டுச் சென்றன.

கலாட்டா ஓய்ந்ததும் ஒளிப்பதிவாளரின் எலும்புகளை எடுத்துப் போக வந்தவர்கள் அவரை உயிருடனும் காமிராவுடனும் கண்டு உள்ளம் நெகிழ்ந்துபோய் விட்டார்கள்!

இது நடந்த நிகழ்ச்சி. ஜெமினியின் ''ஒளவையார்'' படத்திற்காக மானந்தவாடியில் நடைபெற்ற வெளிப்புறக் காட்சியின் போது இது நடந்தது. இந்தப் பயங்கர விபத்திலிருந்து தப்பியவர்- கடவுளின் கருணையால் உயிருடனேயே ஒரு கணம் எமலோகத்தைப் பார்த்துத் திரும்பியவர், இந்த இதழில் ரசிகர்களுக்கு அறிமுகமாகும் திரு. எஸ். எஸ். நாதன்.



## சிரஞ்சீவியின் புது நாவல்




சிரஞ்சீவியின்

மர்ம நாவல்

## லீலா விநோதன்

விலை ரூ. 1.50

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

## அமர நிலையம்

சென்னை - 24.


நாதன் தேசத்தியாகப் பரம்பரையைச் சேர்ந்தவர். அவரது தகப்பனார் சுப்பிரமணியம். அவர் பிரபல வழக்கறிஞராக இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக மதுரை, ராமநாதபுரம் பிரதிநிதித்துவத்துடன் பணி புரிந்தார். 1920—21-ம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் சுப்பிரமணியமும் அவரது மூத்தமகன் ஷண்முகசுந்தரமும் ஈடுபட்டு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை பெற்றார்கள். அடக்குமுறை உச்சநிலையிலேயிருந்த அந்தக்காலத்தில் கடுங்காவல் என்பது சித்திரவதைக்குச் சமமானதல்லவா!

இதனால் நாதன் எஸ். எஸ். எல். ஸி. யுடன் தனது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க நேர்ந்தது. பள்ளி நாட்களிலேயே அவருக்கு நடிப்பு, சித்திரம் வரைதல், புகைப்படம் எடுத்தல் இவற்றில் மிக்க ஆர்வமுண்டு.

இப்போது அவர் குடும்பத்தின் பொறுப்பை ஏற்க நேர்ந்தது. சாத்தூரில் ஒரு பள்ளியில் உபாத்தியாயராகவும், குமாஸ்தாகவும் பணி பார்த்தார். பிறகு யூனியன் போர்டு குமாஸ்தாவாகப் பணியாற்றினார். சென்னை பி. டபிள்யு. டி. யில் மெக்கானிக்காகப் பயிற்சி பெற்றார். ஆனால் இதிலெல்லாம் அவர் மனம் பூரணமாக ஈடுபட்டிருக்கவில்லை.

அப்போதுதான் அவருக்குக் கலை உலகுடன் தொடர்பு ஏற்பட்டது. காலஞ் சென்ற ஆர். பிரகாஷ், 'கோவலன்' மௌனப்படத்தின் சில காட்சிகளைப் படமாக்க 1926-ம் வருஷம் மதுரைக்குச் சென்றிருந்தார். நாதன் அவரைச் சந்தித்து தன் ஆவலைத் தெரிவித்தார். புகைப் படக் கலையில் ஆர்வங் காட்டிய நாதனை பிரகாஷ், சென்னையில் வந்து சந்திக்குமாறு கூறிவிட்டுப் போனார். நாதன் சென்னை வந்ததும் அவரை உதவி ஒளிப்பதிவாளராக நியமித்தார் பிரகாஷ். காரண்டீட் பிலிம் கார்ப்பொரேஷன் என்ற பெயருள்ள அப்படக் கம்பெனியில்

நடிகர், உதவி ஒளிப்பதிவாளர், பிலிம் கழுவி பிரண்ட் செய்பவர், 'டார்க் ரூம்' பிரதம பொறுப்பாளர் ஆகிய துறைகளில் பணியாற்றினுர் நாதன். பிறகு 1928 முதல் 31 வரை சைதாப்பேட்டையில் இருந்த அசோசியேடட் பிலிம்ஸ் லிமிடெட் கம்பெனியில் பணியாற்றினுர். 31-லிருந்து 43 வரை சென்னை சர்க்கார் புகைப்படப் பிரிவு காரியாலயத்தில் பணியாற்றினுர். இடையே 'வாமனுவதாரம்' முதலிய மௌனப்படங்களிலும் நடித்தார்.

1944-ல் எஸ். எஸ். நாதன் ஜெமினியில் சேர்ந்தார். ஜெமினியில் சந்திரலேகா, மூன்று பிள்ளைகள், ஔவையார், சம்சாரம், தோ துலே, இன்ஸானியத் முதலிய படங்களில் அவருக்கு வேலை இருந்தது. தனிப்படவும் உதவியாளராகவும், ஒரு பிரிவிலும் அவர் பணியாற்றினுர். ஜெமினியில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் கார்ட்டூன் படமான "சினிமாக் கதம்பத்"தின் ஒரு யூனிட்டில் இவர் பணியாற்றினுர்.

இதன்பின் இலங்கை முருகன் நவகலா பிலிம்ஸின் 'ரம்யலதா' சிங்களப் படத்திற்குப் பிரதம ஒளிப்பதிவாளராகப் பணியாற்றினுர் நாதன்.

இலங்கைவாசம் தொடர்ந்தது. 'ரம்யலதா'வில் நாதனின் திறமையைக் கண்ட ஹெலதேவா பிலிம் ஆர்ட்ஸ் ஸ்தாபனத்தார் தங்களது தயாரிப்பான "தெய்யென்னே ரதே" சிங்களப் படத்திற்கு அவரை ஒளிப்பதிவாளராக ஒப்பந்தம் செய்தார்கள். இந்தப் படத்தில் அவர் ஒளிப்பதிவுக்குப் பாராட்டுக் கிடைத்ததுடன் அந்தப் படம் இலங்கையில் பாராட்டுப் பத்திரம் பெற்றது.



சமீபமாக வெளியிடப்பட்ட ராஜேஸ்வரி பிலிம்ஸின் "சுமங்கலி"யின் ஒளிப்பதிவாளர் நாதன். அந்தப் படத்தில் ஒளிப்பதிவு தரமாக இருந்தது. வரலக்ஷ்மி பிக்சர்ஸ் 'வீரபாஸ்கருடு' தெலுங்குப் படத்திலும் ஒளிப்பதிவாளராக நாதன் பணியாற்றினுர்.

ஜெமினி நாட்டியராணி, மிஸ் மாலினி, துளசி ஜலந்தர், சக்குபாய், கிருஷ்ணதுலாபாரம், கல்பனு, மூன்று பிள்ளைகள், நாகபஞ்சமி முதலிய படங்களில் கூட்டு ஒளிப்பதிவாளராகவும், சந்திரலேகா, ருக்மாங்கதா, சம்சாரம், ஔவையார், அபூர்வ சகோதரர்கள், தோதுலே முதலியவற்றுக்கு இரண்டாம் யூனிட் ஒளிப்பதிவாளராகவும் பணியாற்றினுர்.

நாதன் தமிழ் நாட்டின் திறமை மிக்க ஒளிப்பதிவாளர்களில் ஒருவர். "ஒளிப்பதிவுத் துறையில் எனது நீண்ட நாளைய அனுபவம் காரணமாகச் சில புதுமைகளைச் செய்ய விரும்புகிறேன். எனக்கு இப்போதிருக்கும் படங்களுடன் தொடர்பு கிடைக்குமானுல், மேனுட்டினர் வியக்கத்தக்க முறையில் என்னுல் ஒளிப்பதிவு செய்து காட்ட முடியும்" என்றுர் நாதன். தமிழ்ப் படவுலகம் அவரது திறமைக்கு உற்சாகம் காட்டுவதன் மூலம், அவரது அனுபவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஒளிப்பதிவுத் துறையில் தனக்கும் புகழ் தேடிக் கொள்ள முன்வரும் என்று நிச்சயம் நம்புகிறேன்.

"பரணிகுமார்"

# நாட்டுக்கொரு நல்லவள்

**தொடர்ச்சி**

*சங்கர் திடுக்கிட்டுப் பேசுகிறான்.*

சங் : மாமா!

முத் : இன்னொருதரம் மாமான்னு சொன்னே உன் மண்டையைப் பிளந்துடுவேன்! மாமாவாமில்லே மாமா!

சங் : மண்டையைப் பிளக்கவும், மகனைக்கொல்லவும் ஒவ்வொருவருக்கும் இந்த நாட்டிலே உரிமை இருந்தால் பிறகு மனித சமுதாயமே வாழமுடியாது!

முத் : சீ...அதிகப்பிரசங்கி! மரியாதையா இங்கிருந்து வெளியே போறியா இல்லையா?

கௌரி : அப்பா! அப்படியெல்லாம் சொல்லாதிங்கப்பா அவரை!

முத் : அடி சீ, அறிவு கெட்டவளே! அவரு! உன் வாயைத் திறந்து பேசினே உன்னை கொத்திடுவேன் கொத்தி! ஏன் சங்கர்! அருமையா வளர்த்த என் பெண்ணை எங்கிட்டேயிருந்து பிரிக்கப் பார்க்கறியா?

சங் : கொஞ்சம் நிதானமாகப் பேசுங்க. எத்தனை நாளைக்குதான் அவள் தகப்பன் வீட்டிலே வாழ்ந்துவிட முடியும்? என்றைக்காவது ஒரு நாள் அவளை எங்கள் வீட்டுக்கு அனுப்பித்தானேயாக வேண்டும்?

முத் : சொப்பனத்திலே கூட நினைக்காதேடா! இந்த முத்தையா தலை சாயறவரையிலும் அந்தக் காரியம் நடக்காதுடா!


## நீங்கள் விரும்புவதை அடையுங்கள் !



### மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவராலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

*Principal*, **BENGAL MESMERISM HOUSE**

**(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)**

சங் : அப்படியானால் உங்கள் மகள் வாழ்வில் இருள் சூழும்! குடும்ப வானிலே உல்லாசமாக சிறகடித்துப் பறக்க வேண்டிய அவள் கூண்டில் அடைப்பட்ட கிளியாவாள். மணம் வீசி அழகு ரோஜாவாக மலரவேண்டிய அவள் வாழ்வு கவனிப்பாரற்று கரிந்து போகும், காட்டு ரோஜாவாகும்! வாழ்ந்தும் வாழாமல் உயிரற்ற நடைப்பிணமாவாள்! கண்ணீரும் கம்பலையுமாக எஞ்சிய வாழ்வெல்லாம் துன்பத் சகதியிலே கிடந்து மடியவேண்டியது தான் உங்கள் மகள்!

சு. பி.: சங்கர்!

சங் : வாங்கம்மா போகலாம்! யாருக்கு வேண்டும் இந்த மூர்க்கனுடைய பெண்? வாங்கம்மா போகலாம்!

**யாவரும் போகிறார்கள். சங்கர் ஊருக்குப் புறப்படுகிறான்.**

சு. பி.: கடைசி வருஷப்படிப்பு கஷ்டமாயிருக்கும்! படிப்பைத் தவிர வேறு எந்த சிந்தனைக்கும் இடம் கொடுக்கக்கூடாது. நீ பஸ்ட் க்ளாஸில் பாஸ் பண்ணினேன்னு கேட்டா எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷமாயிருக்கும்.

சங் : உங்க ஆசையை நான் தவறாம நிறைவேத்தி வைக்கிறேன்.

பொன் : அப்பா சொல்லிட்டார்ன்னு ராத்திரியெல்லாம் ஒரேயடியா படிச்சு உடம்பை கெடுத்துக்காதேப்பா.

## விரோதம் வளருகிறது

**சங்கர் பட்டினம் போகிறான். சுந்தரம்பிள்ளையின் சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டு வருகிறார் முத்தையா. பொன்னம்மாள் இதனால் மனமுடைந்து ஊரைவிட்டுக் கிளம்பத் தீர்மானிக்கிறாள். ராமையா சுந்தரம்பிள்ளையின் விட்டுப் பத்திரத்தை வாங்கிவந்து அவரிடம் தருகிறார். ஆனால் விஜயாவின் மறுவீடு அழைப்புக்கு ஈடாக அதை ராமையாவிடமே கொடுக்கிறார் சுந்தரம்பிள்ளை. காமாக்ஷி தன் மகள் ராஜத்தை சங்கருக்கு மணமுடிக்க சுந்தரம்பிள்ளையிடம் சம்மதம் கேட்கிறாள். ஆனால் கௌரியை மருமகளாக்கிக் கொள்ள முடிவு செய்த பொன்னம்மாள், உயிர் போவதானாலும் இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது என்கிறாள். கௌரியிடம் லக்ஷ்மி தவறான செய்தி கூறவே, சங்கர் ராஜத்தை மணக்கப் போவதாக நினைத்து மனமுடைந்து கல்லாகச் சமைந்து விடுகிறாள். மழையில் நனைந்ததால் அவளுக்கு உடல் நலிவு ஏற்படுகிறது. அவளைப் பார்க்க வரும் பொன்னம்மாளை உள்ளே அனுமதிக்க மறுக்கிறார் முத்தையா. டாக்டர் கௌரிக்கு மனோவியாதி என்கிறார்.**

## காட்சி 5

### தாலி ஏது?

**கௌரியின் நிலை மோசமாகவே சங்கருக்குக் கடிதம் எழுதி உடனே வருமாறு பணிக்கிறான் ராமநாத்.**


ரூ. 6-க்கு கைக்கடிகாரம்



செயின் சிஸ்டத்தில் வருட கியாரண்டியுடன் அளிக்கப்படும். 15 ஜூவல்ஸ் கைகடிகாரத்தை ரூ. 6க்கு பெறுங்கள்.

தபால் செலவு ரூ. 1.25 தனி.

குறிப்பு : எங்கள் ஹனி மூன் சென்டை பிரபலப்படுத்தவே இத்திட்டம். திட்டம் (Scheme) உங்களுக்கு பிடிக்கவில்லையானால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**London Trading Agency,**
(Watch Suppliers-P.P - 3)
JULLUNDUR CITY.

கௌரியின் பிதற்றல் அதிகமாகிறது. அந்தச்சமயம் முத்தையா டாக்டரை அழைத்துவரப் போகிறார். லக்ஷ்மி பயந்து பொன்னம்மாளிடம் ஓடுகிறாள். பொன்னம்மாள் வந்து கௌரியை துணிவுடன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுகிறாள். கௌரியின் மனநிலையில் அவளுக்கு உயிர் கொடுப்பதற்கு ஒரே வழி அதுதான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். சங்கர் ஓடி வருகிறான்.

சங் : அம்மா!

பொன் : நல்ல சமயத்துக்கு வந்தேப்பா!

சங் : கௌரிக்கு உடம்பு சரியில்லையாம்மா. இப்போ எப்படியம்மா இருக்கு?

பொன் : தேவலையேப்பா!

சு. பி : கௌரி. இங்கேப் பாரும்மா...


காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!



ரூ. 2/50-க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல் பணம் வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.


பொன் : யாரு வந்து இருக்கான்னு.

சங் : கௌரி...கௌரி.

**கௌரி படுக்கையில் இருந்து சிறிதளவு எழுந்து புன்சிரிப்புடன் பார்க்கிறாள்.**

கௌ : வாங்கத்தான்.

**முத்தையா வீடு திரும்பியதும் கௌரியை காணாமல் லக்ஷ்மியை விசாரிக்கிறான்.**

முத் : லக்ஷ்மி லக்ஷ்மி!

லக்ஷ் : என்னங்க?

முத் : உண்மையைச் சொல்லு, கௌரி எங்கே?

லக்ஷ் : பொன்னம்மா அத்தை கூட்டிக்கிட்டு போயிருக்காங்க!

முத் : பொன்னம்மா அத்தை கூட்டிக்கிட்டு போயிருக்காங்களா?

லக்ஷ் : ஆமா?

முத் : இப்ப போய் நான் அவ காலை உடைச்சிட்டு வர்லே என் பெயர் முத்தையா இல்லை.

**போகிறார்.**

டாக் : ஏம்மா! இவரு எங்கே காவிச்சுக்கிட்டு போறாரு?

லக்ஷ் : எமலோகத்துக்கு போறாரு. நீயும் போய்யா?

**முத்தையா பொன்னம்மா வீட்டிற்குள் நுழைகிறார்.**

முத் : பொன்னம்மா! உன் மனசிலே நீ என்னதான் நினைச்சிட்டு இருக்கே? என் வீட்டு வாசல் படியை மிதிக்காதேன்னு உனக்கு எத்தனை தரம் சொல்றது? ஒண்ணும் தெரியாத என் குழந்தையை என்கிட்டேயிருந்து பிரிக்க என்ன சதியா பண்றீங்க?

பொன் : குழந்தையாம் குழந்தை! குழந்தை என்கிற பாசம் கொஞ்சமாவது இருந்திருந்தா இந்தத் தாயில்லாக் குழந்தையை இப்படியெல்லாம் நடத்துவீங்களா? கௌரி என் குழந்தை! அவளுக்குத் தாய், தகப்பன் எல்லாம் நான்தான்! இனி அவளுக்கும் உங்களுக்கும் எந்தச் சம்பந்த

மும் கிடையாது. போங்க! போங்க போங்க வெளியே!

முத்: வெளியே போறதுக்கு நான் ஒண்ணும் பேடியில்லே! அவ இங்கிருந்து வராவிட்டா அவளை இங்கேயே தொலைச்சுட்டுத்தான் போவேன்.

**சங்கர் உள்ளே வருகிறான்.**

சங்: ஓஹோ கொலை பண்ணிடுவீங்களோ? உம் நடக்கட்டும்! ஒரு தகப்பன் தன் சொந்த விருப்பு வெறுப்புக்காக தன் சொந்த மகளையே கொலை செய்தான் என்கிற கதை நாடு பூரா பரவட்டும்!

முத்: என்னடா பயங் காட்டறே?

பொன்: பயங்காட்ட என்ன இருக்கு? கௌரியைத் தொடக்கூட விடமாட்டேன்.

முத்: உம். மண்டையை நொறுக்கிப்புடுவேன் நொறுக்கி.

கௌ: அப்பா! என்னை என்ன வேணும்னாலும் செய்யுங்க. அத்தையை மட்டும் தொடாதீங்க!

முத்: வா வீட்டுக்கு.

கௌ: வரமாட்டேன்.

முத்: ஹா! வரமாட்டியா? முடியும் முடியாதுங்கறதை இந்த இடத்திலேயே பார்த்துடறேன். உன்னை உயிரோட இந்த வீட்டிலே விட்டுப் போவேன்னு பார்க்காதே. (கௌரியின் கழுத்தைப் பிடித்து நெரிக்கிறார்.)

சு. பீ.: முத்தையா உனக்கு அறிவு இருக்கா?

பொன்: அண்ணா!

சு. பி.: முத்தையா...! விடு!

பொன்: விடுங்க! விடுங்க!

**முத்தையா கௌரி கழுத்தில் இருக்கும் தாலியைப் பார்க்கிறார்.**


## ரூ. 1500/– இனாம்



டில்லி 'டெய்லி தேஜ்' முன்னாள் மானேஜர் எல். பிரஹ்ம நந்த்குப்தா எழுதுகிறார்:

"உங்கள் 'நேஷனல் கோல்டு' பார்சல் கிடைக்கப் பெற்றேன். வந்தனம். உண்மையான தங்கத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாததைக் காண நான் மகிழ்கிறேன். மீண்டும் ஆறு தோலாக்களை மறு தபாலில் அனுப்பவும். மேற்கொண்டு தேவைக்கான குறிப்பு தொடரும்". உரைகல்லில் தேய்த்தாலும் உண்மை தங்கத்தைப்போல் இருக்கும் இது. இதை கம்பியாகவும் தகடாகவும் அடிக்கலாம். எல்லாவகை ஆபரணங்களும் இதனால் செய்யலாம். அனுபவம் வாய்ந்த தங்க வியாபாரிகளும் இதற்கும் உண்மையான தங்கத்திற்கும் உள்ள வேற்றுமையை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. மேலே உள்ள சர்டிபிகேட் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1500 இனாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக தற்போது இதன் விலை ஒரு தோலா ரூ. 2.50. தபால் செலவு தனி. மூன்று தோலாக்கள் ரூ. 7. ஆறு தோலாக்கள் ரூ. 13. பத்து தோலாக்கள் ரூ. 20. அங்கீகரிக்கப்படாவிட்டால் பணத்தை வாபஸ் செய்ய உத்திரவாதம் தருகிறோம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.

PRADHAN KARYALA, P.B. 75 (PPM) AMRITSAR

இரவில் தனியாக இருக்கும்
போதுதான் பார்த்துக்
கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்



விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள் பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6. 00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

முத்: தாலி! என்ன நாடகம் இது? இதுதானா உங்க யோக்கிதை? திருட்டுத்தனமாக தாலி கட்டியிருக்கீங்களா?

சங்: என்னை மன்னிச்சுடுங்க அம்மா. நான் செய்தது தவறுதான். அந்தச் சூழ்நிலையில் எனக்கு அதைத் தவிர வேறு வழியே தெரியல்லே அம்மா. பாவம் கௌரி! நான் பட்டணத்துக்கு புறப்படும்போது தன்னை வேறு யாருக்காவது கல்யாணம் பண்ணிக்கொடுத்துடுவாங்களோன்னு பயந்து தற்கொலையே பண்ணிக்குவாப்போல இருந்தது. அதனாலேதான் அம்மா நான் அப்படிச் செய்தேன். என்னை மன்னிச்சுடுங்க அம்மா.

முத்: இதைவிட அவளைப் பாழுங்கிணத்திலே தள்ளி இருக்கலாமே? இன்னக்கி திருட்டுத்தனமா கௌரி கழுத்திலே தாலி கட்டிப்பிட்டு நாளைக்கு பகிரங்கமா ராஜத்தின் கழுத்திலே தாலி கட்டப்போறியா? பாவி!

பொன்: யார் சொன்னது? இன்னைக்கு இல்லேன்னாலும் என்னைக்காவது சங்கர் கௌரியைத் தன் கட்டியிருப்பான்! நீங்களோ, ராமையா அண்ணாவோ யார் நினைச்சாலும் அதைத் தடை செய்திருக்க முடியாது. நானே முன்னின்று கல்யாணத்தை நடத்தி வைச்சிருப்பேன். அறியாக் குழந்தைங்க! தெரியாத்தனமா தவறு செஞ்சுட்டாங்க!

சு. பி: ஆமாம் முத்தையா. ஏதோ நடந்தது நடந்து போச்சு. அதனாலே ஆத்திரப்பட்டு என்னப்பா பிரயோசனம்? இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி கவனிப்போம்!

முத்: நல்லபடியா நடந்தா சரி!

**போகிறார். அவர் கோபத்தை புத்திரிபாசம் வெல்லுகிறது.**

## காட்சி 6

## பொன்னம்மாளின் கோபம்

**சங்கர் கௌரி திருமணம் நடக்கிறது. இதையறிந்த ராமையா சுந்தரம்பிள்ளையைக் கண்டபடி ஏசுகிறார். ஆனாலும் திருமணம்**

நடக்கிறது அன்று திருமணத்தை நிறுத்த ராஜம் திட்டமிடுகிறாள். அப்போது அவள் கருவுற்றிருப்பதாகக் கூறுகிறாள்! காமாக்ஷிக்கும் ராமையாவுக்கும் இது தெரிந்ததும் அவர்கள் அவளை அடித்து நொறுக்குகிறார்கள். சங்கர்தான் அதற்குக் காரணம் என்கிறார் ராமையா. மணப்பந்தலுக்கு ராமையா தம்பதிகளை அழைக்கவரும் பொன்னம்மாள், இந்த விஷயமறிந்து சங்கரிடம் போய் எரிமலைபோல் அனல் கக்குகிறாள்.

பொன் : துரோகி! வஞ்சகனே! காமப்பிசாசே!

சங் : அம்மா!

பொன் : அந்தப் புனிதமான வார்த்தையை உன் வாயால் சொல்லாதே! தாய்க் குலத்துக்கே இழுக்குத்தேடும் பாவி! அங்கு ராஜத்தைக் கெடுத்துவிட்டு இங்கு கௌரியை மணக்கவும் துணிந்தாயே துரோகி! என் எதிரில் நிற்காதே! போ! போ!

சங் : நான் ராஜத்தை கெடுத்தேனா? ஹா! யாரம்மா சொன்னது? யாரோ நமக்கு வேண்டாதவர்கள் இந்தத் தீயை மூட்டிவிட்டிருக்கிறார்கள், தாயே! ஐயோ! ஹா! என்றால் இதை நம்ப முடியவே இல்லையம்மா! என்றால் இதை தாங்கவே முடியவில்லையம்மா!

பொன் : என்னாலும்தான் தாங்க முடியவில்லை. ராஜம் கர்ப்பவதி என்று செய்தி கேட்டபோது.

சங் : ஹூம்.

பொன் : நாட்டுக்கொரு குடும்பம் என்று வாழ்ந்த வாழ்வெல்




## 1959-60-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1959-60க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)**
JULLUNDUR CITY (Punjab)

லாம் போய் இன்று உன்னாலே தலை குனியும் காலம் வந்து விட்டதே! படித்துப் பட்டம் பெற்று வருங்காலத்தில் சரிந்த நம் குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழுவாய் என்றெல்லாம் இன்பக் கனவு கண்டோமேடா! இன்று களங்கமே உருவாக நிற்கிறாயேடா, காமப்பித்து பிடித்த கயவனே! வெட்கமாயில்லை!

***சங்கர், பொன்னம்மா காலில் விழுந்து அம்மா என்று கதறுகிறான்.***

*சங் :* அம்மா! என்னைத் திட்டுங்கள்! அடியுங்கள்! கொல்லுங்கள்! ஆனால் உங்கள் மகனால் நம் குடும்பத்திற்குத்தலைகுனிவு என்று மட்டும் உங்கள் வாயால் சொல்லாதீர்கள் அம்மா! உங்க வாயால் சொல்லாதிர்கள்! ஆதியிலே 'அம்மா' என்று இயத் தமிழ் பேசி, பள்ளியிலே 'அறஞ்செய விரும்பு' என்று 'அறத்தமிழ்' பயின்று, வாலிபத்திலே 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்' என்று 'கவித்தமிழ்' கற்று, எண்ணத்திலும் செயலிலும் கண்ணியமாக வாழ விரும்பும் என் இதயத்திலே காமத்துக்கு ஏதம்மா இடம்? அன்பே உருவான உங்களுக்கும் பண்பே உருவான தந்தைக்கும் பிறந்தவன் நான். அது ஒன்றே போதும் அம்மா நான் நல்லவன் என்று காட்ட...அம்மா. உங்கள் வயிற்றிலே பிறந்த நான் எப்படியம்மா கெட்டழிந்தவனாக இருக்க முடியும்? என்னை நம்புங்கள் அம்மா, உங்கள் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் துரோகியல்ல! வஞ்சகன் அல்ல! பழிகாரனல்ல! ம். என்னை நம்புங்கள் அம்மா! நம்புங்கள்.

*பொன் :* ம்! போ திருமணம் நடக்கட்டும்!

*சங் :* அம்மா!

*பொன் :* ஆம்! உன் தாய்தான் சொல்கிறேன். போ! திருமணம் நடக்கட்டும்!


## ரூ. 300 இனாம்



இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கை வசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கை கூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது, இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3.12 நயா பைசே. உடனே பலன் தெரியக் கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

**THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)**

JULLUNDUR CITY (Pb)

ஹ்ற... ஹ்ற... ஹி... ஹி.

**விகாரமாகச் சிரிக்கிறாள்.**

**திருமணம் முடிந்ததும் ராமையா வந்து சுந்தரம்பிள்ளையின் வீட்டை ஜப்திசெய்யவே அந்த அதிர்ச்சியில் சுந்தரம்பிள்ளை இறந்து விடுகிறார்.**

## காட்சி 7

## முத்தையா வேண்டுகிறார்

**ராமநாதன் மூலமாக உண்மை தெரிந்து வேதனைப்படுகிறாள் காமாக்ஷி. சிதம்பரத்தின் மகன் நாகப்பனுடன் சேர்ந்து சங்கர்-கௌரி திருமணத்தை அவள் நிறுத்த திட்டம் போட்டுத்தான் கருவுற்றிருப்பதாகப் பொய் சொன்னதை இப்போது ஒப்புக்கொள்ளுகிறாள். முத்தையா வந்து பொன்னம்மாள் குடும்பத்தைத் தன்னுடன் வந்து விடுமாறு அழைக்கிறார். வரமறுக்கிறாள் பொன்னம்மாள். அம்மாவிடம் சொல்லும்படி சங்கரிடம் கூறுகிறார் முத்தையா.**

சங்: உங்க குடும்பம் எப்படி ஒரு தாலிக்கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கிறதோ அதைபோல் தான் அந்தக் குடும்பமும். அதை மட்டும் எப்படி நாங்கள் மறந்து விட முடியும்? அன்புக்கயிற்றால் செய்ய முடியாததை ஒரு தாலி கயிற்றால் செய்ய முடியும் என்றால், கட்டுக்குலைந்த குடும்பங்களின் விட்டுப் போன சொந்தத்துக்காக காணாத கனவெல்லாம் கண்டு, நாளெல்லாம் பாடுபட்ட என் தந்தை இறந்திருப்பாரா? சிரித்தால் அன்பு, சினந்தால் அணைப்பு, அழுதால் ஆறுதல் என்று அன்புப் பண் பாடி இந்த நாட்டுப் பெண்களுக்கே எடுத்துக் காட்டாக வாழ்ந்த என் அன்னை இன்று மஞ்சள் இழந்து, குங்குமம் அழிந்து, வெள்ளை உடுத்தி வெறுத்துப் போய் வாழும் இந்த நிலைமை வருமா?


# இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**BHARAT PHARMACY (P. P. M.)**

**Jullundur City.**

முத் : இத்தனைக்கும் காரணமான அந்த ராமையாவை நான் சும்மா விடப்போவதில்லை! இது மட்டும் உறுதி! பொன்னம்மா! உன்னைக் கடைசியாகக் கெஞ்சிக் கேட்கிறேன்! என்னை மன்னிச்சுடு! எல்லாரும் என்கூட வந்திடுங்க.

பொன் : பேசிப்பயன் இல்லை அண்ணு! எந்த வைராக்யம், உங்கள் உள்ளத்திலிருந்து அழிந்துப் போகணுமுன்னு நாங்கள்விரும்புகிருமோ அது இன்னும் அழிந்திடலை. எந்த எண்ணத்தோடு குடிசையிலேயானுலும் ஊரைவிட்டுப் போகாம வாழ்ந்துக்கிட்டு இருக்கோமோ அந்த உங்கள் எண்ணம் நிறைவேற உங்கள் இதயத்தில் இடமில்லை! உங்கள் இரண்டு குடும்பமும் சண்டைப் போட்டுக்கிட்டு இருக்கிற வரையில் நாங்கள் உங்களோடு வாழ வழியில்லை. பேசியும் பிரயோசனமில்லை. பிரிஞ்ச மூணு குடும்பமும் ஒற்றுமையா வாழவதற்கு வழியோடு வந்துப் பேசுங்க!

முத் : அவ்வளவுதானே பொன்னம்மா?

பொன் : அவ்வளவேதான்!

முத் : சரி! நான் போயிட்டு வர்ரேன்! ஆனு நான் ஒருத்தன் உயிரோடு இருக்கிறேன் என்பதைமட்டும் மறந்துவிடாதிங்க!

*முத்தையா போகிருர்.*

## இடையே...

***லக்ஷ்மிக்கும் இசக்கிக்கும் ஏற்பட்ட சிறு தகராறை பெரிது பண்ணி, கோர்ட்டுக்குப் போகிருர்கள் ராமையாவும் முத்தையாவும். இருவரும் கடன் வாங்கிக் கடன் வாங்கி அவர்கள் குடியே மூழ்கிப் போகும் நிலை ஏற்படுகிறது. இருவரும் ரொம்பவும் சிரமப்படுகிருர்கள். சங்கர் ஜப்பான் முறை சாகுபடியினுல் பயிரை மிக வளமான நிலையில் வைத்திருக்கிருன்.***

## காட்சி 8

***கௌரி முத்தையாவை சந்திக்கிருள். சகஜமாகப் பேசுகிருர் அவர். முத்தையா உட்கார்ந்திருக்கிருர். கௌரி நின்று கொண்டிருக்கிருள்.***

முத் : ஆமா. நம்ப சங்கர் இந்த புறம்போக்கு நிலத்தை யெல்லாம் வெட்டி நல்ல விதமாக உழுது பயிர் பண்ணிட்டான்னு கேள்விப் பட்டேன்.

கௌரி : உண்மையா உழைச்சா என்னிக்கும் தோல்வி கிடையாது. நல்ல பலன் கண்டிப்பா கிடைச்சே திரும்.

முத் : கிடைக்கணும்னு தான் நானும்தான் ஆசைப்படறேன்.

***முத்தையா கௌரியின் நெக்லேஸ் பழசாகி விட்டதாகவும் அதை புதுப்பித்துந் தருவதாகவும் பொய் சொல்லி வாங்கிக்கொண்டு போய் நூறு ரூபாய்க்கு அடகு வைக்கிருர்.***

***ஆனுல் அவரறியாமல் அதை சங்கர் மீட்டுப் போட்டு விடுகிருன் கௌரியிடம் அதைக் கண்டு திடுக்கிடுகிருர் முத்தையா.***

கௌரி : இது எங்க அம்மா நகைப் பாருங்க, இது என்னை விட்டு எங்கேயும் போகாது.

முத் : கௌரி என்னம்மா சொல்றே?

கௌரி : சொல்வதற்கு என்னப்பா இருக்கிறது? மனதில்லை வாழும் அம்மா மட்டும் இன்று உயிரோடு இருந்தால் ஆயிரம் நகைகளால் என்னை அலங்கரித்து அன்போடு அணைத்து ஆனந்தப் பட்டு இருப்பாங்களே அப்பா..? நீங்களோ, பெற்ற மகளிடமே பொய் பேசி என் அன்னையின் ஒரே நினைவுச் சின்னத்தைக்கூட விற்க துணிந்து விட்டீர்களே அப்பா! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். சொத்து முழுவதையும் தொலைத்து விட்டீர்கள். சொந்தக்காரர்களை யெல்லாம் பகைத்துக்கொண்டீர்கள். முடிவிலே உங்கள் மனசாக்ஷியையும் விற்று விட்டீர்கள். முடிவிலே எதற்கப்பா உங்கள் அன்பு மகளையும் ஏமாற்ற துணிந்தீர்கள்? என்னிடம் கேட்டிருந்தால் இந் நகையை புன்னகையுடன் கொடுத்திருப்பேன் அப்பா. சமூகத்திலே பேரும் புகழுமாய் வாழ வேண்


தேவர் பிலிம்ஸ்
தாய் சொல்லைத் தட்டாதே







தேவர் பிலிம்ஸார் துரிதத் தயாரிப்புகளுக்குப் புகழ்பெற்றவர்கள். அவர்கள் தற்போது தயாரித்து வரும் ''தாய் சொல்லைத் தட்டாதே'' படமும் இந்த ரகத்தைச் சேர்ந்ததுதான். புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நூதன பாத்திரமேற்று நடித்து வரும் இந்தப் படத்தில் சரோஜா தேவி, எம். ஆர். ராதா, அசோகன், முதலியோரும் நடிக்கின்றனர். திருமுகம் டைரக்ட் செய்யும் இப்படம் தீபாவளி வெளியீடு.



மஞ்சள்
LUX
Yellow
பச்சை
LUX
Green
நீலம்
LUX
Blue
இளஞ்சிவப்பு
LUX
Pink
'வானவில்லின்
4வித
வண்ணங்களிலே
என் லக்ஸ்—
-வெண்மையிலுங் கூட!'
என்கிறார்
எம். என். ராஜம்
LTS. 82-X29 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

# வாடாத இளமையழகு
# வாராதோ விரலசைந்தால்!

மேனி யெழிலைப் பராமரிப்பதே உங்களுக்கழகு! இளமை மாருத மெருகுடன் மிளிர ஹிமாலயா புக்கே ஸ்நோ உபயோகியுங்கள். சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சியோடு தளதளப்புடன் விளங்கக் காண்பீர்கள். வெயில், புழுதிக் காற்று ஆகியவற்றிலிருந்து மேனி யெழிலைக் காப்பதோடு, முகப்பருக்களும், சுருக்கங்களும் வராமல் தடுக்கிறது ஹிமாலயா புக்கே ஸ்நோ. உங்கள் மேனி யெழிலுக்குத் தக்க பராமரிப்பு அளியுங்கள். இளமை மாருத அழகைக் கொஞ்சியழைப்பது....




## ஹிமாலயா புக்கே ஸ்நோ




HBS. 22-50 TM லண்டனிலுள்ள இராஸ்மிச் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

# நான் ரசித்த காட்சி



நல்லவன் வாழ்வான்

கைதியொருவன் கூறியபடி, குற்றவாளி என்ற பெயரோடு தூக்குமேடை ஏறுவதைவிட, குற்றவாளியைக் கண்டுபிடிக்க தப்பி விடுதல் மேல் என்ற நோக்கத்தோடு தப்பிய முத்து, மேக்-அப் மேகநாதன் என்ற நண்பனிடம் போகிருன். அங்கே அவன் தாயையும் மனைவி சந்திராவையும் நினைத்து வேதனைப் படுகிருன். நிரபராதியான தான் கொடியவனொருவனல் பழிவாங்கப்பட்டதற்காக மனம் வெதும்பித் துடிக்கிருன். உண்மையை வெளிப்படுத்த தான் எப்படியும் மறைந்து வாழ உறுதி கொள்ளுகிருன். 'நம் தலைவிதி அவ்வளவுதான்' என்ற தன்னம்பிக்கையில்லாத்தனத்தால் தண்டனையை அனுபவித்து விடாமல், உண்மையை வெளிப்படுத்த முயற்சிப்பது நல்லது கொடியவர்களின் குற்றம் அப்போதுதான் அம்பலமாகும். இதை விளக்கும் இந்தக் காட்சியில் எம். ஜி. ஆரின் நடிப்பு தரமாக இருந்தது.

பி. வரதராஜன்,
ஹைதராபாத்.

காதல் காட்சிகளில் நடிப்பவர்கள் ரொம்பவும் ஈடுபாடுகொண்டு சகஜமாக இருக்கவேண்டும். முத்துவும் சந்திராவும் அதி இயற்கையாகச் சேர்ந்து மகிழ்ந்திருக்கும் காட்சி, கனவுக் காட்சியாகச் சித்தரிக்கப்பட்டிருந்தாலும் பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கிறது. ராஜசுலோசனு, எம். ஜி. ஆர் இருவருமே ரொம்பவும் 'பிரீ'யாக நடித்திருக்கிருர்கள்.

கணேசன்,
செங்கை.

மனைவியின் மீது சந்தேகம் கொண்ட இன்ஸ்பெக்டர் மாதவன், அவளை ஏசிவிட்டு விஷமருந்தி தற்கொலை செய்துகொள்ள முற்படுகிருர். அப்போது அவரது சகோதரி, சந்திராவுடன் அங்கு வந்து, உண்மையை விளக்குகிருள். "நான்தான் படிக்காதவள். நீ படிச்சவனுச்சே. யோசித்துப் பார்க்க வேண்டாமா? ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பார்களே அது சரியாகி விட்டதே. நான் உண்மையை நிரூபிக்கத்தான் சந்திராவையும் அழைத்து வந்தேன்'' என்கிருள். மாதவன் உண்மையை உணர்ந்து, தனது அவசர முடிவுக்காக வருந்துகிருர். படித்து



"என்னைக் கண்டு இவர் ஏன் இப்படி ஆச்சரியப்படுகிருர்?'' என்று கேட்கிருள் போலும் இம்மங்கை. நித்திய கல்யாணியின் 'குபேரத்தீ'வில் ஆனந்தன்-தேவிகா.

விட்டால் மட்டும் போதாது. எதையும் சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதை விளக்கும் ரசமான காட்சி இது

எதிராஜன்,
சென்னை.

நல்லசிவம் இன்ஸ்பெக்டரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது அவனாலேயே கொல்லப்பட்ட ஊழியனை எதிரே கண்டு உளறுகிறான் தன்னால் கொல்லப்பட்ட அவனைக் கண்டு மிரண்டுவிட்ட அவன், உண்மையைக்கூறி விடுகிறான். நாம்கூட ஒருகணம் பிரமிக்கிறோம். அங்கே வேஷம் கலைந்து நிற்கிறான் மேக் - அப் மேகநாதன். உண்மையை அறிய தந்திரம் ஒரு முக்கிய ஆயுதம் என்பதையும், மாறுவேடம் பூண்டு உண்மையைக் கறக்க முடியும் என்பதையும் விளக்கும் இந்தக்காட்சி சிறப்பாக அமைந்திருந்தது.

வாமன்ராவ்,
அரக்கோணம்.

சண்பகத்தை சோரம் போனவள் என்று குற்றம் சாட்டிவிட்டு விஷமுண்டு மடிய முற்படுகிறான் இன்ஸ்பெக்டர் மாதவன். தன் சகோதரியின் பேச்சால் மனைவி மீதே சந்தேகம் கொண்டு விடுகிறான் அவன். சந்திரா அங்கே வந்து, அவன் சந்தேகத்தைப் போக்குகிறாள். அத்துடன் சந்தேகத்திற்கு அடிமையாகி விடாமல் பொறுமையுடன் பணியாற்றுமாறு வேண்டுகிறாள். சந்தேகப் பேய்க்கு ஒருவன் இடம் கொடுத்து விட்டால், அவன் இல்வாழ்க்கையிலும் கடமையிலும் தவறுகள் ஏற்பட்டு அவன் மன அமைதியைப் போக்கிவிடும் என்பதை அழகாக விளக்கும் இக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

ஏ. டி. எஸ்.,
சென்னை.

முத்துவின் தாயும் அவன் மனைவியும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, சில விஷமிகள்


## மலச்சிக்கலும் மூலவியாதியும்

மூலவியாதி அல்லது மலக்குடலின் உட்புறம் வெளிப்புறமுள்ள இரத்தக் குழாய்கள் வீங்குவதின் மூலம் ஏற்படும் இரத்தப் பெருக்கு இவை உண்டாவதற்குக் காரணம் அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கல். உபாதையின் காரணமாக மலநிவர்த்தி செய்ய மிகவும் கஷ்டமாகவும் உபத்திரவமாகவும் இருக்கிறது. மலச்சிக்கல் அதிகமாகி, வலியை உண்டாக்கும் சரும வெடிப்புகளுடன் மூல வியாதியும் அதிகமாகிறது. மூலவியாதியின் தொல்லையும் ஒழிந்தால்தான் குடலிலிருந்து அசுத்தங்களை வெளியேற்றுவது சுலபமாகும். ஹெடன்ஸா அதைத்தான் செய்கிறது. வலியையும் நமைச்சலையும் அகற்றி நிச்சயமான நிவாரணமளிக்கிறது. அதனைத் தொடர்ந்து உபயோகிப்பதால், மூலம் சுருங்கி, பரிபூரண நிவாரணம் கிடைக்கின்றது. பிரசித்திபெற்ற ஜெர்மன் மூல நிவாரணியான ஹெடன்ஸாவில் அவயவத்தை மறத்துப் போகும்படி செய்யக்கூடிய மருந்து ஒன்றும் சேரவில்லை. துணியில் கரையுண்டாக்காது. உபயோகிப்பது சுலபம். ஒவ்வொரு மருந்து பெட்டியிலும் ஒரு சிறு பிளாஸ்டிக் மூக்குக் குழாயும் அதனை உபயோகிக்கும் முறைகள் அடங்கிய குறிப்பும் உண்டு. மூலவியாதி என்றால், அதற்கு ஹெடன்ஸாதான் ஏற்ற மருந்து. இன்றே ஹெடன்ஸா உபயோகித்துப் பாருங்கள். இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

D2-952



'ஐயா' என்று அந்தச் சிறுமி கெஞ்சுவதும், மாடிப்படி ஏறும் இளைஞனின் கோபத்தையும் சம்பந்தப் படுத்த ஏதேனும் காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் கனகா மூவீஸ் 'பாக்ய லக்ஷ்மி'யில் ஜெமினி கணேசன் வரும் இக்காட்சியில் தெரிந்துவிடும்.

வந்து, சந்திராவின் வரவால்தான் அந்தக் குடும்பத்தின் அமைதி போய் விட்டதென்றும் ஆகவே அவளை வீட்டை விட்டுத் துரத்துமாறும் கூறுகின்றனர். "அவள் பத்தரை மாத்துத் தங்கம். வீணாக அவளை ஏசாதீர்கள். போங்கள் வெளியே" என்று அந்தப் பெண்களைத் துரத்துகிறாள் முத்துவின் தாய். அன்புடன் பழகியவர்களின் பண்பை யறிந்த பெரியவர்கள், வதந்திகளை உண்மை என்று ஏற்று மன நிம்மதியைக் குலைத்து விடாமல், அந்த வதந்திகளைக் கிளப்புவோரைக் கண்டிக்கவும் செய்வார்கள் என்பதை எடுத்துக்காட்டும் இந்த ரசமான காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

எஸ். பாணி,
நத்தம்.

கணவன் ஒரு கடமை வீரன். அந்த இன்ஸ்பெக்டர் மாதவனின் கடமை, குற்றம் சாட்டப்பட்டு தப்பிவிட்ட கைதி முத்துவை பிடிப்பது. ஆனால் மனைவி சண்பகம், கணவன் வார்த்தையை மீறி, சாமியார் வேடத்திலிருக்கும் முத்துவை மறைத்துவைத்து சந்திராசந்திக்க ஏற்பாடு செய்கிறாள். இதனால் கணவனே அவளை ஒழுக்கம் கெட்டவள் என்றுகூறி தற்கொலை செய்துகொள்ளப் போகிறான். சந்திரா வந்து உண்மை விளங்கியதும், மாதவன் சண்பகத்தை அழைக்கிறான். "அத்தான்! இனி உங்களுக்குத் தெரியாமல் எதுவும் செய்ய மாட்டேன்" என்று அவன் காலில் விழுகிறாள். மனைவி தன் கணவனிடம் உண்மையை மறைத்தால் அதனால் வாழ்வே பறி போகும். விபரீதமும் ஏற்பட இடமுண்டாகி விடும் என்பதை எடுத்து விளக்கி எச்சரிக்கும் ஒரு அரிய போதனைக் காட்சி இது.

சந்திரன்,
செங்கற்பட்டு.

சண்பகத்துக்கு தான் வாக்கு கொடுத்து விட்டதால் அவளை வாழ வைக்க ஆயிரத்து ஐநூறு ரூபாய் வேண்டும், என்று தாயிடம் கூறுகிறான் முத்து. அதற்கு அவன் விளக்கம் கூறுகையில், "நான்

சாதாரணமாகச் சொல்லி யிருந்தால் கூடப்பரவாயில்லை. கடவுள் பெயரால் கூறிவிட்டேன். அதில் தவறி விட்டால் அவளுக்குக் கடவுள் நம்பிக்கை போய் விடும் என்று பொருள் படக் கூறுகிறான். கடவுள் நம்பிக்கையை வலியுறுத்தும் சிறந்த நீதிக் காட்சி இது.

எம். ஆர். ஸ்ரீநிவாசன்,
தாம்பரம்.

சாமியார் முன் வந்து விழுந்து வணங்கப் போகிறாள் முத்துவின் தாய். அவள் மகன் முத்துதான் சாமியார் வேடத்திலிருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியாது. "என் மகனை நான் பார்க்க முடியுமா? ஆயிரம் முறை அம்மா அம்மா என்று ஆசையுடன் அழைப்பானே" என்றெல்லாம் கண்கலங்கக் கெஞ்சுகிறாள் அவள். முத்து மட்டும் என்ன, நாமும் கண்ணீர் சிந்துகிறோம். தாயுள்ளத்தின் தன்மையைப் பிரதிபலிக்கும் இக்காட்சியில் லக்ஷ்மிபிரபா சிறப்பாக நடித்திருக்கிறார்.

பி. ராமதுரை,
மேலையூர்.

நிரபராதியானாலும், சாட்சியங்களாலும் சந்தர்ப்ப சூழ் நிலைகளாலும் முத்து கொலைகாரன் என்று தீர்ப்பாகிறது. தப்பி விட்ட முத்து தனது நிரபராதித் தன்மையை விளக்கக் கூடிய ஒரே சாட்சியான கிழவியைத் தேடி யலைகிறான். முடிவில் இன்ஸ்பெக்டர் முன் அவள் வைக்கப்பட்டிருந்த பீப்பாயை உடைத்து அவளை வெளியே எடுக்கிறான். ஆனால் அவள் உயிரோடு இல்லை. உடனே தன் இரு கரங்களையும் நீட்டி விலங்கிடுமாறு இன்ஸ்பெக்டரை தானே வலுவில் வேண்டுகிறான். நிரபராதி என்று நிரூபிக்க முடியாவிடில் சட்டத்தை மதித்து தண்டனையை ஏற்க சரணடைவது ஒன்றே தர்மம் என்ற உண்மையை விளக்கும் இக்காட்சி சிறப்பாக இருக்கிறது. எம். ஜி. ஆர். சிறப்பாக நடித்திருக்கிறார்.

சுஜாதா,
சென்னை.

கடமையை நிறைவேற்றுவதையே உறுதியாகக் கொள்ளுபவன் தயை தாட்சண்யம் காட்டக்கூடாது என்று, மாதவனுக்கு உபதேசம் செய்யும் முத்து, கொலையாளி என்று குற்றம் சாட்டப்படும்போது, அவனைக் கைது செய்ய வருகிறான் மாதவன். அப்போது, தான் நிரபராதி என்று வாதாடுகிறான் முத்து. அவன் போதித்ததையே எடுத்துக்கூறி அவனைக் கைது செய்கிறான் மாதவன். சட்டத்தின் காப்பாளனுக்கும் இன்ஸ்பெக்டரின் கடமையை எடுத்துக்கூறும் இந்த நீதிக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன். நம்பியார் நன்கு நடித்திருக்கிறார்.

வாத்தியார் வேதாசலம்,
மதுரை.


## வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1.4.0.

**வாணி தமிழ்-இந்தி ஆசான்:** தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-14-0

**ஐசுவரியம்** (குடிசைக் கைத்தொழில்) சோப், இங்கி, ஊதுவத்தி, வாசனைத் தைலம், ஸ்னோ, பேஸ்பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. ரூ. 4. வி.பி. செலவு அ. 14

**வாணி புக் டிப்போ. (P. B. 239). 3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.**

எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனையோ! ராணி பிக்சர்ஸ் 'கண்ணாடி மாளிகை'யில் ஏ.கே.மோகன்.



ஓட்டுக்கேட்க வந்த இடத்திலே நல்லசிவமும் முத்துவும் பேசுகிறார்கள். "ரோடு போட்டது யார்?" என்று அலட்சியமாகக் கேட்கிறான் நல்லசிவம். உடனே முத்து ஒரு உழைப்பாளியின் கையை இழுத்துக் காட்டி, "இந்தக் கைதான்" என்கிறான். "இவனா? இந்தக்கை சாயந்திரமானா கூலி வாங்கும். சும்மாவா போட்டான்?" என்கிறான் நல்லசிவம். "கூலி கொடுக்கும் பணம் எங்கிருந்து வருகிறது? இவர் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்து வருகிறது" என்கிறான் முத்து. "இவன் என்ன லட்சரூபா வரி கட்றானா?" என்கிறான் நல்லசிவம், மமதையுடன். சில செல்வந்தர்களின் மனோபாவத்தைப் படம் பிடித்துக் காட்டும் இக்காட்சியில் எம். ஆர். ராதா தரமாக நடித்திருக்கிறார்.

சம்பத் ரங்காச்சாரி,
ராணிப்பேட்டை.

நல்லசிவத்தால் கொல்லப்பட்டவனின் தாய், மகனின் சடலத்தைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டே, "என் மகனைக் கொன்னுட்டியேடா பாவி" என்று திட்டும்போது, "ஹூம் அவன் இருந்தா என்ன சம்பாதிச்சுடுவான்? நூறோ அம்பதோ வாங்கிகிட்டு நிம்மதியா இரு" என்கிறான் நல்லசிவம். தான் வாழ்வதற்காக எந்தக் கொடுமையையும் செய்ய தயங்காத கொடுமையாளரின் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டும் இக்காட்சியில் நடிகவேள் அருமையாக நடித்திருக்கிறார்.

எஸ். ஆறுமுகம்,
திருச்சி.

"மண்ணிலே பொன் கிடைக்கும்" என்ற பாடல் காட்சியை நான் வெகுவாக ரசித்தேன். ராஜசுலோசனாவின் தோற்றமும் காட்சியமைப்பும் நன்றாக இருக்கின்றன. கருத்துமிக்க இந்தப் பாடலில் "எண்ணத்திலே தாழ்ந்துவிட்ட மனிதர்களால் - இந்த உலகத்திலே

பிறருக்கென்ன சுகம் கிடைக்கும்?'' என்றவரிகள் உள்ளத்தைத் தொடுகின்றன. அருமையான பாடல் கொண்ட இந்தக்காட்சி மனதிலே நிழலாடிக் கொண்டே இருக்கிறது.

கவிதாசன்.
சென்னை.

## தாயில்லாப் பிள்ளை

பதஞ்சலி சாஸ்திரியின் உண்மை மகன் சோமு என்பது தெரிந்ததும், அவனிடம் ஓடி வருகிறான் சங்கர். உண்மையைச் சொல்லி விடப் போகிறேன் என்று துடிக்கும் சங்கரை, கன்னத்தில் அறைந்து கீழே தள்ளி விடுகிறான். பின்னர் பாசம் மேலிட சங்கர் என்று அப்படியே கட்டிக் கொள்ளுகிறான். அருமையான காட்சி.

வி. நாராயணன்,
தஞ்சாவூர்.

பதஞ்சலியின் உண்மையான மகன் தான் என்பது தெரிந்ததும், சோமு மாபெரும் தியாகம் செய்ய நினைக்கிறான். ''சங்கர் பணக்காரப் பிள்ளையாகவே வளர்ந்து விட்டான். அவனை இப்போது உண்மையைச் சொல்லி ஏமாற்றி, மனமொடியச் செய்ய வேண்டாம். உண்மை நம்முடனேயே இறந்து விடட்டும்'' என்று சொல்கிறான். சோமுவின் பாத்திரத் தன்மையை பல மடங்கு உயர்த்தி விட்டது இக்காட்சி.

சிவசங்கரன்,
வேலூர்.

சங்கர் கல்லூரிக்குப் புறப்படும் நேரம், சோமு வருகிறான். இருவரும் நேரே அன்னையிடம் சென்று, ''அம்மா உங்களுக்கு எந்த மகன் மிகவும் பிடிக்கும்?'' என்ற தர்மசங்கடமான கேள்வியைக் கேட்கிறார்கள். சில நிமிஷங்கள் தடுமாறி நின்றாலும், ''இதென்னடா கேள்வி? எனக்கு இரண்டு பேரும் இரண்டு கண்கள்!'' என்று சொல்லி சமாளித்து விடுகிறாள். நான் சுவைத்தேன் இக்காட்சியை.

வி. வி. ராஜாமணி,
நெல்லை.

சங்கருக்கு படிப்புச் சொல்லித் தர ஏற்பாடுகள் நடக்கின்றன. பதஞ்சலி சாஸ்திரி சங்கருக்கு எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்கும்போது, வெளிக் கதவின் ஓரமிருந்து சோமு பார்ப்பதும், சோமுவைப் பார்த்து அவனது தாயார் மனம் புழுங்குவதும் மறக்க முடியாத காட்சிகள். என் கண்களில் நீரை இவை தேக்கி விட்டன.

ஸ்ரீதரன்,
சென்னை.




ஐடெக்ஸ்
கண் மை

சிறு குழந்தைகளுக்கும் சிறந்தது

அரவிந்த் பிந்தி குங்கும சாந்து

ஆறு கலர்களில் எங்கும் கிடைக்கும்.




சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்பட்டவை!

அரவிந்த் லாபரட்டரீஸ், P. B. 1415, மதராஸ்-33




'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிறார் பம்பாய் வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல்லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிகள் எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந் தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னா எனக்கு வேண்டியது ஸன்லைட் தான்!'

துணிகளைக் காப்பதற்குத் தூய, மென்மை வாய்ந்த ஸன்லைட்டைப் போல வேறொன்றில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிவு. அதுவே உங்களுக்கும் இனிது.

# ஸன்லைட்




ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

S. 30-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

# வெட்டுங்கள்! வெட்டுங்கள்!!

நல்லவன் வாழ்வான்

முத்து சந்திராவுடன் மகிழ்ந்திருப்பதுபோல் கனவு காண்கிறான். கனவுக் காட்சி என்பதால் சற்று தாராளமாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள். முத்துவும் சந்திராவும் குலவுவது மணமானவர்கள் மகிழ்வது போலில்லை! மாறாக கிடைத்தவரை லாபம் என்பது போலிருக்கிறது காட்சி அமைப்பு. எதற்காக சந்திராவை முத்து நீர் வீழ்ச்சியில் நனைத்து நீரில் தள்ள வேண்டும்? காதலின் சிறப்பைக் குறைத்து மதிப்பிடும் இக்காட்சியை வெட்டிவிட வேண்டும். வேறுமொழிப் படத்தின் காட்சிகளைக்கூட விடமாட்டேன் என்கிறார்களே, நம் தயாரிப்பாளர்கள்!

பி. எஸ். ரங்கநாதன்.
சென்னை.

முத்து ஜீப்பில் கொண்டு செல்லப் படும்போது சந்திரா சோகத்துடன் பாடுகிறாள். படத்தின் வேகத்தைத் தடை செய்யும் இப்பாட்டை வெட்டி விட்டால் மிகவும் நல்லது. செய்வார்களா?

பி. எஸ். கே.,
சென்னை.

''நன்றாக முதுகை சோப்பு போட்டு தேய்'' என்று, முத்துவின் நண்பனிடம் கூறிவிட்டுப் போகிறாள் முத்துவின் தாய். படத்தில் முத்துவுக்கு அவன் நண்பன் சோப்பு போடவில்லை! ஆகவே தாயார் பேசும் ''சோப்பு வசன''த்தை வெட்டிவிட வேண்டும். பொருத்தமில்லாமல் இருக்கலாமா?

கே. கனகு,
மதுரை.

முத்துவைக் குளிப்பாட்டுகிறாள், ஆண் வேடத்திலிருக்கும் சந்திரா. அது கலைதப்படி அவர்கள் நெருங்கிப பழகும் முதல் சந்திப்பு. அதிலேயே அவள் அளவுக்கு அதிகமாகத் தொட்டுப் பேசி நடிக்கிறாள். அவன் தாயார் இருந்தால், 'அப்படி நடிக்கிறார்கள்' என்று சொல்லலாம். தனித்திருக்கும் போது, அவன் ஆபத்திலிருந்து காப்பாற்றினான் என்ற காரணத்தைக் காட்டி சந்திரா அளவுக்கதிகமாக் விளையாடுவது பெண்மையின் பண்பைக் குறைத்து மதிப்பிடுகிறது. இந்தக் காட்சி படத்திற்கு எவ்விதத்திலும் அவசியமில்லாதது. வெட்டி விடுவதால் நஷ்டமெதுவும் ஏற்பட்டு விடாது.

சேகர்,
சென்னை.

முத்து தப்பி விட்டான் என்று அறிந்ததும் சந்திரா மகிழ்ச்சியால் ஆடிப்பாடுகிறாள். ''அத்தான்! என்று அழைத்திடுவேன்'' என்ற அடி வருகிறது. இது வேறொரு படத்தின் பாடலைக் காப்பி யடிப்பது போலிருக்கிறது. அத்து·ன் இதனால் படத்தின் விறுவிறுப்பு தடைப்படுகிறது. இதை வெட்டி விடுவார்களா?

வி. வி. ராமசாமி,
கோவை.



பத்மினி ஆடும் இந்த நடனத்தைத் பாரத் புரொடக்ஷன்ஸ் 'விக்ரமாதித்தன்' படத்தில் பார்க்கலாம்.



# பியர்ஸ் டால்கம்

## —அழகோடு பழகும் உறவு!




கொண்டாடுங்கள் பியர்ஸ் நறுமணத்தை. புத்தம் புது மணம் அது. புதுமை கொண்டாடும் நறுமணம்! நெஞ்சுக்கு இன்பநினைவே போல் கொஞ்சிப் பிரியாத வாசம்...உங்கள் நேசம் எவர்க்கும் உல்லாசம்! எந்நேரமும் புதுமை குன்ருத எழிலுக்கான டால்கம்: பியர்ஸ்! உங்கள் வனப்புக்குப் பாதுகாப்பான தூய, மென்குண கிளிசரின் சோப்பாகிய பியர்ஸ் சோப்பின் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படும் டால்கம்.

**பியர்ஸ்**—அழகுள்ள மாதர் வழிவழியாக ஆண்டுவரும் அழகு சாதன செல்வம்!

2 சைஸ்களிலே வருகிறது:
பெரிய சைஸ், எகானமி சைஸ்.

தாயில்லாப் பிள்ளை

கங்குவின் கணவன், "உச்சிக் குடுமியைப் பார்த்து கோட்ளடாண்டுன்னுவான். பஞ்சகச்சத்தைப் பார்த்ததும், பரத நாட்டிய அரங்கேற்றம் எப்போன்னு கேட்பான்" என்று சொல்லும் வசனங்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பைக் கேலி செய்வதாக உள்ளன. புண்படுத்தும்படியான இந்த வசனத்தை வெட்டி விடலாம்.

பிரேமா,
சென்னை.

கல்லூரி நாடகம் நடக்கிறது. உச்சிக்குடுமி போன்ற சொற்கள் இதன் பாட்டில் அடிபடுகின்றன. இதை நான் அவ்வளவாக ரசிக்கவில்லை. குறிப்பிட்ட வகுப்பினரைத் தாக்குவதாக உள்ள இந்த வசனத்தில், ஏற்கனவே அம்மாதிரி வரும் மாணவர்களை கல்லூரி மாணவர்கள் கிண்டல் செய்வது, மேலும் அதிகரிக்கத் தூண்டுவதாகவே முடியும். இம்மாதிரியான விஷமப் பிரசாரம் செய்யும் காட்சி பிரசாத்தின் படத்தில் எப்படி வந்ததோ? ஏன் வந்ததோ?

சிகாமணி,
தாம்பரம்.

பதஞ்சலி சாஸ்திரியார் தேர்தல் மேடையில் பிரசங்கம் செய்கிறார், அதே மேடையில் அவருக்கு முன்னால் பாரதியும் பிரசாரம் செய்வதாகக் காட்டி யிருப்பது இயற்கைக்குப் புறம்பானது. இதை வெட்டிவிட்டு, வேறு மேடையில் பாரதி பதஞ்சலியைத் தாக்குவதாகக் காட்டி, அதன் மூலம் விரோதம் வளருவதாகச் சித்தரித்திருக்கலாம்.

நரசிம்மன்,
காஞ்சீபுரம்.

இது ஜலக்காதல்தான் போலும் ராமன் புரொடக்ஷன்ஸார் தயாரித்திருக்கும் "கொஞ்சும் சலங்கை" முழுநீள டெக்னி கலர்ப் படத்தில் ஜெமினி கணேசன் - கமலா.




நீலா புரடக்ஷன்ஸ்
யார் மணமகன்?
காட்சிகள்



திருவனந்தபுரம் நீலா புரொடக்ஷன்ஸார் மெர்ரிலாண்ட் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் "யார் மணமகன்?" தமிழ்ப் படம் மிக விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

பழம் பெரும் வசன கர்த்தா இளங்கோவன் வசனம் எழுதி யிருக்கும் இப் படத்தில் குமாரி, டி. கே. பாலசந்திரன், கே. வி. சாந்தி, வி. கே. ராமசாமி, டி. ஆர். நடராஜன், எஸ். டி. சுப்புலக்ஷ்மி,











டி. பாலசுப்பிரமணியம், 'திலகம்' ராஜகுமாரி, சதன், 'சி. கே. சரஸ்வதி. சி. எஸ். பாண்டியன் முதலியோர் நடித்து வருகிறார்கள்.

பிரதர் லக்ஷ்மணன் இசை யமைக்கும் இப்படத்தை, தயாரிப்பாளர் பி. சுப்பிரமணியமே டைரக்ட் செய்து வருகிறார்.

# பேசும்படம் போட்டோ ஆல்பம்



இவளைப் பார்த்தால் கள்ளங் கபடமற்ற வெள்ளை யுள்ளம் படைத்தவள் போலிருக்கிறதல்லவா? ஆமாம், இவள் நல்லவள்தான்; நயவஞ்சகனை நம்பி ஏமாந்தவள்தான். சித்ராலயா அளிக்கும் ஸ்ரீதரின் "தேன் நிலவு" படத்தில் வசந்தி.



பெரிய நாயன வித்வானைப் போல் தோற்ற மளிக்கும் இவர் நாயனத்தை எவ்வளவு, லாகவமாகப் பிடித்திருக்கிறார்! ராமன் புரொடக்ஷன்ஸாரின் "கொஞ்சும் சலங்கை" முழு நீள டெக்னி கலர்ப் படத்தில் ஜெமினி கணேசன்.



அந்த நாதஸ்வர இசையில் மயங்கி விட்ட பாவையோ இவள்! கலையிலுள்ள ஆசைதானே கலைஞனிடம் ஆசை கொள்ளுவதில் நிற்கிறது! சுதர்சனம் பிக்சர்ஸாரின் ''ஹல்லோ, மிஸ்டர் ஜமீன்தார்'' படத்தில் அழகி சாவித்திரி.



குடிதானே குடும்பத்தைக் கெடுக்கிறது! வேதனையை மறக்கச் சிலர் குடிக்க ஆரம்பித்து குடியைக் கெடுத்து வேதனைப் படுகிறார்கள். இவர் அந்த ரகம் போலும். நீலா புரொடக்ஷன்ஸ் "யார் மணமகன்?" படத்தில் டி. கே. பாலசந்திரன்.



இவர் தென்புடனிருக்கிறார். இவரது குறும்புப் பார்வைக்குக் காரணம் இவர் எதிரே உள்ள ஆரணங்காக இருக்குமா? ஐரிஸ் மூவீஸார் தயாரித்து வரும் தீபாவளி வெளியீடான ''பங்காளிகள்'' தமிழ்ப் படத்தில் ஜெமினி கணேசன்.



டைப் அடிக்க உட்கார்ந்தவள், காதலன் நினைவு வரவே அப்படியே நிறுத்திவிட்டு எழுந்து விட்டாள் போலும்! விஜயா ஆர்ட் பிலிம்ஸார் விரைவில் திரையிட விருக்கும் "பிறந்த நாள்" தமிழ்ப் படத்தில் எம். என். ராஜம்தான் கதாநாயகி.



இவள் ஒரு நர்ஸ் அல்ல. கடமையை நிறைவேற்ற இந்த வேடமணிந்திருக்கிருள். அதற்காக உயிர்விடவும் தயாராக உள்ள தியாகி இந்த அழகி. ஐரிஸ் மூவீஸ் தயாரிப்பான ''பங்காளிகள்'' தமிழ்ப் படத்தில் இ. வி. சரோஜா



"அப்பா! எப்படியோ நம் முயற்சி வென்றது" என்று மகிழுகிறாள் இவள். அது கடமையா காதலா? விஜயா ஆர்ட் பிலிம்ஸார் தயாரிக்கும் "பிறந்த நாள்" தமிழ்ப் படத்தில் தேவிகா ஒரு தியாகப் பெண்ணின் பாகத்தில் நடிக்கிறார்.

# கலையும் கட்சியும்

கலை. அழகையும் இன்பத்தையும் அள்ளிக் கொண்டு வரும் ஆரோக்கியத் தென்றலாகும். அது உலக வாழ்வை அணி செய்கிறது; உள்ளத்திற்கு உவகை ஊட்டுகிறது; துயரத்தை மறக்கச் செய்றது; துன்ப மயமான வாழ்க்கைக்கு இன்ப மெருகிட்டு வாழ்க்கை வாழ்வதற்குத் தான் என்ற நம்பிக்கையை நமக்குத் தருகிறது.

இத்தகைய மென்மையான கலை, அரசியலிலே சிக்கித் தவித்தால் அதன் இனிமை பாதிக்கப்படுகிறது. எளிமை குறைந்து விடுகிறது. தூய்மை சந்தேகிக்கப் படுகிறது. உலகை ஒன்றாகப் பார்க்கும் சமரச இயக்கம் கலை— உலகைப் பகுத்துப் பார்க்கும் தர்க்க இயக்கம் கட்சி அரசியல்— அதில் கலை சம்பந்தப்படக்கூடாது.

ஆம், அழகான குத்துவிளக்கு அலை கடலில் ''லைட் ஹவுஸ்'' ஆக முடியாது. அருமையான வைரக் கற்களினால் அணைகளைக் கட்ட முடியாது. பொன் வாள் போரிட உதவாது. அதுபோல் கலைஞனும் தன்னை ஒரு அரசியல்வாதி என்று சொல்லிக்கொள்ள முடியாது; கூடாது.

காரணம்? கலைமென்மையானது; அரசியல் வன்மையானது. கலை வளர்க்க, உருகும் இதயம் வேண்டும்! அரசியல் வளர இறுகிய இரும்பிதயம் தேவை! இரு வேறு முரண்பட்ட மன நிலைகளால் வளர வேண்டிய இரு பெரும் துறைகள் இவை! ஆகவேதான் சொல்லுகிறேன், கலைஞன் அரசியல் கட்சிக் காரனாக முடியாது. அவன் கட்சியின் விருந்தாளியாக இருக்க முடியுமே தவிர, வீட்டுக்காரனாக முடியாது. பார்வையாளனாக வரலாமே தவிர, பங்காளியாக முடியாது. அனுதாபியாகஇருக்கலாமேதவிர, அவைத்தலைவனாக ஆசைப்படக் கூடாது. இந்தக் கசப்பான உண்மையை கலைநலம் கருதி, சொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டதால் துணிந்து கூறுகிறேன்.

கலைஞன் நாட்டு நடப்பின் சாட்சிப் பொருளாக இருந்து தனக்குரிய கடமையைச் செய்ய வேண்டிய ஒரு பொது மனிதன். நீதி மன்றத்தில் சாட்சி சொல்லப் போனவன் கட்சிக் காரனாவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. அதே போல் தான், கலைஞன் கட்சிக்காரனாவதை சமுதாயம் ரசிப்பதில்லை. நல்லவர்கள் விரும்புவதில்லை. கலைஞன் ஒரு சுதந்திர மனிதன். இயற்கையிலேயே கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கத் தெரியாதவன். ஆகவே அவன் எப்படி கட்டுத் திட்ட முள்ள ஒரு கட்சிக்கு உண்மையானவனாக நடந்து கொள்ள முடியும்?

கலைஞன் உளமகிழ்வை ஆக்கப் பிறந்த பொது ஆள்—எவர்க்கும் பணியாளாக மாறக்கூடாது. அப்படி மாறினால் அவனுடைய சிந்தனை ஊற்று தேங்கிவிடும்; சிருஷ்டித் தொழில் தடைப்பட்டு விடும். கலைஞன் விட்ட இடத்தை மற்றவர்கள் நிரப்புவது கடினமான காரியம். காரணம், மற்ற மற்ற சக்திகளை மனிதன் பயிற்சியாலும் பழக்கத்தாலும் பெறமுடியும். கலை ஆற்றலைப்பெற மனிதனுக்குப் பிறப்பிலேயே சில சில இயல்புகள் அமைய வேண்டும். அத்தகைய பிறவிச் செல்வத்தை வளர்த்து உலகுக்குப் பயன்படுத்துவதை விட்டு, அரசியலில் இறங்கி அறிவைக் குழப்பிக் கொள்வதால் எல்லோருக்குமே நஷ்டம். இதைச் சம்பந்தப்பட்டவர்

**சிவாஜி கணேசன்**

கள் உணர வேண்டும்.

விடுதலை விண்ணிலே சுதந்திரமாகப் பறக்கும் ஒரு வானம்பாடி, தான் காணும் அழகு வண்ணங்களை எல்லாம் மொழியற்ற தன் மென் குரலால் பாடிப் பாடி இன்பமடைகிறது. கேட்பவருக்கும் இனிமை ஊட்டுகிறது. அந்த வானம் பாடியை ஒரு தன்னல மனிதன் பிடித்து வந்து பொன் கூண்டிலே அடைத்து, ' நீ முகாரி ராகம்தான் பாடவேண்டும். அதுவும் என் காதில் மட்டும்தான் விழவேண்டும்' என்று கட்டாயப்படுத்தினால் பாவம் - பறவை என்ன செய்யும்? பயத்தால் அலறித் துடிக்குமே தவிர, வாய் திறந்து பாடுமா?

கலைஞன் பொது நலம் விரும்பும் டாக்டர்களைப் போல் இருக்க வேண்டும். சமுதாயத்தை வருத்த படை எடுக்கும் மனநோயைக் குறைத்து, மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் மன மருத்துவர்களாக வாழவேண்டும். அவர்கள் அரசியலில் - கட்சியில் - நேரடிப் பங்கு கொள்வது நல்லதல்ல. அப்படிப் பங்குகொண்டால், அது மகா மேதையான ஒரு டாக்டர் சிக்கல் மிகுந்த ஒரு கிரிமினல் வழக்கில் எதிர்தரப்பு வக்கீல் ஆக முயற்சிப்பதைப் போலத்தான் முடியும்.

அதற்காக கலைஞன் ஒரு துறவியைப் போல் நாட்டு நடப்பையெல்லாம் மறந்து காட்டுக்கு ஓடிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

நல்லது எங்கிருந்து வந்தாலும் உள்ளதை எந்தக் கட்சி சொன்
லும், நல்லதை நல்லதென் துணிந்து சொல்லலாம். ஏனெ
கலைஞன் எப்பொழுதும் உண்ல
குத் தலை வணங்குபவன்.
மைக்கு நல்வரவு கூறுபவன்.
ஞன் நேரடியாக அரசியலில்
படுவதால் கலைக்கு மட்டுமல்
அரசியல் துறைக்கும் ஆப
ஏற்படுகிறது. நம்மையுமறியா


இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P.P.)

Jullundur City.


87693 600 008.